# 3

# பொருளாதார மற்றும் சமூக உட்கட்டமைப்பு

## 3.1 பொதுநோக்கு

*குறிப்பிடத்தக்க சமூகப்பொருளாதார பாதிப்புக்களை ஏற்படுத்தி, மின்சக்தி மற்றும் வலுச்சக்தி மற்றும் மானிட நெருக்கடிகளுக்கு வழிவகுத்த கடுமையான சென்மதி நிலுவை மற்றும் நாட்டிற்கான படுகடன் நெருக்கடிகளுக்கு மத்தியில், பொருளாதார மற்றும் சமூக உட்கட்டமைப்புப் பணிகளின் வழங்கலானது 2022 காலப்பகுதியில் முன்னெப்பொழுதுமில்லாத சவால்களை எதிர்கொண்டது. அரசிற்குச் சொந்தமான பல்வேறு வியாபாரத் தொழில்முயற்சிகளில் செலவைப் பிரதிபலிக்கக்கூடிய விலையிடலின் அறிமுகம் உள்ளடங்கலாக, நிரம்பல் மற்றும் கேள்வி ஆகிய இரண்டிலுமான முகாமைத்துவ உபாயங்களின் நடைமுறைப்படுத்தலுடன் 2022இன் பிற்பகுதியில் பொருளாதாரப் பணிகளின் வழங்கலில் சில மேம்பாடுகள் பதிவுசெய்யப்பட்டன. இருப்பினும், பொருளாதார மற்றும் சமூக உட்கட்டமைப்புப் பணிகளைப் பொருளாதார சவால்களுக்கு மத்தியில் வழங்குவதிலுள்ள உயர்வடைந்தளவிலான பாதிக்கப்படக்கூடிய தன்மைகள் பொதுத்துறையில் நீண்டகாலமாக நிலுவையிலுள்ள கட்டமைப்புசார் மறுசீரமைப்புக்களின் துரித நடைமுறைப்படுத்தலிற்கான தேவையினை எடுத்துக்காட்டின. குறிப்பிடத்தக்க மின்வெட்டுக்கள் மற்றும் எரிபொருள் பற்றாக்குறைகள், குறிப்பாக 2022இன் நடுப்பகுதியில், சமூகப் பொருளாதார நடவடிக்கைகளில் முன்னெப்பொழுதுமில்லாத இடையூறுகளை ஏற்படுத்தி 2022 காலப்பகுதியில் ஒட்டுமொத்த பொருளாதார நடவடிக்கைகளில் பாரியளவிலான பின்னடைவொன்றினைத் தோற்றுவித்தன. இருப்பினும், நீர்மின் உருவாக்கத்தின் அதிகரித்தளவிலான பங்களிப்பு, மற்றும் எரிபொருள் நிரம்பலிற்கான கியுஆர் (QR) குறியீட்டு முறைமையின் அறிமுகம், சமையல் எரிவாயு இறக்குமதிக்கான வெளிநாட்டு நிதியியல் உதவியினைப் பெறுதல், காலதாமதமாக மேற்கொள்ளப்பட்ட விலைச் சீராக்கங்களின் பின்னரான எரிபொருள் உற்பத்திகள் மற்றும் மின்சாரத்தின் செலவைப் பிரதிபலிக்கக்கூடிய விலைத் திருத்தங்களின் அமுல்படுத்துகை ஆகியன உள்ளடங்கலாக நிரம்பல் மற்றும் கேள்வி சமமின்மைகளைத் தீர்க்கும் பொருட்டு அறிமுகப்படுத்தப்பட்ட வழிமுறைகள் என்பவற்றிற்கு மத்தியில் ஆண்டின் இரண்டாம் அரையாண்டுக் காலப்பகுதியில் வலு நெருக்கடியின் தீவிரத்தன்மை மெதுவடைந்தது. இதற்கமைய, பெற்றோலிய உற்பத்திகளின் உள்நாட்டுச் சில்லறை விலைகள் 2022இல் பல்வேறு சுற்றுக்களாகத் திருத்தப்பட்டதுடன், இது ஏனைய காரணிகளுக்கு மத்தியில் 2022 மேயிலிருந்து உலகளாவிய வலு விலைகளின் அசைவுகளைப் பிரதிபலிக்கும் விலையிடல் சூத்திரமொன்றின் அடிப்படையிலமைந்திருந்தது. எட்டு வருட கால இடைவெளிக்குப் பிறகு 2022 ஓகத்தில் மின்சாரத் தீர்வைகள் மேல்நோக்கித் திருத்தப்பட்டதுடன் 2023இலிருந்து அரையாண்டுத் தீர்வை திருத்தப் பொறிமுறையொன்றின் நிறுவலுடன் இசைந்து செல்லும் விதத்தில் 2023 பெப்புருவரியில் மீண்டும் திருத்தப்பட்டது. 2022 செத்தெம்பரில் நீர்த் தீர்வைகளும் மேல்நோக்கிச் சீராக்கப்பட்டன. 2022 காலப்பகுதியில் ஒட்டுமொத்த விலை மட்டங்களில் குறிப்பிடத்தக்க அதிகரிப்புடன் இணைந்து இவ்விலைத் திருத்தங்கள், பொருளாதார ரீதியாக பாதிக்கப்படக்கூடிய குடியிருப்புக்களுக்கு குறிப்பிடத்தக்க அழுத்தமொன்றினை ஏற்படுத்தியதுடன் அதன்மூலம் வறுமை மட்டங்களை மோசமடையச்செய்தன.*

*உட்கட்டமைப்பு வசதிகள் மீது முதலீட்டுச் செலவுகளை செய்வதற்கான அரசாங்கத்தின் வரவு செலவுத்திட்ட இடைவெளி 2022 ஆண்டு காலப்பகுதியில் தொடர்ந்தும் கடுமையாக மட்டுப்படுத்தப்பட்டதாக காணப்பட்டது. சென்மதி நிலுவை அழுத்தங்களுக்கு மத்தியில் இறக்குமதி செய்யப்பட்ட மூலப்பொருட்களின் கிடைப்பனவிற்கு ஏற்பட்ட இடையூறுகள் உட்கட்டமைப்பு அபிவிருத்தியுடன் தொடர்புடைய நிர்மாண நடவடிக்கைகளைப் பாதித்தன. கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றினைக் கட்டுப்படுத்துவதில் நாடு பாராட்டத்தக்க முன்னேற்றத்தினை எய்தியுள்ளது. இருப்பினும், கொள்வனவு தாமதங்களுக்கு மத்தியில் மருந்தாக்கல் மற்றும் ஏனைய மருத்துவ*

*நிரம்பல்களில் ஏற்பட்ட பற்றாக்குறையினால் சுகாதாரத் துறை பாதிக்கப்பட்ட அதேவேளையில் மருந்தாக்கல்களின் பற்றாக்குறையின் தீவிரத்தன்மையினை ஓரளவு குறைக்க வெளிநாட்டு நிதியியல் உதவி துணைபுரிந்தது. 2022இன் இரண்டாம் அரையாண்டுப் பகுதியில் கல்வி முறைமையில் வலு நெருக்கடி மற்றும் கொவிட்-19 காரணமாக ஏற்பட்ட இடையூறுகள் பாரியளவில் தணிக்கப்பட்டமையினால் கல்விசார் நடவடிக்கைகள் மீளெழுச்சியடைந்தன. இருப்பினும், கடந்த சில ஆண்டுகளாக கல்விசார் நடவடிக்கைகளில் ஏற்பட்ட இடைக்கிடையிலான இடையூறுகளினால் கற்றல்சார் இழப்புகளின் தாக்கம் தொடர்ந்தும் நீடித்த அதேவேளையில் பின்தங்கிய பின்னணியிலிருந்தான பிள்ளைகளிடையே கல்விசார் பெறுபேறுகளில் சமமின்மைகளை விரிவுபடுத்தியமையானது கல்விசார் முறைமையில் முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கான ஒருங்கிணைந்த முயற்சிகளுக்கான தேவையினை எடுத்துக்காட்டியது. பொருளாதார இடையூறுகளினாலும் பொருளாதார நடவடிக்கையில் ஏற்பட்ட மெதுவடைதலினாலும் பாதிப்பிற்குள்ளாகி அதிகரித்துவருகின்ற வறுமைக் குடித்தொகையின் காரணமாக வறுமை ஒழிப்பில் காணப்பட்ட முன்னேற்றம் தடைப்பட்டது. பொருளாதார நெருக்கடியின் பரந்தளவிலான விளைவுகளையும் குடித்தொகையின் பின்தங்கிய பிரிவுகளின் வாழ்க்கை நிலைமைகளையும் கருத்திற்கொண்டு, சமூக பாதுகாப்பு வலையமைப்புச் செயற்றிட்டங்களின் கீழ் நிவாரணம் வழங்குவதற்குப் பல்வேறு முயற்சிகள் முன்னெடுக்கப்பட்ட வேளையில், அத்தகைய திட்டங்களின் வினைத்திறனை மேம்படுத்துவதற்கும் பயனாளிகளின் இலக்கிடலை நெறிப்படுத்துவதற்கும் பல்வேறு வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன. சுதந்திரத்திற்குப் பின்னரான இலங்கையில் ஏற்பட்ட மோசமான பொருளாதார நெருக்கடியின் விடாப்பிடியான சமூக பொருளாதார விளைவுகள் நடுத்தர காலத்தில் பௌதீக மற்றும் மனித மூலதனம் ஆகிய இரண்டினதும் வளப்படுத்தலினூடாக தாங்கியிருக்கின்ற தன்மையினை மேம்படுத்தும் பொருட்டு நீடித்துநிலைத்திருக்கின்ற மற்றும் ஒப்புறவுமிக்க முறையொன்றில் பொருளாதாரத்திலுள்ள பாதிப்படையக்கூடிய தன்மைகளைத் தீர்ப்பதற்கான ஒருங்கிணைந்த முயற்சிகளுக்கான அவசியத்தினை எடுத்துக்காட்டியது.*


3

## 3.2 பொருளாதார உட்கட்டமைப்புக் கொள்கைகள், நிறுவனசார் கட்டமைப்பு மற்றும் செயலாற்றம்

### பெற்றோலியம்

**2022இல் நாட்டில் காணப்பட்ட முன்னெப்பொழுதுமில்லாத வெளிநாட்டுச் செலாவணித் திரவத்தன்மைக்கு மத்தியில் எரிபொருளுக்கான உள்நாட்டுக் கேள்வியனைப் பூர்த்தி செய்வதில் அரசாங்கம் கடுமையான மட்டுப்பாடுகளை எதிர்கொண்டது.** ஆண்டு காலப்பகுதியில், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் எரிபொருள் கொள்வனவு நடைமுறையானது உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் காணப்பட்ட குறைந்தளவிலான திரவத்தன்மையுடன் இணைந்து அதன் மோசமடைந்த நிதியியல் நிலைமை காரணமாக கடுமையாகச் சவாலுக்குட்பட்டதுடன் அதன்மூலம் நாட்டில் எரிபொருள் நெருக்கடியொன்றினைத் தோற்றுவித்தமையானது கடுமையான சமூக அமைதியின்மையொன்றிற்கு வழிவகுத்தது. ஒழுங்குமுறையற்ற எரிபொருள் விநியோகம் மற்றும் எரிபொருள் கிடைப்பனவின் நிச்சயமற்ற தன்மையால் தூண்டப்பட்டு மக்கள் கையிருப்புக்களை அதிகளவில் பதுக்கியமை மற்றும் எரிபொருள் நிரப்புவதற்கான நீண்ட வரிசைகள் என்பவற்றிற்கு மத்தியில் பொருளாதார நடவடிக்கைகளின் தடங்கலற்றதன்மையினை நிச்சயப்படுத்தும் பொருட்டு எரிபொருள் இறக்குமதிகளின் இன்றியமையாமையினைக் கருத்திற்கொண்டு, மத்திய வங்கி இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்குத் தேவையான வெளிநாட்டுச் செலாவணித் திரவத்தன்மையினை வழங்குவதன் மூலம் காலந்தவறாத எரிபொருள் கொள்வனவிற்குத் தொடர்ந்து வசதியளித்தது. மேலும், இலங்கை அரசாங்கம் ஆண்டு காலப்பகுதியில் பெற்றோலிய உற்பத்திகளின் கொள்வனவிற்கு நிதியளிப்பதற்காக இந்திய இறக்குமதி ஏற்றுமதி வங்கியிடமிருந்து ஐ.அ.டொலர் 500 மில்லியன் கொண்ட குறுங்கால கொடுகடன் வசதியினைப் பெற்றுக்கொண்ட வேளையில் நாட்டில் மோசமான பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் இந்திய அரச வங்கியிடமிருந்து பெற்றுக்கொண்ட ஐ.அ.டொலர் 1,000 மில்லியன் கொடுகடன் வசதியின் ஐ.அ.டொலர் 200 மில்லியனையும் அதற்குப் பயன்படுத்தியது. இதேவேளை, 2022 மேயில், பெற்றோலிய உற்பத்திகளுக்கான விலையிடல் சூத்திரமொன்றின் நடைமுறைப்படுத்தலிற்கு அமைச்சரவை ஒப்புதலளித்ததுடன் அதற்கிணங்க பொருத்தமான செலவைப் பிரதிபலிக்கக்கூடிய விலையிடல் சூத்திரமொன்றினை வகுப்பதற்கான குழுவொன்றும் நியமிக்கப்பட்டது. 2018இல் பின்பற்றப்பட்ட விலையிடல் சூத்திரத்தினை நடைமுறைப்படுத்துவதற்கும் உள்நாட்டுப் பெற்றோலிய விலைகளை மாதாந்த அடிப்படையில் திருத்துவதற்கும் அரசாங்கம் தீர்மானித்தமையினால் 2022 மேயிலிருந்து பின்பற்றப்பட்ட விலையிடல் சூத்திரம் அதனைத்தொடர்ந்து 2022 திசெம்பரில் இரத்துசெய்யப்பட்டது. இதேவேளை, ஏற்றுமதியாளர்கள், மின் உருவாக்க நிறுவனங்கள், சுற்றுலாப் பணி வழங்குநர்கள், உரிமம்பெற்ற தொலைத்தொடர்பூட்டல் பணி வழங்குநர்கள் மற்றும் ஐ.அ.டொலரில் கொடுப்பனவுகளை ஏற்காத ஏனைய நிறுவனங்கள் ஆகியோருக்கு ஜெயா கொள்கலன் முனையத்திலுள்ள எண்ணெய்க் களஞ்சியத்தின் ஊடாக குறிப்பிட்டதொரு காலப்பகுதிக்கு தெரிவுசெய்யப்பட்ட எரிபொருள் உற்பத்திகளை நிரம்பல் செய்வதற்கு பல்வேறு நீக்கல உரிமம்

வரைபடம் 3.1
பொருளாதார மற்றும் சமூக உட்கட்டமைப்பின் செயலாற்றம்





3

3

வைத்திருப்போருக்கான ஒப்புதலை மின்சக்தி மற்றும் வலுச்சக்தி அமைச்சு அளித்தது. 2022 யூலை முற்பகுதியில், எரிபொருளிற்கான உத்தரவாதமளிக்கப்பட்ட ஒதுக்கீடொன்றிற்குட்பட்டு, எரிபொருள் கொள்வனவிற்கு ஐ.அ.டொலரில் கொடுப்பனவு செய்வதன் மூலம் இலங்கையில் வியாபாரப் பதிவுடன் ஏற்றுமதித் துறையில் ஈடுபட்ட முன்னுரிமைபெற்ற நுகர்வோரின் பதிவினை இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் ஆரம்பித்தது. போக்குவரத்துத் துறைக்கான தொடர்ச்சியான எரிபொருள் நிரம்பலினை நிச்சயப்படுத்தும் பொருட்டு, தேசிய எரிபொருள் உரிமத்திற்கான கியுஆர் குறியீட்டு முறைமையினை நடைமுறைப்படுத்துவதற்கு முன்னர், 2022 யூலை மாத பிற்பகுதியிலிருந்து வாகன இலக்கத் தகட்டின் இறுதி இலக்கத்திற்கு அமைவாக அதன் சொந்த நிரப்பு நிலையங்களினூடாக எரிபொருள் நிரம்பல்செய்யப்பட்ட முறைமையொன்றினை இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் அறிமுகப்படுத்தியது. 2022 ஓகத்து 01 தொடக்கம் நடைமுறைக்கு வந்த தேசிய எரிபொருள் உரிமத்திற்கான கியுஆர் குறியீட்டு முறைமையின் கீழ், விதந்துரைக்கப்பட்ட வாகன வகைகளுக்கு வாராந்த ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டதுடன் அதன்மூலம் வரையறுக்கப்பட்ட எரிபொருள் கிடைப்பனவைச் சிக்கனப்படுத்தி, கடுமையான மட்டுப்பாடுகளின் கீழ் நாடு முழுவதும் பகிர்ந்தளிக்கப்பட்டது. மேலும், ஆண்டு காலப்பகுதியில் கைத்தொழிற்சாலைகள், வேளாண்மைத் துறை மற்றும் மீன்பிடித் துறை ஆகியவற்றின் எரிபொருள் நிரம்பலினை நிச்சயப்படுத்தும் பொருட்டு பல்வேறு வழிமுறைகள் நடைமுறைப்படுத்தப்பட்டன. 2022 ஒத்தோபர் தொடக்கத்தில் சுற்றுலாப்பயணிகளுக்கான எரிபொருள் உரிமத்திற்கான முற்கொடுப்பனவு அட்டை முறைமை நடைமுறைப்படுத்தப்பட்டு, கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றினைத் தொடர்ந்து சுற்றுலாக் கைத்தொழில் துறையின் மீட்சியினை வசதிப்படுத்தும் நோக்கில் நாடளாவிய ரீதியிலுள்ள நிலையங்களில் எரிபொருள் கொள்வனவு செய்வதற்கான ஐ.அ.டொலரில் குறித்துரைக்கப்பட்ட முற்கொடுப்பனவு அட்டையொன்றினை சுற்றுலாப்பயணிகள் பயன்படுத்துவதனை வசதிப்படுத்தியது. அதேவேளை, இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் 2022இன் பிற்பகுதியில் மசகெண்ணெய் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியம் என்பவற்றின் இறக்குமதிக்காக களஞ்சிய தொகுதி எண்ணக்கருவினை நடைமுறைப்படுத்தி, இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் சிலோன் பெற்றோலிய களஞ்சிய முனைக்கோடிகள் லிமிட்டெட் என்பவற்றின் களஞ்சிய முனையங்களிலிருந்து பெறப்பட்ட அளவுக்கான பகுதி பகுதியிலான கொடுப்பனவுகளில் தாமதங்களேதுமின்றி எரிபொருள் சரக்குகளை இறக்குவதனை இயலச்செய்தது. இவ்வேற்பாடானது வரையறைகள் காணப்பட்ட போதிலும், தொடர்ச்சியான எரிபொருள் நிரம்பலினை வசதிப்படுத்தியதுடன் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் காசுப் பாய்ச்சல் பற்றாக்குறைகளை பாரியளவில் குறைக்கத் துணைபுரிந்தது.

**உலகளாவிய பொருளாதார மெதுவடைதலின் மீதான அதிகரித்துவருகின்ற கரிசனைகளைத் தொடர்ந்து, ஆண்டின் இரண்டாம் அரையாண்டுப் பகுதியில் கீழ்நோக்கிய அழுத்தங்கள் காணப்பட்ட போதிலும், கிழக்கு ஐரோப்பாவில் காணப்பட்ட புவிசார் அரசியல் பதட்டங்கள் மற்றும் அதன் விளைவாக இறுக்கமடைந்த உலகளாவிய எண்ணெய் நிரம்பல் நிலைமைகள் என்பவற்றினால் முதன்மையாக உந்தப்பட்டு 2022இல் உலகளாவிய மசகெண்ணெய் விலைகள் தொடர்ந்தும் உயர்வடைந்து காணப்பட்டன.** உலகில் பெற்றோலிய உற்பத்திகளின் முன்னணி ஏற்றுமதியாளர்களுள் ஒன்றான ருசியா மீது மேற்கத்தேய நாடுகளினால் விதிக்கப்பட்ட தடைகளின் காரணமாக, நாளாந்த விலைகள் (பிறென்ட்) 2008 யூலையிலிருந்து முதற்தடவையாக 2022 மாச்சில் பீப்பாயொன்றிற்கு ஐ.அ.டொலர் 140இனை எட்டியதுடன் 2022இன் முதலாம் அரையாண்டுப் பகுதியில் மசகெண்ணெய் விலைகள் அதிகரித்துச் செல்கின்ற போக்கொன்றினைக் கொண்டிருந்தன. இருப்பினும், 2022இன் இரண்டாம் அரையாண்டின் தொடக்கத்திலிருந்து, உலகெங்கிலுமுள்ள முக்கிய மத்திய வங்கிகளினால் உலகளாவிய வலுசக்திக் கேள்வியினைக் குறைக்குமென எதிர்பார்க்கப்பட்டு பின்பற்றப்பட்ட தீவிரமான நாணயக் கொள்கை இறுக்கமாக்கல் வழிமுறைகள், சீனாவில் தொடர்ச்சியாகக் காணப்பட்ட கொவிட்-19 கட்டுப்பாடுகள் மற்றும் ஐக்கிய அமெரிக்காவின் உபாய ஒதுக்குகளிலிருந்து மசகெண்ணெய்யின் கணிசமானளவிலான விடுவிப்பு என்பவற்றுடன் இணைந்து, மெதுவடைந்து செல்கின்ற உலகளாவிய வளர்ச்சி காரணமாக விலைகள் வீழ்ச்சியடைந்து செல்கின்ற போக்கொன்றினைக் கொண்டிருந்தன. 2022 ஒத்தோபரில் பெற்றோலிய ஏற்றுமதி நாடுகளின் அமைப்பு மற்றும் அதன் நட்பு நாடுகள் மூலம் மேற்கொள்ளப்பட்ட உற்பத்திக் குறைப்பு அறிவிப்பு, 2022 திசெம்பரில் ருசிய மசகெண்ணெய் இறக்குமதிகள் மீதான ஐரோப்பிய ஒன்றியத்தின் தடையுடன் இணைந்து ஜீ7 நாடுகளினால் ருசிய மசகெண்ணெய் மீதான விலைக்கான உயர்ந்தபட்ச வரையறை விதிப்பு மற்றும் சீனாவில் கேள்வி மீட்சி தொடர்பிலான சமிக்ஞைகள் என்பவற்றுடன் 2022இன் இரண்டாம் அரையாண்டின் பிற்பகுதியில் மேல்நோக்கிய அழுத்தங்களின் குறுகிய நிகழ்வுகள் பதிவுசெய்யப்பட்டன. சராசரி மசகெண்ணெய் விலை (பிறென்ட்) முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட பீப்பாயொன்றிற்கு ஐ.அ.டொலர் 70.80 சராசரி விலையுடன் ஒப்பிடுகையில் 2022இல் பீப்பாயொன்றிற்கு ஐ.அ.டொலர் 99.06இற்கு 39.9 சதவீதத்தினால் அதிகரித்தது. வெஸ்ட் டெக்சஸ் இன்டர்மீடியட் விலையும் உயர்வடைந்து செல்கின்ற போக்கொன்றினைக் கொண்டிருந்ததுடன் 2021இல் பதிவுசெய்யப்பட்ட பீப்பாயொன்றிற்கு ஐ.அ.டொலர் 67.94 உடன் ஒப்பிடுகையில் 2022இல் பீப்பாயொன்றிற்கு ஐ.அ.டொலர் 94.41 சராசரியொன்றினைப் பதிவுசெய்தது. இருப்பினும், உலகளாவிய மசகெண்ணெய் விலைகள் 2023இன் முதலாம் காலாண்டில் சிறிதளவிலான மிதமடைதலொன்றினைக் காண்பித்தன. பெற்றோல் 92, பெற்றோல் 95, தன்னியக்க டீசல், சிறப்பு

வரைபடம் 3.2
உலகளாவிய மசகெண்ணெய் விலைகளின் போக்குகள்





*மூலம்:* புளும்பேர்க்

டீசல் மற்றும் மண்ணெண்ணெய் ஆகியன உள்ளடங்கலாக முக்கிய சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகளின் சராசரி உலகளாவிய விலைகள் 2022இல் 40 தொடக்கம் 75 சதவீத வீச்சினுள் ஆண்டிற்கு ஆண்டு அதிகரித்தன. உலகளாவிய மசகெண்ணெய் விலைகளில் அதிகரித்துச் செல்கின்ற போக்குகளுடன் இசைந்து செல்லும் விதத்தில், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் இறக்குமதி செய்யப்பட்ட மசகெண்ணெயின் சராசரி விலை 2021இல் பதிவுசெய்யப்பட்ட சராசரியாக பீப்பாயொன்றிற்கு ஐ.அ.டொலர் 68.86 உடன் ஒப்பிடுகையில் 2022இல் பீப்பாயொன்றிற்கு ஐ.அ.டொலர் 100.11இற்கு 45.4 சதவீதத்தினால் அதிகரித்தது.


**கேள்வி முகாமைத்துவ உபாயத்தின் பகுதியொன்றாக, இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் நிதியியல் நட்டங்களைத் தீர்க்கின்ற வேளையில், 2022 மார்ச்சிலிருந்து பெற்றோலிய உற்பத்திகளின் பல்வேறு சுற்றுக்களிலான விலை திருத்தங்கள் மின்சக்தி மற்றும் வலுச்சக்தி அமைச்சுடன் இணைந்து இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தினால் மேற்கொள்ளப்பட்டன.** அதற்கமைய, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் விற்கப்பட்ட முக்கிய பெற்றோலிய உற்பத்திகளின் உள்நாட்டு விலைகள் பெற்றோலிய உற்பத்திகளின் உலகளாவிய விலைகளின் உயர்வடைதலுக்கு ஏற்ப 2022 மாச்சு, ஏப்பிறல், மே, யூன், மற்றும் நவெம்பர் மற்றும் 2023 பெப்புருவரி ஆகிய மாதங்களில் மேல்நோக்கித் திருத்தப்பட்டன. உலகளாவிய சந்தைகளில் விலை வீழ்ச்சிகளினைத் தொடர்ந்து, 2022 யூலை, ஓகத்து, ஒத்தோபர் மற்றும் திசெம்பர், மற்றும் 2023 சனவரி மற்றும் மாச்சு ஆகிய மாதங்களில் பெற்றோலிய விலைகள் பல்வேறு சந்தர்ப்பங்களில் கீழ்நோக்கித் திருத்தப்பட்டன. மேலும், குறிப்பிடத்தக்களவு மானியமளிக்கப்பட்ட வீதமொன்றில் மண்ணெண்ணெய்யினை விற்பனை செய்வதில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் உறப்பட்ட கணிசமானளவிலான நட்டங்களைக் கட்டுப்படுத்தும் பொருட்டு 2022 ஓகத்து இறுதியில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் மண்ணெண்ணெய்யின் சில்லறை விலை குறிப்பிடத்தக்களவு மேல்நோக்கிச் சீராக்கப்பட்டது. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் விலைத் திருத்தங்களினைத் தொடர்ந்து, லங்கா ஐஓசி பிஎல்சியானது இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் விலைகளுடன் அதன் விலைகள் இசைந்து செல்லும் விதத்தில் பெற்றோலிய உற்பத்திகளின் உள்நாட்டு விலைகளைப் பதினொன்று சுற்றுக்களாக மேல்நோக்கியும் எட்டு சுற்றுக்களாகக் கீழ்நோக்கியும் திருத்தியது. இதேவேளை 2022 திசெம்பரில் அரச படுகடன் கையிருப்பிற்கு மாற்றப்பட்ட இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வெளிநாட்டு நாணயப் படுகடன் கையிருப்புடன் தொடர்புடைய படுகடன் பணிக்கொடுப்பனவுகளைப் பூர்த்திசெய்யும் பொருட்டு 2023 சனவரி 01 தொடக்கம் நடைமுறைக்கு வரும் விதத்தில் முக்கிய சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகளின் இறக்குமதிகள் மீது லீற்றரொன்றிற்கு ரூ.25.00 கொண்ட கலால் தீர்வையொன்றினை அரசாங்கம் விதித்தது. இதற்கமைய, ஒக்ரேன் 92 மற்றும் ஒக்ரேன் 95 பெற்றோல் மீதான கலால் (சிறப்பு ஏற்பாடுகள்) தீர்வையானது லீற்றரொன்றிற்கு ரூ.52.00 இற்கு அதிகரித்த வேளையில், சிறப்பு டீசல் மற்றும் தன்னியக்க டீசல்

வரைபடம் 3.3
இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் பெற்றோலிய உற்பத்திகளின் உள்நாட்டு விலைகளுக்கான திருத்தங்கள்




*மூலம்:* இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்

வரைபடம் 3.4
லங்கா ஐஓசி பிஎல்சியின் பெற்றோலிய உற்பத்திகளின் உள்நாட்டு விலைகளுக்கான திருத்தங்கள்





*மூலம்:* லங்கா ஐஓசி பிஎல்சி

3

என்பவற்றிற்கு ஏற்புடையதாகின்ற தீர்வையானது 2023 சனவரி 01இலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் லீற்றரொன்றிற்கு முறையே ரூ.38.00 மற்றும் ரூ.31.00 இற்கு அதிகரித்ததுடன் அதன்மூலம் உள்நாட்டுப் பெற்றோலிய உற்பத்திகளின் விலைகள் உயர்வடைந்தன.

**ஆண்டு காலப்பகுதியில் குறைந்தளவிலான வெளிநாட்டுச் செலாவணித் திரவத்தன்மை, உள்நாட்டுப் பெற்றோலிய உற்பத்திகளின் உயர்வடைந்த விலைகள், எரிபொருள் பங்கீடு மற்றும் மெதுவடைந்த பொருளாதார நடவடிக்கைகள் என்பவற்றிற்கு மத்தியில் குறைந்தளவிலான இறக்குமதிகளின் ஒருங்கிணைந்த தாக்கத்தின் காரணமாக உள்நாட்டுச் சந்தையில் பெற்றோலிய உற்பத்திகளின் ஒட்டுமொத்த விற்பனை அளவு 2022 காலப்பகுதியில் வீழ்ச்சியொன்றினைப் பதிவுசெய்தது.** உள்நாட்டுச் சந்தையில் நிரம்பலினையும் கேள்வியினையும் சீராக்கும் நோக்கில் 2022 ஓகத்திலிருந்து கியுஆர் குறியீட்டின் அடிப்படையிலமைந்த எரிபொருள் பங்கீட்டு முறைமையினை நடைமுறைப்படுத்துவதன் மூலம் கேள்வி முகாமைத்துவ உபாயங்களை அறிமுகப்படுத்துவதற்கான வழிமுறைகளை அரசாங்கம் மேற்கொண்டது. 2022இல், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் விற்பனை அளவுகளில் ஏற்பட்ட வீழ்ச்சியுடன் மொத்த பெற்றோலிய விற்பனைகள் 13.8 சதவீத ஆண்டிற்கு ஆண்டு சுருக்கமொன்றினைப் பதிவுசெய்த வேளையில், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன எரிபொருள் நிரம்பல் இடையூறுகளுக்குட்பட்ட மத்தியில் லங்கா ஐஓசி பிஎல்சியின் விற்பனை அளவுகள் குறிப்பிடத்தக்க வளர்ச்சியொன்றினை மீளாய்விற்கு உட்பட்ட காலப்பகுதியில் பதிவுசெய்தன. போக்குவரத்துத் துறைக்கான இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் விற்பனைகள், மொத்த இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் விற்பனைகளில் 73 சதவீதமாக விளங்கி, 17.1 சதவீத ஆண்டிற்கு ஆண்டு சுருக்கமொன்றினைப் பதிவுசெய்த வேளையில், வான்வழித் துறைக்கான விற்பனைகள் 9.8 சதவீத ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சியொன்றினைப் பதிவுசெய்தமையானது

வரைபடம் 3.5
பெற்றோலிய உற்பத்திகளின் விற்பனைகள்




*மூலங்கள்:* இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்
லங்கா ஐஓசி பிஎல்சி

அட்டவணை 3.1
பெற்றோலியத் துறையின் செயலாற்றம்

| விடயம் | | 2021 (அ) | 2022 (ஆ) | வளர்ச்சி வீதம் (%) 2021 (அ) | 2022 (ஆ) |
|---|---|---|---|---|---|
| இறக்குமதிகளின் அளவு ('000 மெ.தொ) | | | | | |
| மசகு எண்ணெய் | | 1,182 | 649 | -29.1 | -45.1 |
| சுத்திகரிக்கப்பட்ட உற்பத்திகள் | | 4,553 | 3,927 | 13.0 | -13.8 |
| நிலக்கரி | | 2,206 | 1,707 | -15.1 | -22.6 |
| திரவப் பெற்றோலிய வாயு | | 422 | 290 | -3.3 | -31.2 |
| உள்நாட்டு திரவப் பெற்றோலிய வாயு உற்பத்தி ('000 மெ.தொ) | | 17 | 6 | -34.1 | -65.8 |
| இறக்குமதிகளின் பெறுமதி (ச.உ.செ) | | | | | |
| மசகு எண்ணெய் | (ரூ.மில்) | 123,865 | 157,408 | 15.0 | 27.1 |
| | (ஐ.அ.டொ.மில்) | 625 | 484 | 7.2 | -22.6 |
| சுத்திகரிக்கப்பட்ட உற்பத்திகள் | (ரூ.மில்) | 564,681 | 1,294,311 | 75.5 | 129.2 |
| | (ஐ.அ.டொ.மில்) | 2,840 | 4,048 | 63.0 | 42.5 |
| நிலக்கரி | (ரூ.மில்) | 55,118 | 99,949 | 37.1 | 81.3 |
| | (ஐ.அ.டொ.மில்) | 278 | 365 | 27.8 | 31.3 |
| திரவப் பெற்றோலிய வாயு | (ரூ.மில்) | 64,436 | 75,882 | 47.1 | 17.8 |
| | (ஐ.அ.டொ.மில்) | 324 | 234 | 37.2 | -27.8 |
| மசகு எண்ணெயின் சராசரி விலை (ச.உ.செ.) | | | | | |
| | (ரூ.மில்) | 13,645 | 32,573 | 62.2 | 138.7 |
| | (ஐ.அ.டொ.மில்) | 68.86 | 100.11 | 51.1 | 45.4 |
| பெற்றோலிய ஏற்றுமதிகளின் தொகை ('000 மெ.தொ) | | 853 | 641 | 7.0 | -24.9 |
| பெற்றோலிய ஏற்றுமதிகளின் பெறுமதி | (ரூ.மில்) | 100,975 | 177,194 | 46.7 | 75.5 |
| | (ஐ.அ.டொ.மில்) | 506 | 568 | 35.6 | 12.2 |
| உள்நாட்டு விற்பனைகள் - சுத்திகரிக்கப்பட்ட உற்பத்திகள் ('000 மெ.தொ) | | 4,447 | 3,833 | -3.3 | -13.8 |
| இதில் பெற்றோல் (92 ஒக்டேன்) (இ) | | 1,238 | 1,119 | 8.7 | -9.6 |
| பெற்றோல் (95 ஒக்டேன்) | | 116 | 69 | -3.5 | -40.7 |
| தன்னியக்க டீசல் (ஈ) | | 1,875 | 1,693 | 7.1 | -9.7 |
| சிறப்பு டீசல் | | 75 | 78 | 8.2 | 5.0 |
| மண்ணெண்ணெய் | | 185 | 98 | 5.6 | -46.9 |
| உலையெண்ணெய் | | 720 | 496 | -25.8 | -31.1 |
| அவுட்டூர் | | 224 | 246 | 18.6 | 9.8 |
| நப்தா | | 11 | 32 | -93.5 | 203.6 |
| உள்நாட்டு விற்பனைகள் - திரவப் பெற்றோலிய வாயு ('000 மெ.தொ.) | | 457 | 294 | -3.3 | -35.6 |
| உள்நாட்டு விலை (காலமுடிவில்) (ரூ/லீற்றர்) | | | | | |
| பெற்றோல் (92 ஒக்டேன்) | | 177.00 | 370.00 | 29.2 | 109.0 |
| பெற்றோல் (95 ஒக்டேன்) | | 207.00 | 510.00 | 28.6 | 146.4 |
| தன்னியக்க டீசல் | | 121.00 | 420.00 | 16.3 | 247.1 |
| சிறப்பு டீசல் | | 159.00 | 510.00 | 20.5 | 220.8 |
| மண்ணெண்ணெய் | | 87.00 | 365.00 | 24.3 | 319.5 |
| உலையெண்ணெய் | | | | | |
| 800 செக்கன்கள் | | 110.00 | 320.00 | 57.1 | 190.9 |
| 1,500 செக்கன்கள் | | 110.00 | 320.00 | 57.1 | 190.9 |
| திரவப் பெற்றோலிய வாயு (ரூ/கி.கி) | | | | | |
| லிட்றோ வாயு | | 214.00 | 368.80 | 79.2 | 72.3 |
| லாவ்ஸ் வாயு | | 227.20 | 424.00 | 90.2 | 86.6 |
| பன்னாட்டு மசகு எண்ணெய் விலைகள் (ஐ.அ.டொலர்/ பீப்பாய்) | | | | | |
| பிறெண்ட் | | 70.80 | 99.06 | 63.3 | 39.9 |
| வெஸ்ட் டெக்ஸாஸ் இன்டர்மீடியட் (WTI) | | 67.94 | 94.41 | 70.8 | 39.0 |
| பெற்றோலியம் மற்றும் ஏனைய திரவங்கள் | | | | | |
| உலக எண்ணெய் நிரம்பல் (நாளொன்றுக்கான மில்லியன் பீப்பாய்கள்) | | 95.7 | 99.9 | 1.9 | 4.3 |
| உலக எண்ணெய் கேள்வி (நாளொன்றுக்கான மில்லியன் பீப்பாய்கள்) | | 97.1 | 99.4 | 5.6 | 2.4 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) எக்ஸ்ரா பிரிமியம் யூரோ 3 உள்ளடங்கலாக
(ஈ) எக்ஸ்ராமைல் டீசல் உள்ளடங்கலாக

*மூலங்கள்:* இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்
லங்கா ஐஓசி பிஎல்சி
வரையறுக்கப்பட்ட லங்கா மராயன் (தனியார்) சேவிஸ் கம்பனி
வரையறுக்கப்பட்ட லிட்றோ காஸ் லங்கா கம்பனி
வரையறுக்கப்பட்ட லாவ்ஸ் காஸ் பீஎல்சீ
இலங்கைச் சுங்கம்
புளும்பேர்க்
ஐக்கிய அமெரிக்கா வலுத் தகவல் நிர்வாகம்

2021இல் கொவிட்-19 நோய்த்தொற்றின் தாக்கத்தின் காரணமாக ஏற்பட்ட தளத்தாக்கத்தினைப் பிரதிபலித்தது. வெளிநாட்டுச் செலாவணித் திரவத்தன்மைப் பற்றாக்குறை காரணமாக வரையறுக்கப்பட்ட எரிபொருள் நிரம்பலிற்கு மத்தியில் சாதகமான நீர்த்தேக்க மட்டங்கள் மற்றும் மின் வெட்டுக்கள் என்பவற்றினால் ஆதரவளிக்கப்பட்டு நீர்மின் உற்பத்தி மீதான அதிகரித்தளவிலான தங்கியிருத்தலானது ஆண்டு காலப்பகுதியில் மின் உருவாக்கத் துறையிலிருந்தான எரிபொருள் கேள்வியில் ஒட்டுமொத்த வீழ்ச்சியொன்றினைத் தோற்றுவித்தது. இதற்கமைய, மின் உருவாக்கத்திற்கான எரிபொருளின் விற்பனைகள், மீளாய்விற்குட்பட்ட காலப்பகுதியில் 6.8 சதவீத ஆண்டிற்கு ஆண்டு சுருக்கமொன்றினைப் பதிவுசெய்தன.

**வெளிநாட்டுச் செலாவணிப் பற்றாக்குறையின் காரணமாக கிரமமான மசகெண்ணெய் இறக்குமதியின்மையால் சபுகஸ்கந்த சுத்திகரிப்பு ஆலை அடிக்கடி முடக்கப்பட்டதன் காரணமாக பெற்றோலிய உற்பத்திகளின் சுத்திகரிப்பிலிருந்தான வெளியீடு 2022இல் 55.4 சதவீத குறிப்பிடத்தக்க ஒட்டுமொத்த வீழ்ச்சியொன்றினைப் பதிவுசெய்தது.** 2022 காலப்பகுதியில், சுத்திகரிப்பு தொழிற்பாடுகளுக்கான மசகெண்ணெய்யின் கிடைப்பனவின்மையின் காரணமாக ஏறத்தாழ 225 நாட்களுக்கு சபுகஸ்கந்த சுத்திகரிப்பு ஆலை தொடர்ந்தும் மூடப்பட்டிருந்தது. இதற்கமைய, ஒட்டுமொத்த மசகெண்ணெய் செயன்முறைப்படுத்தலானது 58.4 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த வேளையில், டீசல், பெற்றோல், எரிபொருள் எண்ணெய் மற்றும் நப்தா போன்ற முக்கிய உற்பத்திகளின் சுத்திகரிப்பு ஆலை வெளியீடானது மீளாய்விற்கு உட்பட்ட காலப்பகுதியில் முறையே 65.4, 68.8, 45.7 மற்றும் 71.2 சதவீதங்களினால் சுருக்கமடைந்தன.

**2022இன் இரண்டாம் அரையாண்டுப் பகுதியில் அநேகமாக நடைமுறைப்படுத்தப்பட்ட செலவைப் பிரதிபலிக்கக்கூடிய விலைத் திருத்தங்களுக்கு மத்தியில், செலாவணி வீதத்தின் குறிப்பிடத்தக்க தேய்வடைதலின் காரணமாக ஏற்பட்ட நட்டங்களின் காரணமாக பாரியளவில் உந்தப்பட்டு, இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நிதியியல் செயலாற்றம் 2022இல் மேலும் மோசமடைந்தது.** கணக்காய்விற்கு உட்படுத்தப்படாத நிதியியல் கூற்றுக்களின் பிரகாரம், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தொழிற்பாட்டு நட்டங்கள் முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட ரூ.41.3 பில்லியன் தொழிற்பாட்டு நட்டத்துடன் ஒப்பிடுகையில் 2022இல் ரூ.6.2 பில்லியனிற்கு வரையறுக்கப்பட்டமையானது, உலகளாவிய மசகெண்ணெய் விலைகளில் குறிப்பிடத்தக்க தளம்பல்களிற்கு மத்தியில் விலைத் திருத்தங்களின் தாக்கத்தினைப் பகுதியளவில் பிரதிபலித்தது. 2022 மாச்சு தொடக்கம் மே வரையான காலப்பகுதியில் ஐ.அ.டொலரிற்கு எதிராக இலங்கை ரூபாவின் சடுதியான பெயரளவு தேய்வடைதலானது இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு ரூ.527.0 பில்லியன் கொண்ட குறிப்பிடத்தக்க செலாவணி வீத வேறுபாட்டு நட்டமொன்றினை விளைவித்து, அது நிதியியல் செயலாற்றத்தின் மீது நிறையேற்றப்பட்டு 2021இல் பதிவுசெய்யப்பட்ட ரூ.81.8 பில்லியன் கொண்ட நட்டத்துடன் (வரிகளுக்கு முன்னர்) ஒப்பிடுகையில் 2022இல் ரூ.615.1 பில்லியன் கொண்ட ஒட்டுமொத்த நட்டமொன்றினைப் (வரிகளுக்கு முன்னர்) பதிவுசெய்தது. இருப்பினும், மாதாந்த அடிப்படையில், செலவைப் பிரதிபலிக்கக்கூடிய விலைச் சீராக்கங்கள் மற்றும் செலாவணி வீத தளம்பல்களின் படிப்படியான உறுதிப்பாடு என்பன காரணமாக 2022 யூலையிலிருந்து இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் இலாபமொன்றினைத் (வரிக்கு முன்னர்) தொடர்ந்தும் பதிவுசெய்தது. அதேவேளை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நிதியியல் ஆற்றலினை மேம்படுத்துவதற்கான வழிமுறையொன்றாக ஐ.அ.டொலர் 2.5 பில்லியனாக விளங்கிய இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் உத்தரவாதமளிக்கப்பட்ட வெளிநாட்டு நாணய படுகடன் கையிருப்பினை அரசாங்கத்திற்கு மாற்றுவதற்கான அரசாங்கத்தின் தீர்மானத்துடன், வங்கித்தொழில் துறைக்கான இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வெளிநின்ற வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட கடன்கள் மற்றும் இறக்குமதி உண்டியல்கள் 2021 இறுதியில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 3.4 பில்லியனிலிருந்து 2022 இறுதியளவில் ஐ.அ.டொலர் 0.2 பில்லியனிற்குக் குறைவடைந்தது. பொது நிறுவனங்களிடமிருந்து இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் மொத்த வெளிநின்ற வர்த்தகக் கிடைக்கப்பெறத்தக்கவைகள் 2021 இறுதியிலிருந்து 2022 இறுதியளவில் ரூ.220.3 பில்லியனிற்கு ரூ.59.3 பில்லியன் தொகையினால் அதிகரித்தன. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வெளிநின்ற மொத்த வர்த்தகக் கிடைக்கப்பெறத்தக்கவைகளில் சிறிலங்கன் எயார்லைன்ஸ் மற்றும் இலங்கை மின்சார சபை என்பன 2021 இறுதியில் அறிக்கையிடப்பட்ட முறையே 38.6 சதவீதத்திலிருந்தும் 51.5 சதவீதத்திலிருந்தும் 2022 இறுதியில் முறையே 49.3 சதவீதமாகவும் 31.1 சதவீதமாகவும் விளங்கின. செலாவணி வீதத்தின் சடுதியான தேய்வடைதலுடன் இசைந்து செல்லும் விதத்தில் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கான சிறிலங்கன் எயார்லைன்ஸின் பொறுப்புக்களின் சமநிலைச் சீராக்கத்துடன் சிறிலங்கன் எயார்லைன்ஸிலிருந்தான வர்த்தக கிடைக்கப்பெறத்தக்கவைகளின் ரூபாப் பெறுமதி 2022 ஆண்டு காலப்பகுதியில் குறிப்பிடத்தக்களவு அதிகரித்தது.

**இலங்கையில் பெற்றோலிய கைத்தொழில் துறையின் வினைத்திறன் மற்றும் செயலாற்றம் என்பவற்றை மேம்படுத்தும் நோக்கில் பல்வேறு உட்கட்டமைப்பு அபிவிருத்தி முயற்சிகள் மற்றும் சட்ட அமுலாக்கங்கள் 2022இல் நடைமுறைப்படுத்தப்பட்டன.** நாட்டில் எரிபொருள் வழங்கலினை

3

சீராக்கும் பொருட்டு, பொருளாதார நடவடிக்கைகளில் கடுமையான தாக்கமொன்றுடன் நாடு கொண்டிருந்த முன்னெப்பொழுதுமில்லாத எரிபொருள் நெருக்கடிக்கு மத்தியில் பல தளர்வு உத்திகள் பின்பற்றப்பட்டன. இதற்கமைய, அமைச்சரவையின் ஒப்புதலின் பேரில், உள்நாட்டுச் சந்தையில் பெற்றோலிய உற்பத்திகளின் இறக்குமதி, பகிர்ந்தளிப்பு மற்றும் விற்பனை செய்தல் என்பவற்றிற்கு சாத்தியமான வியாபார மாதிரியொன்றினை ஆராயும் பொருட்டு, பெற்றோலிய் உற்பத்தி நாடுகளில் நிறுவப்பட்ட கம்பனிகள் உள்ளடங்கலாக புதிய எரிபொருள் வழங்குநர்களிடமிருந்து ஆர்வ வெளிப்படுத்துகைகள் கோரப்பட்டன. இச்செய்முறை 2022 ஒத்தோபர் 26இலிருந்து நடைமுறைக்கு வந்த 2022ஆம் ஆண்டின் 27ஆம் இலக்க பெற்றோலிய உற்பத்திகளின் (சிறப்பு ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டத்தின் சட்டவாக்கத்துடன் முழுமைப்படுத்தப்பட்டது. ஆண்டு காலப்பகுதியில், இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் உட்கட்டமைப்பு அபிவிருத்தி முயற்சிகள் நிதியியல் மட்டுப்பாடுகளுடன் முதன்மையாகத் தடைப்பட்டு, இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் அபிவிருத்திச் செயற்றிட்டங்களில் மிதமான முன்னேற்றமொன்றினைத் தோற்றுவித்தன. பண்டாரநாயக்கா பன்னாட்டு விமான நிலைய அபிவிருத்திச் செயற்றிட்டத்தின் பகுதியொன்றாக, புதிய சுற்றுவட்டப் பிரதேசம் E இற்கான நிலத்திற்குக் கீழான எரிபொருள் குழாய் முறைமையினை நிறுவுதல், இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன எரிபொருள் களஞ்சிய வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் தற்போதுள்ள சுற்றுவட்டப் பிரதேசங்களான A, B மற்றும் C என்பவற்றில் நிலத்திற்குக் கீழான எரிபொருள் குழாய் முறைமையின் உதிரிப்பாகங்களை மாற்றியமைத்தல் என்பன ஆண்டு காலப்பகுதியில் முன்னெடுக்கப்பட்டன. இதேவேளை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், லங்கா ஐஒசி பிஎல்சி மற்றும் ரின்கோ பெற்றோலியம் டர்மினல் (தனியார்) லிமிட்டெட் ஆகியவற்றின் பங்குபற்றுதலுடன் திருகோணமலை எண்ணெய்த் தாங்கிக் களஞ்சியத்தின் அபிவிருத்திக்கான உடன்படிக்கை 2022 சனவரி 06 அன்று கைச்சாத்திடப்பட்டது. அதற்கமைய, 2022இல், ரின்கோ பெற்றோலியம் டர்மினல் (தனியார்) லிமிட்டெட்டானது அதன் கண்காணிப்பினுள் வருகின்ற 61 தாங்கிகளை உருவாக்குவதற்கான பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டது. இது தொடர்பில், 10 களஞ்சிய தாங்கிகளின் சுகாதார மதிப்பீடும் விரிவான சாத்திய ஆய்வொன்றும் 2022இல் முன்னேற்றங்கண்டன. ஆண்டு காலப்பகுதியில், இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனமானது அபிவிருத்திச் செயற்றிட்டமொன்றினைத் தயாரித்து, திருகோணமலை எண்ணெய்த் தாங்கிக் களஞ்சியத்தில் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான 24 தாங்கிகளை அபிவிருத்தி செய்யும் பொருட்டு ஒப்பந்ததாரர்களைத் தேர்ந்தெடுப்பதன் மூலம் பூர்வாங்க நடவடிக்கைகளாக நிலத்திலுள்ள தடைகளை அகற்றுதல் மற்றும் நில அளவீட்டினை மேற்கொள்ளல் ஆகியவற்றிற்கான கொள்வனவு செய்முறையொன்றினையும் உருவாக்கியது. இதேவேளை, அரசாங்கத்தின் கரைகடந்த ஐதரசன் காபன் கண்டறிதல், மேம்பாடு மற்றும் உற்பத்திப் பணிகளுக்கான ஒழுங்குமுறைப்படுத்தல் அமைப்பாக, இலங்கையின் பெற்றோலிய அபிவிருத்தி அதிகாரசபை இலங்கையில் முன்னோக்கிய பெற்றோலிய கைத்தொழிற்துறையை அபிவிருத்தி செய்வதற்கான அதன் முயற்சிகளைத் தொடர்ந்தும் முன்னெடுத்தது. 2021ஆம் ஆண்டின் 21ஆம் இலக்க பெற்றோலிய வளங்கள் சட்டத்தில் குறித்துரைக்கப்பட்டவாறு, கரைகடந்த ஐதரசன் காபன் ஆய்வுத் தொழிற்பாடுகளை மேற்கொள்வதில் அதன் ஆணையினை வலுப்படுத்துவதில் இலங்கைப் பெற்றோலிய அபிவிருத்தி அதிகாரசபை தனது ஈடுபாட்டைத் தொடர்ந்தது. மேலும், பன்னாட்டுத் தொகுதி எல்லை நிர்ணய செய்முறைகள் மற்றும் தற்போதைய கைத்தொழிற்துறைப் போக்குகள் என்பவற்றின் மீளாய்வினைத் தொடர்ந்து, மன்னார், காவேரி மற்றும் இலங்கையின் நீர்த்தேக்கங்கள் ஆகியவற்றினை உள்ளடக்கிய மூன்று பாரியளவிலான தொகுதிகளினுள் ஏறத்தாழ 900 சிறிய தொகுதிகளை உள்ளடக்கிய புதிய கரைகடந்த ஐதரசன் காபனைக் கண்டறியும் தொகுதி வரைபடமொன்று வடிவமைக்கப்பட்டு 2022 யூலையில் வர்த்தமானியிடப்பட்டது. நில அதிர்வுத் தரவுகள் பல சந்தர்ப்பங்களில் பகுப்பாய்விற்குட்பட்டதுடன் இலங்கையில் பெற்றோலிய கண்டறிகைக்கான சாத்தியக்கூறுகள் தொடர்பில் துறைசார் நிபுணர்களினால் அரசாங்கத்திற்கு பல தசாப்தங்களிற்கு மேலாக தெரிவிக்கப்பட்டன. இன்னும் ஒத்த செய்முறை மீள நடந்தேறுவதுடன் அடுத்தடுத்த அரசாங்கங்களின் கீழ் ஊக்குவிப்புச் செலவுகள் உறப்படுகின்றன. நாட்டின் ஐதரசன் காபன் படிவுகளின் மீதான எரிவாயு அல்லது எண்ணெயின் உண்மையான கண்டறிதலானது இதுவரை புலப்படவில்லை. எனவே, இலங்கைப் பெற்றோலிய அபிவிருத்தி அதிகாரசபையானது வினைத்திறன்மிக்கதொரு ஆய்வாளருடன் ஈடுபடுவதனையும் அண்மைய எதிர்காலத்தில் எண்ணெய்/எரிவாயுவின் கண்டறிதலானது தொடங்கப்படுவதனை நிச்சயப்படுத்துவதனையும் நோக்காகக் கொள்ளவேண்டும்.

**முக்கியமாக 2022இன் முதலரைப் பகுதியில் வெளிநாட்டுச் செலாவணிப் பற்றாக்குறை காரணமாக நாட்டில் திரவ பெற்றோலிய எரிவாயு நிரம்பல் கணிசமானளவு இடையூறுக்குட்பட்டு, நகரத்திலும் நகர்சார் பகுதிகளிலும் வாழும் குடியிருப்பாளர்களைப் பாரியளவில் பாதித்தது.** இருப்பினும், உலக வங்கியிடமிருந்தான நிதியியல் உதவியுடன் வங்கியியல் முறைமையில் வெளிநாட்டுச் செலாவணித் திரவத்தன்மையினை அதிகரிப்பதற்கான மத்திய வங்கியின் நடவடிக்கைகள் திரவ பெற்றோலிய எரிவாயுவின் இறக்குமதிக்கு உதவியதுடன் அதன்மூலம் உள்நாட்டுச் சந்தையில் திரவ பெற்றோலிய எரிவாயு நிரம்பலின் இயல்புநிலை மீட்டெடுக்கப்பட்டது. 2022 ஓகத்தில், உள்நாட்டு திரவ பெற்றோலிய எரிவாயு விலைகளை நிர்ணயிப்பதற்கான செலவைப் பிரதிபலிக்கக்கூடிய சூத்திரமொன்றின் பின்பற்றுதலிற்கு அமைச்சரவை


ஒப்புதலளித்ததுடன் இதன் அமுலாக்கம் 2022 ஓகத்திலிருந்து தொடங்கப்பட்டது. லிட்றோ கேஸ் லங்கா லிமிடெட் 2022 ஏப்பிறல், யூலை, நவெம்பர் மற்றும் திசெம்பர் மற்றும் 2023 பெப்புருவரி ஆகிய மாதங்களில் உள்நாட்டு விலைகளை மேல்நோக்கித் திருத்தியதுடன் உலகளாவிய விலைத் தளர்த்தலினால் 2022 ஓகத்து, செத்தெம்பர் மற்றும் ஒத்தோபர் மற்றும் 2023 சனவரி ஆகிய மாதங்களில் விலைகளைக் கீழ்நோக்கித் திருத்தியது. அவற்றினைப் பின்பற்றி, லாப் கேஸ் பிஎல்சி நிறுவனம் உள்நாட்டு விலைகளை 2022 ஓகத்து மற்றும் ஒத்தோபர் மற்றும் 2023 சனவரி ஆகிய மாதங்களில் மூன்று கீழ்நோக்கிய திருத்தங்களுடன் 2022 மாச்சு மற்றும் யூன் மற்றும் 2023 பெப்புருவரி ஆகிய மாதங்களில் மூன்று முறை மேல்நோக்கித் திருத்தியது. மேலும், திரவ பெற்றோலிய எரிவாயு இறக்குமதிகளுக்கான துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தித் தீர்வை 2023 சனவரி 01இலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் 7.5 சதவீதத்திலிருந்து இறக்குமதிச் செலவின் 2.5 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது.

**உலகளாவிய வலுச்சக்தி விலைகளின் ஒட்டுமொத்தப் போக்கினைப் பின்தொடர்ந்து, 2022 மே தொடக்கம் குறிப்பிடத்தக்களவிலான மிதமடைதலொன்று பதிவு செய்யப்பட்டிருந்த போதிலும், 2022 காலப்பகுதியில் சராசரி உலகளாவிய திரவ பெற்றோலிய எரிவாயு விலைகள் தொடர்ந்தும் உயர் மட்டங்களில் காணப்பட்டன.** உலகளாவிய சந்தைகளில் திரவ பெற்றோலிய எரிவாயுவின் சராசரி விலை (30:70 என்ற புறொபேன்: பியூடேன் விகிதத்தின் அடிப்படையில்), உலகளாவிய வலுச்சக்தி சந்தையில் உயர்வடைந்த நிரம்பல் பக்க இடர்நேர்வுகள் காரணமாக 2022 ஏப்பிறலில் மெ.தொன்னொன்றிற்கு ஐ.அ.டொலர் 954 ஆக உயர்வடைந்து, 2022 திசெம்பரில் மெ.தொன்னொன்றிற்கு ஐ.அ.டொலர் 650இற்கு ஏறத்தாழ 31.9 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமையானது, உலகளாவிய நுகர்வுக் கேள்வியில் மிதமடைதலினைப் பிரதிபலித்தது. இருப்பினும், சீனாவில் கொவிட்-19 கட்டுப்பாடுகளின் தளர்த்தலுடன் உலகளாவிய கேள்வியில் எதிர்பார்க்கப்பட்ட உயர்விற்கு மத்தியில் 2023 முதற் காலாண்டில் உலகளாவிய திரவ பெற்றோலிய எரிவாயு விலைகள் மெ.தொன்னொன்றிற்கு ஐ.அ.டொலர் 700இற்கு அதிகமாக தொடர்ந்தும் காணப்பட்டது.

## மின்வலு

**வெளிநாட்டுச் செலாவணித் திரவத்தன்மைப் பற்றாக்குறை மற்றும் நீர்த்தேக்க மட்டங்களில் வீழ்ச்சி என்பவற்றிற்கு மத்தியில் மின்சார உருவாக்கத்திற்கான எரிபொருள் மற்றும் நிலக்கரி பற்றாக்குறையினால் 2022இல் மின்சார வழங்கல் பாதிப்படைந்தது.** இது மின்சாரத் துறையில் குறிப்பிடத்தக்க கேள்வி முகாமைத்துவ வழிமுறைகளைத் தேவைப்படுத்தி, குறிப்பாக மாச்சு மற்றும் ஏப்பிறல் மாத காலப்பகுதியில் நீண்ட நேர மின் தடையை ஏற்படுத்தி, பொருளாதார நடவடிக்கைகளைக் கடுமையாக பாதித்தது. இதற்கமைய, 2022இன் முற்பகுதியில் குறைந்தளவிலான நீர்த்தேக்க நீர் மட்டங்களுக்கு மத்தியில் கேள்வி முகாமைத்துவ உத்தியொன்றாக 2022 பெப்புருவரி தொடக்கம் நாளாந்த அட்டவணையிடப்பட்ட மின்வெட்டுகளை இலங்கை மின்சார சபை மேற்கொண்டது. 2022 ஏப்பிறல் முற்பகுதியில் மின்வெட்டுகளின் நீளம் நாளொன்றிற்கு 10 மணி நேரத்திற்கும் மேலாக அதிகரித்தமையானது, வறண்ட காலநிலை நிலைமைகள், எரிபொருளைக் கொள்வனவு செய்வதற்கான இலங்கை மின்சார சபையின் காசுப்பாய்ச்சல் அழுத்தங்களுக்கு மத்தியில் மின் உருவாக்கத்திற்கான எரிபொருள் பற்றாக்குறை மற்றும் நாட்டில் நிலவிய வெளிநாட்டுச் செலாவணி அழுத்தங்களின் காரணமாக எரிபொருளைக் கொள்வனவு செய்வதில் காணப்பட்ட தாமதம் என்பன காரணமாக நீர்த்தேக்க நீர் மட்டங்களில் சடுதியான வீழ்ச்சியினைப் பிரதிபலித்தது. 2022 மே தொடக்கம் செத்தெம்பர் வரையான மாத காலப்பகுதியில் பெய்த அடைமழையானது பாரியளவிலான நீர்மின் உருவாக்கத்தின் ஊடாக மின்சார வழங்கலிற்கு ஆதரவளித்ததுடன் அதன்மூலம் அனல் மின்சார வளங்களின் மீதான உயர்ந்தளவிலான தங்கியிருத்தலினைக் கட்டுப்படுத்தியது. இதற்கமைய, எரிபொருள் பற்றாக்குறைகள் மற்றும் அட்டவணையிடப்பட்ட பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்பு என்பவற்றின் காரணமாக நுரைச்சோலை நிலக்கரி மின் ஆலையின் சில அலகுகளின் இடைக்கிடையேயான மூடுதல்கள் என்பவற்றிற்கு மத்தியில் பல்வேறு அனல் மின்சார ஆலைகள் அடிக்கடி பணிநிறுத்தங்களுக்கு உட்பட்ட போதிலும் தூண்டுதலளிக்கின்ற காலநிலை போக்குகளின் கீழ் நீர்த்தேக்கங்களின் சாதகமான மட்டங்களுடன் 2022 மேயிலிருந்து நாளொன்றிற்கு ஒன்று தொடக்கம் மூன்று மணித்தியாலங்கள் வரை மின் வெட்டுக்கள் படிப்படியாக மட்டுப்படுத்தப்பட்டன. சாதகமான நீர்த்தேக்க மட்டங்கள் காணப்பட்ட போதிலும், 2022 செத்தெம்பரிலிருந்து 2023 ஏப்பிறல் வரை நிலக்கரி இறக்குமதி செய்யப்பட்ட காலப்பகுதியில்

வரைபடம் 3.6
மின்வலு உற்பத்திக் கலவை




*மூலம்:* இலங்கை மின்சார சபை

நிலக்கரிக் கொள்வனவுச் செய்முறையில் ஏற்பட்ட இடையூறுகள் காரணமாக மின்சார வழங்கலில் பாதிக்கப்படக்கூடியவர்களின் எண்ணிக்கை 2022இன் பிற்பகுதியில் அதிகரித்தன. வெளிநாட்டுச் செலாவணிப் பற்றாக்குறைகள், இலங்கை மின்சார சபையின் காசுப்பாய்ச்சல் பிரச்சனைகள் மற்றும் நிலக்கரி கொள்வனவு நடைமுறையில் காணப்பட்ட பிரச்சனை என்பன நிலக்கரிக் கப்பலேற்றங்களில் தாமதங்களை ஏற்படுத்தின. மின்சாரம் வழங்கலில் பாதிப்படையக்கூடிய தன்மைகளைத் தணிக்கும் பொருட்டு, நிலக்கரிக் கொள்வனவினை சீராக்கும் பொருட்டு அதிகாரிகளினால் அவசர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட வேளையில், 2022 செத்தெம்பரிலிருந்து நிலக்கரி இறக்குமதிக்கு அவசியமான வெளிநாட்டுச் செலாவணியினை வழங்கும் பொருட்டு கடன்கரைப்பு நிதியமொன்றினை தாபிப்பதன் மூலம் நிலக்கரிக் கொள்வனவினை மத்திய வங்கி தொடர்ந்து வசதிப்படுத்தியது. இருப்பினும், உள்நாட்டுச் சந்தையில் வெளிநாட்டுச் செலாவணித் திரவத்தன்மையில் படிப்படியான மேம்பாட்டுடன் இணைந்து நிலக்கரி நிதியத்திற்கு மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டுச் செலாவணிக் கொள்வனவு செய்தலானது 2023 முற்பகுதியில் நிறுத்தப்பட்டது.

3

**ஆண்டு காலப்பகுதியில் அனல் மின் உருவாக்கத்திற்கு அவசியமான நிலக்கரி மற்றும் எரிபொருள் இறக்குமதிகளுக்கான இடையூறுகளின் விளைவொன்றாக, 2022இல் மொத்த மின்சார உருவாக்கமானது 4.6 சதவீத வீழ்ச்சியொன்றினைப் பதிவுசெய்தது.** இதற்கமைய, மொத்த மின்வலு உருவாக்கமானது 2021இல் பதிவுசெய்யப்பட்ட 16,716 ஜிகாவாற்று மணித்தியாலங்களுடன் ஒப்பிடுகையில் 2022இல் 15,942 ஜிகாவாற்று மணித்தியாலங்களிற்கு வீழ்ச்சியடைந்தது. மொத்த நீர்மின் உற்பத்தி, எரிபொருள் எண்ணெய்யின் அடிப்படையிலமைந்த மின் உற்பத்தி மற்றும் நிலக்கரி மின் உற்பத்தி என்பன 2021உடன் ஒப்பிடுகையில் ஆண்டு காலப்பகுதியில் முறையே 5,364 ஜிகாவாற்று மணித்தியாலங்களிற்கு 4.9 சதவீதத்தினாலும் 2,467 ஜிகாவாற்று மணித்தியாலங்களுக்கு 6.3 சதவீதத்தினாலும் 5,174 ஜிகாவாற்று மணித்தியாலங்களிற்கு 6.3 சதவீதத்தினாலும் குறைவடைந்தன. மரபுசாரா மீள்புதுப்பிக்கத்தக்க வலு மூலங்களினூடாக மின் உற்பத்தியானது மீளாய்விற்கு உட்பட்ட காலப்பகுதியில் 2,937 ஜிகாவாற்று மணித்தியாலங்களிற்கு 0.5 சதவீத சிறியளவிலான வளர்ச்சியொன்றினைப் பதிவுசெய்தது. மொத்த மின்வலு உருவாக்கத்திற்கு நீர், எரிபொருள், நிலக்கரி மற்றும் மரபுசாரா மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி ஆகியவற்றின் பங்களிப்புக்கள் முறையே 33.6, 15.5, 32.5 மற்றும் 18.4 சதவீதங்களாக விளங்கி, ஆண்டு காலப்பகுதியில் செலவு கூடிய அனல் மின் வளங்களிலும் பார்க்க குறைந்த செலவில் மீள்புதுப்பிக்கத்தக்க வளங்கள் மீதான அதிகரித்த தங்கியிருத்தலைப் பிரதிபலிக்கின்றது. மேலும், இலங்கை மின்சார சபையானது மொத்த மின்வலு உருவாக்கத்தில் ஏறத்தாழ 76.7 சதவீதமாக விளங்கிய வேளையில், எஞ்சியவை

அட்டவணை 3.2
மின்வலுத் துறையின் செயலாற்றம்

| விடயம் | 2021 (அ) | 2022 (ஆ) | வளர்ச்சி வீதம் (%) 2021 (அ) | வளர்ச்சி வீதம் (%) 2022 (ஆ) |
|---|---|---|---|---|
| நிறுவப்பட்ட இயலளவு (மெ.வா.) | 4,186 | 4,084 | -1.9 | -2.4 |
| நீர்மின் (இ) | 1,383 | 1,413 | - | 2.2 |
| எரிபொருள் எண்ணெய் (ஈ) | 1,087 | 924 | -14.3 | -15.0 |
| நிலக்கரி | 900 | 900 | - | - |
| பாரம்பரியமற்ற புதுப்பிக்கத்தக்க வலு (உ) | 817 | 847 | 14.3 | 3.7 |
| உற்பத்தி செய்யப்பட்ட அலகுகள் (கி.வா.ம.) | 16,716 | 15,942 | 6.4 | -4.6 |
| நீர்மின் (இ) | 5,640 | 5,364 | 44.2 | -4.9 |
| எரிபொருள் எண்ணெய் (ஈ) | 2,634 | 2,467 | -37.0 | -6.3 |
| நிலக்கரி | 5,519 | 5,174 | -4.1 | -6.3 |
| பாரம்பரியமற்ற புதுப்பிக்கத்தக்க வலு (உ) | 2,922 | 2,937 | 56.6 | 0.5 |
| இலங்கை மின்சார சபையின் மொத்த விற்பனைகள் (கி.வா.ம.) | 15,214 | 14,520 | 6.5 | -4.6 |
| வீடு மற்றும் வணக்கத்தலம் | 5,320 | 5,124 | 2.9 | -3.7 |
| கைத்தொழில் | 4,822 | 4,334 | 15.8 | -10.1 |
| பொது நோக்கம், அரசு மற்றும் விடுதி | 3,342 | 3,415 | 3.2 | 2.2 |
| தெரு விளக்குகள் | 97 | 97 | -9.8 | -0.1 |
| லங்கா மின்சாரக் கம்பனிக்கு மொத்த விற்பனை | 1,633 | 1,550 | 1.7 | -5.1 |
| லங்கா மின்சாரக் கம்பனியின் விற்பனை (கி.வா.ம.) | 1,603 | 1,559 | -1.3 | -2.7 |
| வீடு மற்றும் வணக்கத்தலம் | 717 | 699 | -3.0 | -2.6 |
| கைத்தொழில் | 306 | 266 | 9.6 | -13.2 |
| பொது நோக்கம், அரசு மற்றும் விடுதி | 557 | 569 | -4.5 | 2.2 |
| தெரு விளக்குகள் | 23 | 26 | 3.4 | 10.7 |
| இலங்கை மின்சார சபையின் திரண்ட ஊடுகடத்தல் மற்றும் பங்கீட்டு இழப்பு (%) | 9.0 | 8.9 | -1.1 | -0.7 |
| பாவனையாளர்களின் எண்ணிக்கை ('000) (ஊ) | 7,401 | 7,531 | 2.6 | 1.7 |
| இதில் வீடு மற்றும் வணக்கத்தலங்கள் | 6,411 | 6,509 | 2.2 | 1.5 |
| கைத்தொழில் | 73 | 75 | 4.2 | 2.5 |
| பொது நோக்கம், அரசு மற்றும் விடுதி | 915 | 944 | 5.5 | 3.2 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) சிறிய நீர் மின்வலு நிலையம் நீங்கலாக
(ஈ) சுயாதீன வலு உற்பத்தியாளர்கள் உள்ளடங்கலாக
(உ) சிறிய நீர்மின் உள்ளடங்கலாக பாரம்பரியமற்ற புதுப்பிக்கத்தக்க வலுவைக் குறிக்கிறது
(ஊ) லங்கா மின்சார கம்பனியின் நுகர்வோர் உள்ளடங்கலாக

*மூலங்கள்:* இலங்கை மின்சார சபை வரையறுக்கப்பட்ட லங்கா மின்சாரக் கம்பனி


சுயாதீன மின்வலு உற்பத்தியாளர்களிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டது. இதேவேளை, மொத்த மின்வலு உருவாக்கத்தின் விகிதாசாரமொன்றாக ஒட்டுமொத்த ஊடுகடத்தல் மற்றும் பகிர்ந்தளிப்பு நட்டம் 2021இல் பதிவுசெய்யப்பட்ட 9.0 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2022இல் 8.9 சதவீதத்திற்கு வரையறுக்கப்பட்டது. 2023 இன் முற்பகுதியிலிருந்து, பருவகால வறண்ட காலநிலையின் தொடக்கத்தினால் நீர்த்தேக்க மட்டங்களில் ஏற்பட்ட துரித குறைவடைதல் காரணமாக அனல் மின்சார மூலங்களின் மீது மின் உருவாக்கம் முக்கியமாகத் தங்கியிருந்தது.

**மின் தடைகள் மற்றும் முக்கிய பயனாளர் வகைகளிலிருந்தான கேள்வியின் சுருக்கம் என்பவற்றினால் உந்தப்பட்டு, மொத்த மின்சார விற்பனைகள் 2022இல் 14,520 ஜிகாவாற்று மணித்தியாலங்களிற்கு 4.6 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன.** கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றினைத் தொடர்ந்து பொருளாதார நடவடிக்கைகளின் மீட்சியுடன் இணைந்து 2022இன் முற்பகுதியில் மின்சார விற்பனைகளில் முன்னேற்றங்கள் காணப்பட்ட போதிலும், மின் தடைகள் காணப்பட்டதன் காரணமாக மின்சாரத்தின் நுகர்வு அளவுகள்

அதன்பின்னர் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்தன. மின் துண்டிப்புக்களின் தாக்கத்தினைப் பிரதிபலித்து, வீட்டு, கைத்தொழில் மற்றும் அரச வகைகளுக்கான விற்பனைகள் ஆண்டு காலப்பகுதியில் முறையே 3.7, 10.1 மற்றும் 8.3 சதவீதங்களாக சுருக்கங்களினைப் பதிவுசெய்தன. 2021இல் தாழ்ந்த புள்ளிவிபரத் தளத்தாக்கத்தின் முதன்மைக் காரணமாக, விடுதிகள் மற்றும் பொது நோக்கத்தினைக் கொண்ட வகைகளுக்கான மின்சார விற்பனைகள் முறையே 11.7 சதவீதம் மற்றும் 2.3 சதவீதம் கொண்ட அதிகரிப்புக்களைப் பதிவுசெய்தன. அதேவேளை, அதிநவீன தொழில்நுட்ப வசதிகளைப் பின்பற்றுவதற்கான அவசியத்தினை அடையாளங்கண்டு, இலங்கை மின்சார சபையானது வலுப் பயன்பாடு குறித்த துல்லியமான மற்றும் நிகழ்நேர விற்பனைத் தரவுகளைச் சேகரிக்கும் பொருட்டு திறன்மானி வாசிப்புத் தொழில்நுட்பங்களை நடைமுறைப்படுத்துவதற்கான செயற்றிட்டமொன்றினை ஆரம்பித்த வேளையில், பயனர்களுக்கு தமது நுகர்வு மட்டங்களை அறிவித்தது. இருப்பினும், திறன்மானி வாசிப்புக் கருவிகளின் உயர் செலவுகள், நுகர்வோர்களிடையே விழிப்புணர்வின்மை மற்றும் தொழில்நுட்ப சிக்கல்கள் உள்ளடங்கலாக பல்வேறு காரணிகளின் காரணமாக இச்செயற்றிட்டத்தின் முன்னேற்றம் தடைப்பட்டது. வினைத்திறன் வாய்ந்த மானி வாசிப்பு முறைமையொன்றினை இயலுமைப்படுத்துவதனையும் பட்டியலிடல் நடைமுறையிலுள்ள சிக்கல்களைக் குறைப்பதனையும் உரிய விதத்தில் கருத்திற்கொண்டு, நிகழ்நேர அடிப்படையில் துல்லியமான வலுப் பயன்பாட்டுத் தரவு சேகரிப்பதற்கு இலங்கை மின்சார சபையின் துரித வழிமுறைகளின் நடைமுறைப்படுத்தலானது தொடர்ந்தும் முக்கியமானதொன்றாகக் காணப்படுவதுடன் அதன்மூலம் இலங்கை மின்சார சபையின் காசுப்பாய்ச்சல்கள் மேம்படுத்தப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

**இலங்கை மின்சார சபையின் நிதியியல்சார் சிக்கல்களை மேலும் மோசமடையச்செய்யும் மின் உருவாக்கத்தின் உயர்வடைந்து செல்கின்ற செலவினைக் கருத்திற்கொண்டு எட்டு ஆண்டு காலத்திலானதோர் நீண்ட இடைவெளிக்குப் பிறகு 2022இல் மின்சார தீர்வைகள் மேல்நோக்கித் திருத்தப்பட்டன.** 2022 ஓகத்து 10 அன்று, சராசரியாக 75 சதவீத மேல்நோக்கிய திருத்தமொன்றுடன் மின்சாரத் தீர்வைகள் திருத்தப்பட்ட வேளையில் 0-30 அலகுகள் மற்றும் 31-60 அலகுத் தொகுதிகள் கொண்ட குறைந்த நுகர்வு வகைகளுக்கான நிலையான கட்டணத்தில் சலுகைகளை அனுமதிப்பதன் மூலம் குறைந்தந்தளவிலான வருமானம் ஈட்டுகின்ற குடும்பங்களின் வலு கட்டுப்படியாகும் தன்மையினைக் கருத்திற்கொண்டது. இருப்பினும், இம் மேல்நோக்கிய திருத்தத்திற்குப் பின்னரும், இலங்கை மின்சார சபை அவற்றின் நிதியியல் கூற்றுக்களில் பிரதிபலித்தவாறு நிதியியல் செயலாற்றத்தின் சமநிலை மட்டமொன்றினை அடைவதற்குத் தவறியமையானது, இலங்கை மின்சார சபையின் நிதியியல் ஆற்றலினை நிச்சயப்படுத்தும் பொருட்டு கிரமமான செலவைப் பிரதிபலிக்கக்கூடிய விலைத் திருத்தங்களின் தேவைப்பாட்டினை எடுத்துக்காட்டியது. அத்தகைய பரிசீலனையுடன், தீர்வை சீராக்கத்தின் அடிப்படையிலமைந்த தன்னியக்க செலவு மீட்சியொன்றினூடாக 2023இலிருந்து அரையாண்டு தீர்வைத் திருத்தப் பொறிமுறையொன்றினைத் தாபிப்பதற்கு அமைச்சரவை ஒப்புதலளித்தது. அதற்கமைய, மின்சாரத் தீர்வைகள் 2023 பெப்புருவரி 15இலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் சராசரியாக 66 சதவீதத்தினால் மீண்டும் திருத்தப்பட்டன. இத்தீர்வைத் திருத்தத்தின் கீழ், மொத்த நுகர்வோரில் 75 சதவீதத்திற்கும் அதிகமாக விளங்கும் மாதமொன்றிற்கு 0-90 அலகுகளை நுகரும் வீட்டு நுகர்வோர் வகைக்கான நிலையான மற்றும் வலு வீதங்கள் ஆகிய இரண்டும் கணிசமானளவில் அதிகரித்தது. அதற்கமைய, 90 அலகுகளின் மாதாந்த நுகர்விற்குக் கீழுள்ள நுகர்வோர் வகைகளுக்கான மின்சார அலகொன்றின் விலை 160 சதவீதத்திலிருந்து 275 சதவீத வீச்சினுள் மேல்நோக்கித் திருத்தப்பட்டன. மேலும், பயன்பாட்டின் அடிப்படையிலான தொகுதி வகைப்பாட்டிற்கமைய, பொது நோக்கு, விடுதி மற்றும் அரசாங்கம் போன்ற ஏனைய துறைகளில் மின்சார அலகொன்றின் விலை 70 தொடக்கம் 100 சதவீதம் வரை மேல்நோக்கித் திருத்தப்பட்டுள்ள வேளையில், இவ்வண்மைய திருத்தக் காலப்பகுதியில் கைத்தொழில்துறை வகையின் கீழான நுகர்வோர் தொகுதிகள் மின்சாரத்தின் அலகு விலையில் 25 சதவீத அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்தன. மின்சாரத் தீர்வைகளின் அண்மைய மேல்நோக்கிய திருத்தத்திற்கு மத்தியில், இலங்கை மின்சார சபையின் 2023இற்கான கிலோ வாற்று மணித்தியாலமொன்றிற்கான ரூ.48.74 கொண்ட மதிப்பிடப்பட்ட சராசரி விற்பனை விலையுடன் ஒப்பிடுகையில் குறித்த சில நுகர்வோர் வகைகள் மானியமளிக்கப்பட்ட வீதங்களையே தொடர்ந்தும் பயன்படுத்துகின்றனர். இருப்பினும், இலங்கை மின்சார சபையின் அனைத்தையுமுள்ளடக்கியதொரு மறுசீரமைத்தலின்றி வாடிக்கையாளர்களுக்கு எவ்வித நன்மையும்

வரைபடம் 3.7
மின்வலுவிற்கான சராசரி செலவுகள் மற்றும் சராசரி தீர்வைகள்




(அ) உருவாக்கல் இடத்தில் சராசரிச் செலவு

*மூலம்:* இலங்கை மின்சார சபை

அட்டவணை 3.3
**மின்வலுவின் சராசரி செலவுகள் மற்றும் சராசரி தீர்வைகள்**

| விடயம் | 2021 (அ) | 2022 (ஆ) | வளர்ச்சி வீதம் (%) | |
|---|---|---|---|---|
| | | | 2021 (அ) | 2022 (ஆ) |
| **இலங்கை மின்சார சபையின் சராசரி செலவு (ரூ./கிவாம)** | **9.61** | **20.35** | **-7.1** | **111.8** |
| நீர்மின் | 1.72 | 1.80 | -26.2 | 4.7 |
| எரிபொருள் எண்ணெய் | 32.03 | 67.69 | 10.4 | 111.3 |
| நிலக்கரி | 12.43 | 27.32 | 14.4 | 119.8 |
| **தனியாரின் சராசரி செலவு (ரூ./கிவாம)** | **21.67** | **32.04** | **-5.5** | **47.9** |
| எரிபொருள் எண்ணெய் | 30.35 | 69.65 | 10.2 | 129.5 |
| பாரம்பரியமற்ற புதுப்பிக்கத்தக்க வலு | 16.22 | 14.98 | -14.6 | -7.6 |
| **திரண்ட சராசரி செலவு (ரூ./கிவாம)** | | | | |
| உருவாக்க நிலையில் | 12.38 | 23.01 | -11.5 | 85.9 |
| விற்பனை நிலையில் | 19.42 | 33.65 | -10.4 | 73.3 |
| **சராசரித் தீர்வை (ரூ./கிவாம)** | **16.35** | **21.25** | **-2.2** | **30.0** |
| வீடு | 14.91 | 19.11 | 0.3 | 28.2 |
| பொதுப் பயன் | 23.42 | 27.36 | -2.0 | 16.8 |
| அரசு | 18.25 | 23.84 | 1.1 | 30.6 |
| கைத்தொழில் | 14.70 | 20.63 | -0.9 | 40.3 |
| விடுதி | 17.79 | 21.39 | -1.9 | 20.2 |

(அ) திருத்தப்பட்டது.
(ஆ) தற்காலிகமானது

*மூலம்:* இலங்கை மின்சார சபை

3

சென்றடையாது. தீர்வைகளின் தொடர்ச்சியான அதிகரிப்புக்கள் உயர்ந்தளவிலான உற்பத்திச் செலவினையும் சமூகத்தின் சில பிரிவினரால் மின்சார பட்டியல் கொடுப்பனவுகளைத் தாங்கிக்கொள்ள முடியாமை காரணமாக சமூக அமைதியின்மைகளினையும் தோற்றுவித்தன. இவ்வகையில், குறித்த சில தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களால் செலுத்தப்படாத பட்டியல்கள் சேகரிக்கப்பட்டு, சர்ச்சைக்குரிய பட்டியல்கள் கொடுப்பனவுகள் விரைவாக தீர்க்கப்பட வேண்டும்.

**அனல் மின்வலு உருவாக்கத்தின் செலவு உயர்வடைந்த போதிலும், நீர்மின் உற்பத்தியின் மீதான அதிகரித்த தங்கியிருப்பு மற்றும் மின்சாரத் தீர்வைகளுக்கான மேல்நோக்கிய திருத்தங்கள் என்பன 2022இல் இலங்கை மின்சார சபையின் நிதியியல் செயலாற்றத்தினை மேம்படுத்த உதவின.** அதற்கமைய, தீர்வைத் திருத்தத்துடன் இணைந்து காசுப்பாய்ச்சல் மேம்பாடுகளின் பகுதியளவிலான காரணத்தினால் இலங்கை மின்சார சபையின் தொழிற்பாட்டு நட்டமானது 2022 ஓகத்திலிருந்து மிதமடைந்தது. இருப்பினும், ஒன்றுசேர்ந்த அடிப்படையில், இலங்கை மின்சார சபை 2021இல் பதிவுசெய்யப்பட்ட ரூ.34.6 பில்லியன் கொண்ட நட்டத்துடன் ஒப்பிடுகையில் 2022இல் ரூ.272.9 பில்லியன் நட்டமொன்றினை அறிக்கையிட்டது. இது ரூ.94.7 பில்லியன் பெறுமதியான நுரைச்சோலை நிலக்கரி வலு நிலையத்தின் வெளிநின்ற வெளிநாட்டுக் கடன் மீள்மதிப்பீட்டு நட்டத்தை உள்ளடக்கியுள்ளது. இலங்கை மின்சார சபை. வங்கிகளிலிருந்தான் குறுங்கால படுகடன் மற்றும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கும் சுயாதீன மின்வலு உற்பத்தியாளர்களுக்குமான ஏனைய வெளிநின்ற பொறுப்புக்கள் என்பன 2021 இறுதியளவில் பதிவுசெய்யப்பட்ட 289.0 பில்லியனிலிருந்து 2022 இறுதியளவில் ரூ.361.9இற்கு அதிகரித்தன. இதேவேளை, புதுப்பிக்கத்தக்க வலு கொள்வனவுகளை மேற்கொள்வதற்கு 2021இன் பிற்பகுதியிலிருந்து இலங்கை மின்சார சபையின் மூலம் தீர்ப்பனவு செய்யப்படாத கொடுப்பனவு நிலுவைகள் ரூ.37.3 பில்லியனாக விளங்கியமையானது புதுப்பிக்கத்தக்க துறையின் பங்களிப்பினை மின்வலு உருவாக்கத்திற்கு விரிவாக்குவதற்கானதொரு தடையாக தொடர்ந்தும் காணப்பட்டது. இதேவேளை, அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் அடையாளங்காணப்பட்ட பொறுப்புக்களை அரசாங்கத்தின் ஐந்தொகைக்கு மாற்றுவதுடன் அதன்மூலம் அத்தகைய நிறுவனங்களின் நிதியியல் ஆற்றல்வாய்ந்த தன்மையினை வலுப்படுத்துவதற்கான அரசாங்கத்தின் முயற்சிகளின் கீழ், ஏழு செயற்றிட்டங்களின் கீழான ரூ.61.0 பில்லியன் தொகையிலான கடன் பகிர்ந்தளிப்பு மற்றும் நுரைச்சோலை செயற்றிட்டத்தின் ரூ.85.6 பில்லியன் தொகையிலான படுகடன் பணிக்கொடுப்பனவுகள் ஆகிய இலங்கை மின்சார சபையின் பொறுப்புகளை அரசாங்கத்திற்கு மாற்றுவதற்கான அமைச்சரவை ஒப்புதல் அளிக்கப்பட்டது. இதன் விளைவாக, இலங்கை மின்சார சபையின் மொத்த நீண்ட காலப் பொறுப்புக்கள் 2021 இறுதியில் பதிவுசெய்யப்பட்ட ரூ.541.2 பில்லியனிலிருந்து 2022 இறுதியளவில் ரூ.346.0 பில்லியனிற்கு வீழ்ச்சியடைந்தன. கிரமமான செலவைப் பிரதிபலிக்கக்கூடிய தீர்வைத் திருத்தங்களுடன் இணைந்த இவ்வழிமுறைகளுடன் இலங்கை மின்சார சபையின் காசுப்பாய்ச்சல்களில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் எதிர்பார்க்கப்படுவதுடன் அதன்மூலம் மின்சாரத்திற்கான கேள்வியினை இடையூறுகளின்றி பூர்த்தி செய்வதனை இயலுமைப்படுத்தும் வேளையில், அரசாங்க காசுப்பாய்ச்சல்கள் மற்றும் ஒட்டுமொத்த பொருளாதாரம் என்பன மீதான சுமையினைக் குறைக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

**தேவையான மறுசீரமைப்புக்களை நடைமுறைப்படுத்துவதில் காணப்பட்ட தொடர்ச்சியான தாமதங்கள் காரணமாக, மின்சார மற்றும் வலுத் துறையில் ஏற்பட்ட உயர்வடைந்த பாதிக்கப்படக்கூடிய தன்மைகள், 2022இல் குறிப்பிடத்தக்க சமூக பொருளாதார செலவுகளை ஏற்படுத்தியதுடன், அதன்மூலம் நாட்டின் வலுப் பாதுகாப்பினை நிச்சயப்படுத்துவதற்கான மறுசீரமைப்புக்களின் துரித நடைமுறைப்படுத்தலிற்கான அவசியத்தினை எடுத்துக்காட்டியது.** மின்சார மற்றும் வலுத் துறையை அரசாங்க வரவு செலவுத்திட்டத்தில் சுமையொன்றாக அன்றி பொருளாதார ரீதியாக ஆற்றல்வாய்ந்த துறையொன்றாக மாற்றும் நோக்கில் அரசாங்கம் 2022இல் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டது. 2022இல் நிதி, கொள்கை உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் கீழ் நிறுவப்பட்ட அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளை மறுசீரமைக்கின்ற அலகு, இலங்கை மின்சார சபை உள்ளடங்கலாக அரசிற்குச் சொந்தமான வியாபார நிறுவனங்களை மறுசீரமைப்பதனை வசதிப்படுத்துமென எதிர்பார்க்கப்படுகின்றது. இதேவேளை,

வலுத்துறையினை நீடித்துநிலைத்திருக்கின்றதொரு முறையில் அபிவிருத்தி செய்வதற்கும், பொருத்தமான விதந்துரைகளை முன்வைப்பதற்கும், தீர்மானங்களின் நடைமுறைப்படுத்தலினை துரிதப்படுத்துவதற்கு அவசியமான வழிகாட்டலினை வழங்குவதற்கும் இலங்கை மின்சார சபையின் முக்கிய தொழிற்பாடுகளான உருவாக்கம், ஊடுகடத்தல், பகிர்ந்தளிப்பு மற்றும் ஏனைய தொழிற்பாடுகளைப் பிரிப்பதன் ஊடாக இலங்கை மின்சார சபையின் மறுசீரமைப்பு உள்ளடங்கலாக கொள்கைகளையும் உபாயங்களையும் அடையாளம் காண்பதற்கு 2022 ஓகத்தில் அமைச்சரவைத் துணைக் குழுவொன்று நியமிக்கப்பட்டது. அதற்கமைய, 'அடுத்த தசாப்தத்திற்கான தேசிய வலு வாய்ப்புக்கள், உபாயங்கள் மற்றும் வழிகாட்டுதல்' குறித்து அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைக்கு 2022இன் பிற்பகுதியில் ஒப்புதலளிக்கப்பட்டது. மேலும், 2022-2041இற்கான நீண்ட கால உற்பத்தி விரிவாக்கத் திட்டமானது 2022இல் தயாரிக்கப்பட்டது. இவ்வபிவிருத்தித் திட்டம் 2030 ஆண்டளவில் மொத்த மின்சார உற்பத்தியில் புதுப்பிக்கத்தக்க வலுவின் பங்கினை 70 சதவீதத்திற்கு விரிவுபடுத்துமென எதிர்பார்க்கப்படுகின்ற வேளையில், 2050 ஆண்டளவில் மின்வலு உருவாக்கத்தில் காபன் சமநிலைமைக்கு உறுதியளிப்பதுடன் புதிய நிலக்கரி மின்வலு ஆலைகளின் நிர்மாணத்தினை நிறுத்தி தூய வலு மூலங்களிலிருந்து இயலளவினை விரிவுபடுத்துமென எதிர்பார்க்கப்படுகின்றது. 2023-2042இற்கான இற்றைப்படுத்தப்பட்ட நீண்ட கால உற்பத்தி விரிவாக்கத் திட்டமானது அரசாங்கக் கொள்கைகளுக்கு இணங்க வரைவு செய்யப்பட்டு 2022 செத்தெம்பரில் இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் ஒப்புதலிற்குச் சமர்ப்பிக்கப்பட்டதுடன் அதற்கான ஒப்புதல் 2023 பெப்புருவரியில் பெறப்பட்டது. இதேவேளை, 2009ஆம் ஆண்டின் 20ஆம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டமானது புதுப்பிக்கத்தக்க வலுத் துறையின் வளர்ச்சியினை வசதிப்படுத்தும் பொருட்டு நடைமுறைத் தடைகளை நீக்கித் திருத்தப்பட்டு 2022ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க இலங்கை மின்சாரச் (திருத்தம்) சட்டமாக 2022 யூனில் வெளியிடப்பட்டது.

**வலு மூலங்களைப் பன்முகப்படுத்துதல் மற்றும் உற்பத்தி இயலளவினை விரிவுபடுத்துதல் என்பன எதிர்வருகின்ற காலப்பகுதியில் அதிகரித்துச் செல்லும் வலுக் கேள்வியினை பூரணப்படுத்துவதில் அரசாங்கத்தின் முக்கிய முன்னுரிமைகளில் ஒன்றாகக் காணப்படுகின்றன.** பல்வேறு புதிய மின்வலு ஆலைகளை நிர்மாணிப்பதற்கான திட்டங்களும் செயற்றிட்டங்களும் குறைந்தளவிலானதொரு வேகத்திலேனும் தற்போது முன்னெடுக்கப்படுகின்றன. மரபார்ந்த நிலக்கரி மற்றும் எரிபொருள் அடிப்படையிலமைந்த மின்வலு உருவாக்கத்தின் பொருளாதார மற்றும் சூழல் தாக்கங்களினைக் கருத்திற்கொண்டு, திரவமாக்கப்பட்ட இயற்கை எரிவாயு போன்ற புதிய வலு மூலங்களை உள்ளடக்குவதன் மூலம் வலுக் கலவையினைப் பன்முகப்படுத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இதற்கமைய, கெரவலப்பிட்டியில் 300 மெகாவாற்று சோபதனவி திரவ இயற்கை வாயு வலு ஆலை நிர்மாணிக்கப்பட்டு வருவதுடன் இது 2024இல் தொழிற்படத் தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது. கெரவலப்பிட்டியில் இரண்டாவது 300 மெகாவாற்று திரவ இயற்கை வாயு வலு ஆலைக்கான பூர்வாங்கச் செய்முறையும் முன்னெடுக்கட்டு வருவதுடன் இது 2025 தொடக்கம் தொழிற்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. 2023-2042 இற்கான நீண்ட கால உற்பத்தி விரிவாக்கத் திட்ட வரைவிற்கமைய, 200 மெகாவாற்று இயலளவு கொண்ட உள்ளக தகன இயந்திர ஆலை மற்றும் 100 மெகாவாற்று இயலளவு கொண்ட எரிவாயு சுழலி ஆலை (அனல்மின்னின் அடிப்படையிலமைந்த) என்பன முறையே 2026 மற்றும் 2027 ஆம் ஆண்டுகளில் மின்கட்டமைப்பிற்குள் சேர்க்கப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இருப்பினும், 2023-2042 இற்கான நீண்ட கால உற்பத்தி விரிவாக்கத் திட்டத்தின் பிரகாரம், பல்வேறு பழைமைவாய்ந்த அனல்மின் ஆலைகளின் அட்டவணையிடப்பட்ட கைவிடலுடன் நாட்டின் நிறுவப்பட்ட இயலளவினை விரிவுபடுத்தும் பொருட்டு, பல்வேறு அனல்மின் வலு ஆலைகள் மற்றும் திரவ இயற்கை வாயு வலு ஆலைகள் எதிர்வருகின்ற ஆண்டு காலப்பகுதியில் மின்கட்டமைப்புடன் இணைக்கப்படும். அதேசமயம், வலு ஊடுகடத்தல் மற்றும் பகிர்ந்தளிப்பு முறைமை என்பன நட்டங்களினைக் குறைப்பதற்கும், மின்கட்டமைப்பிற்கு மேலதிக வலு மூலங்களை இணைப்பதற்கும் மற்றும் முறைமையின் நம்பகத் தன்மையினைப் பேணுவதற்கும் பல்வேறு செயற்றிட்டங்களின் மூலமாக விரிவாக்கப்பட்டு வலுப்படுத்தப்படுகின்றன.

**செலவுமிக்க அனல்மின் வலு மீதான தாங்கியிருப்பினைக் குறைக்கும் நோக்குடன் சுற்றுச்சூழல், சமூக மற்றும் ஆளுகைசார் பிரச்சனைகள் என்பவற்றின் புறநிலைத் தன்மையிலமைந்த பகுப்பாய்விற்குட்பட்ட புதிய மீள்புதுப்பிக்கத்தக்க வலு ஆலைகளை நிர்மாணிப்பதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன.** இதற்கமைய, 35 மெகாவாற்று பிரோட்லேன்ட் நீர்மின்வலுச் செயற்றிட்டம் 2022 இறுதியில் இறுதிக்கட்டத்தினை அடைந்த அதேவேளையில் உமா ஓயா (120 மெகாவாற்று), மொரகொல்ல (31 மெகாவாற்று), ஜின் கங்கா (20 மெகாவாற்று) மற்றும் தல்பிட்டிகல (15 மெகாவாற்று) போன்ற ஏனைய நீர்மின்வலுச் செயற்றிட்டங்கள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டன. 2021இன் நடுப்பகுதியளவில் பாரியளவிலான 100 மெகாவாற்று மன்னார் காற்றாலையின் இணைப்பினைத் தொடர்ந்து, தற்போதுள்ள ஆலைக்கான நீடிப்பொன்றாக 50 மெகாவாற்று மன்னார் காற்றாலைப் பூங்கா மற்றும் மன்னாரில் ஏனைய இரண்டு காற்றாலைகள் (கட்டம் II மற்றும் III, ஒவ்வொன்றும் 100 மெகாவாற்று) என்பன உள்ளடங்கலாக பல்வேறு புதிய காற்றாலைச் செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன. மேலும், வேரவில் காற்றாலைச்

3

3

செயற்றிட்டம் (200 மெகாவாற்று), கரைச்சி காற்றாலைத் செயற்றிட்டம் (100 மெகாவாற்று), பொன்னாலை காற்றாலை மின்வலுச் செயற்றிட்டம் (100 மெகாவாற்று) மற்றும் மாந்தை மேற்கு காற்றாலை மின்வலுச் செயற்றிட்டம் (100 மெகாவாற்று) உள்ளடங்கலாக மீள்புதுப்பிக்கத்தக்க மின்வலு வள அபிவிருத்திச் செயற்றிட்டத்தில் (2021-2026) குறித்துக் காட்டப்பட்டுள்ள சாத்தியம் வாய்ந்த பகுதிகளில் காற்றாலை மின்வலுச் செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் பூர்வாங்க கட்டத்தில் காணப்படுகின்றன. வலுப் பூங்கா அபிவிருத்திச் செயற்றிட்டங்களின் கீழ், 233 மெகாவாற்று காற்றாலை வலு இயலளவு மற்றும் 150 மெகாவாற்று சூரிய வலு இயலளவு கொண்ட பூநகரி மீள்புதுப்பிக்கத்தக்க வலுப் பூங்காச் செயற்றிட்டத்திற்காக 100 மெகாவாற்று காற்றாலை மின்வலு இயலளவினை நிறுவுவதற்கான ஆரம்ப அபிவிருத்தி வழிமுறைகள் 2022இல் முன்னெடுக்கப்பட்டன. 100 மெகாவாற்று சியம்பலாண்டுவ சூரிய வலுச் செயற்றிட்டத்தின் நிர்மாணமானது ஆண்டு காலப்பகுதியில் முன்னெடுக்கப்பட்ட வேளையில், மின்வலு நிலையத்தினை வினைத்திறன்மிக்க விதத்தில் வடிவமைப்பதற்குப் பயன்படுத்தப்படும் தரவுகளைத் திரட்டுவதற்குச் செயற்றிட்டப் பகுதியில் வானிலை நிலையமொன்று நிறுவப்பட்டது. மேலும், ஹம்பாந்தோட்டை மற்றும் திருகோணமலை ஆகிய பகுதிகளில் சூரிய வலு இயலளவினை விரிவுபடுத்துவதற்காக பாரியளவிலான சூரிய வலுச் செயற்றிட்டங்களுக்கான சாத்திய ஆய்வுகள் ஆரம்பிக்கப்பட்டன. சூரிய பால சங்கிராமயவின் கீழ், மேல் கூரையில் பொருத்தப்பட்ட சூரிய முறைமையின் மூலம் தேசிய மின்கட்டமைப்பிற்கு மேலதிகமான இயலளவு 2022இல் ஏறத்தாழ 231 மெகாவாற்றாக விளங்கி, அதேசமயம் ஏறத்தாழ 32 மெகாவாற்று இயலளவு கொண்ட செயற்றிட்டங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளதுடன் இதற்கான மின்வலு கொள்வனவு ஒப்பந்தங்களும் கையெழுத்திடப்பட்டன. இதற்கமைய, இச்செயற்றிட்டத்தின் கீழ் தேசிய மின்கட்டமைப்பிற்கு அதன் தொடக்கத்திலிருந்து மொத்தமாக ஏறத்தாழ 670 மெகாவாற்று மின்சாரம் இணைக்கப்பட்டுள்ளது. அரச கட்டிடங்களில் சூரிய மேல் கூரைகள், குறைந்த வருமானம் கொண்ட வீட்டு அலகுகள் மற்றும் சமய ஸ்தலங்கள் என்பவற்றிற்கான வலுக் களஞ்சிய வசதிகளுடன் கூடிய சூரிய சக்தி தொகுதிகள் மற்றும் நோ்மாற்று நீர் சுத்திகரிப்பு ஆலைகள் என்பவற்றின் நிறுவுதல் மற்றும் 135 மெகாவாற்று சூரிய சக்தி இயலளவினை இணைப்பதற்கான மிதவை சூரிய சக்தி முன்னோடிச் செயற்றிட்டங்கள் என்பன ஐ.அ.டொலர் 100 மில்லியன் கொண்ட இந்திய கொடுகடன் வசதியின் கீழ் 2022இல் ஆரம்பிக்கப்பட்டன. இந்தியாவிலிருந்தான ஐ.அ.டொலர் 11 மில்லியன் நிதியுதவியுடன் அனலைதீவு, நெடுந்தீவு மற்றும் நயினாதீவு ஆகிய யாழ்ப்பாணத் தீவுகளில் கலப்பு மீள்புதுப்பிக்கத்தக்க வலு முறைமையொன்றினை நடைமுறைப்படுத்துவதற்கான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. இச்செயற்றிட்டம் சூரிய ஒளி, காற்று, டீசல் மற்றும் லித்தியம்-அயன் சேமிப்பு மின்கலங்கள் என்பவற்றினை அடிப்படையாகக்கொண்ட கலப்பு மின்வலு ஆலைகளை உள்ளடக்கும் என்பதுடன் 2024இன் முற்பகுதியளவில் முடிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. கடந்த காலங்களில் செலவுகளில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க மாற்றங்களினைக் கருத்திற்கொண்டு, மீள்புதுப்பிக்கத்தக்க வலுத் துறையை ஊக்குவிக்கின்ற நோக்கில், இலங்கை மின்சார சபையின் மீள்புதுப்பிக்கத்தக்க வலு கொள்வனவுகளுக்கு ஏற்புடையதாகின்ற தீர்வை முறைமை 2012இலிருந்து முதல் முறையாக, 2022 செத்தெம்பரில் திருத்தப்பட்டது. இதேவேளை, சூரிய சக்தி உருவாக்கத்தின் விரிவாக்கத்திற்கு ஆதரவளிக்கும் நோக்கில் 2023இன் முற்பகுதியில் சூரியக் கல மாற்றிகளின் இறக்குமதிகளுக்கான துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தித் தீர்வை நீக்கப்பட்டது. 2022இல் மீள்புதுப்பிக்கத்தக்க வலுத் துறையினை விரிவுபடுத்துவதற்கான பல்வேறுபட்ட முயற்சிகள் காணப்பட்ட போதிலும், மீள்புதுப்பிக்கத்தக்க வலுத் துறையின் அபிவிருத்தியானது துறையின் முன்னேற்றத்தினைத் தடுக்கின்ற பல இடையூறுகளுடன் தொடர்ந்தும் போராடியது. ஏனையவற்றிற்கிடையில், உயர்ந்தளவிலான மூலதனச் செலவுகள் மற்றும் இறக்குமதிச் செலவுகள், சிறியளவிலான மின்வலு உற்பத்தியாளர்களுக்கு பணம் செலுத்துவதில் காணப்பட்ட தாமதம், தேசிய ஊடுகடத்தல் மின்கட்டமைப்பின் இயலளவு மட்டுப்பாடுகள் போன்றன நாட்டின் மீள்புதுப்பிக்கத்தக்க வலுத் துறையின் விரிவாக்கத்திற்குத் தொடர்ந்தும் தடையாக அமைந்தன. இப்பின்னணியில், நாட்டின் வலுப் பாதுகாப்பினை நீடித்து நிலைக்கின்ற முறையில் நிச்சயப்படுத்தும் பொருட்டு மீள்புதுப்பிக்கத்தக்க வலு முதலீடுகளுக்குத் தூண்டுதலளிக்கின்ற சூழலொன்றினைக் கட்டியெழுப்புவதற்கு மின்சாரம் மற்றும் வலுத் துறையில் உள்ள சகல ஆர்வலர்களினதும் ஒருங்கிணைந்த முயற்சிகள் இன்றியமையாதனவாகும்.

**இலங்கையின் நீடித்து நிலைத்திருக்கின்ற வலு அதிகாரசபை நாட்டில் நீடித்து நிலைத்திருக்கின்ற வலு அபிவிருத்தியினை ஊக்குவிப்பதற்கான அதன் முயற்சிகளைத் தொடர்ந்தும் முன்னெடுத்தது.** வலு வினைத்திறன் தன்மையினை மேம்படுத்துதல், வலு விரயத்தினைக் குறைப்பதன் மூலம் வலுப் பாதுகாப்பினை ஊக்குவித்தல், தூண்டுதலளிக்கின்ற கொள்கைகளை உருவாக்குதல், வலுவுடன் தொடர்புடைய தகவல்களை முகாமை செய்தல் மற்றும் பகுப்பாய்வு செய்தல், நீடித்து நிலைத்திருக்கின்ற வலுத் துறையில் அவசியமான முதலீடுகளை நிச்சயப்படுத்தல் மற்றும் சமூகத்தினை வலு உணர்திறன்மிக்கதாக மாற்றுதல் ஆகிய மீள்புதுப்பிக்கத்தக்க வலுவின் சகல வடிவங்களினையும் அபிவிருத்தி செய்வதில் இலங்கையின் நீடித்து நிலைத்திருக்கின்ற வலு அதிகாரசபை தொடர்ந்தும் ஈடுபட்டது. வலு முகாமைத்துவம் மற்றும் பாதுகாப்புச் செயற்றிட்டங்கள், வள இணைப்புச் செயற்றிட்டங்கள் மற்றும் கொள்கை ஆலோசனைச் செயற்றிட்டங்கள் என்பன

ஆண்டு காலப்பகுதியில் முன்னெடுக்கப்பட்ட வேளையில் வலுப் பாதுகாப்பினை நிச்சயப்படுத்துகின்ற நோக்குடன் 2024-2029இற்கான மீள்புதுப்பிக்கத்தக்க வலு வள அபிவிருத்திச் செயற்றிட்டத்தின் திருத்தமும் 2022இல் தொடங்கப்பட்டது. ஐரோப்பா மற்றும் இலங்கையிலுள்ள பல்கலைக்கழகங்களின் ஒத்துழைப்புடன் இலங்கையில் மீள்புதுப்பிக்கத்தக்க வலுத் தொழில்நுட்பங்களுக்கான பயிற்சி மையச் செயற்றிட்டமும் முன்னெடுக்கப்படுகின்றது. ஐரோப்பிய வங்கி, உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி என்பவற்றின் கீழ் தாங்கிக்கொள்ளக்கூடிய செலவில் சூழல் நேய புதுப்பிக்கத்தக்க வலுச் செயற்றிட்டங்களிற்கான நிதியிடல் காணப்படுவதுடன் தொடர்புடைய நாடுகளினால் பின்பற்றப்படும் வெளிப்படையான செய்முறைகள் மற்றும் நடைமுறைகளைப் பொறுத்து இது பயன்படுத்தப்படலாம். இத்திட்டங்களை முன்கூட்டியே அணுகுவதற்குரிய முயற்சிகளை இலங்கை மேற்கொள்ள வேண்டும்.

## வீதி அபிவிருத்தி

**அரசாங்கத்தின் வீதி உட்கட்டமைப்பு அபிவிருத்தி முயற்சிகளின் முன்னேற்றமானது 2022ஆம் ஆண்டில் தொடர்ந்தும் மிதமடைந்து காணப்பட்டமையானது காசுப் பாய்ச்சல் அழுத்தங்களுக்கு மத்தியில் இறுக்கமான இறை நிலைமைகளைப் பிரதிபலித்தது.** வீதி அபிவிருத்தி அதிகாரசபையானது விரைவுப் பாதைகள், நெடுஞ்சாலைகள் மற்றும் வீதிகள் என்பவற்றைப் பராமரித்தல், விரிவுபடுத்தல் மற்றும் மேம்படுத்தல், பாலங்கள் மற்றும் மேம்பாலங்களின் கட்டடவாக்கம் மற்றும் இயற்கைப் பேரழிவுகளினால் சேதமடைந்த பாதைகளை மீட்டெடுத்தல் என்பனவூடாக வீதி வலையமைப்பினை மேம்படுத்துவதனை நோக்காகக் கொண்டு ஏறத்தாழ ரூ.195.4 பில்லியன் பெறுமதியினைப் பல்வேறு நடவடிக்கைகளின் மீது உறப்படுத்தியது. இதற்கமைய, விரைவுப் பாதைகள் மற்றும் நெடுஞ்சாலைகள் என்பவற்றை அபிவிருத்தி செய்வதில் உறப்பட்ட செலவினம் ஆண்டு காலப்பகுதியில் முறையே ரூ.34.4 பில்லியன் மற்றும் ரூ.145.0 பில்லியன் பெறுமதியாகவிருந்த அதேவேளையில் பாலங்கள் மற்றும் மேம்பாலங்களின் கட்டடவாக்கத்தின் மீது ரூ.6.6 பில்லியன் தொகை செலவிடப்பட்டது. செலவினைக் கட்டுப்படுத்துதல் தொடர்பிலான அரசாங்க முயற்சிகளின் கீழ் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கான வருடாந்த வரவு செலவுத்திட்ட ஒதுக்கீடு பல்வேறு சந்தர்ப்பங்களில் திருத்தப்பட்ட போதிலும், உறப்பட்ட செலவினமானது 2022இற்கான ரூ.247.8 பில்லியன் கொண்ட இறுதிப்படுத்தப்பட்ட ஆண்டு ஒதுக்கீட்டின் கீழேயே தொடர்ந்தும் காணப்பட்டது. அதேவேளை, கடந்த சில ஆண்டுகளில் பாதை வலையமைப்பு விரிவாக்கத்தில் காணப்பட்ட முதலீட்டுப் பற்றாக்குறையினைப் பிரதிபலிக்கும் வகையில், A மற்றும் B வகுப்பு வீதிகளை உள்ளடக்கிய தேசிய நெடுஞ்சாலைகளின் மொத்த நீளம் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் பராமரிக்கப்பட்ட விரைவுப் பாதைகளின் மொத்த நீளம் என்பன கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில 2022 இறுதியிலுள்ளவாறு முறையே 12,225 கிலோமீற்றர் மற்றும் 312.6 கிலோமீற்றர் ஆகத் தொடர்ந்தும் காணப்பட்டன.

**ஆண்டு காலப்பகுதியில் விரைவுப்பாதை வலையமைப்பு அபிவிருத்தியின் முன்னேற்றமானது தொடர்ந்தும் மந்தமடைந்து காணப்பட்டது.** பெரும்பாலும் அரசாங்கத்தின் கடுமையான நிதியியல் வரையறைகள் காரணமாக, கடவத்தையிலிருந்து தம்புள்ளை வரையிலான மத்திய விரைவுப் பாதையின் ஒட்டுமொத்த நிர்மாணப் பணிகள் 2022இல் குறைந்தளவிலான முன்னேற்றமொன்றினைப் பதிவுசெய்தன. 2022ஆம் ஆண்டின் இறுதியளவில், கடவத்தை தொடக்கம் மீரிகம வரையிலான நெடுஞ்சாலைப் பகுதி 2021இன் இறுதியில் 19.4 சதவீதத்திலிருந்து 34.8 சதவீதம் கொண்ட ஒட்டுமொத்த பௌதீக முன்னேற்றமொன்றினை அடைந்திருந்தது. மேலும், மீரிகமவிலிருந்து குருநாகல் வரை நீடிக்கின்ற மத்திய விரைவுப் பாதையின் பிரிவு II ஆனது 2022 சனவரி நடுப்பகுதியில் நிறைவடைந்து பொதுமக்கள் பாவனைக்கு திறந்து வைக்கப்பட்டது. அதேவேளை, கஹதுடுவ தொடக்கம் பல்மதுல்ல வரை நீடிக்கின்ற ருவன்புர விரைவுப் பாதை மற்றும் கஹதுடுவ தொடக்கம் இங்கிரிய வரை நீடிக்கின்ற பகுதி என்பவற்றின் நிர்மாணப் பணிகள் 2022இல் மெதுவானதொரு வேகத்தில் முன்னேற்றமடைந்தன. மேலும், நெடுஞ்சாலைகள் அமைச்சின் தீர்மானத்தினைத் தொடர்ந்து, வீதி அபிவிருத்தி அதிகாரசபையானது ருவன்புர விரைவுப் பாதையின் II மற்றும் IIIஆம் கட்டங்களின் சாத்திய ஆய்வினை மறுபரிசீலனை செய்தது. மூலப்பொருட்களின் பற்றாக்குறை, அதிகரித்துச் செல்கின்ற உள்ளீட்டுச் செலவுகள் மற்றும் வெளிநாட்டுச் செலாவணியில் திரவத்தன்மைப் பற்றாக்குறை போன்ற தடைகள் எதிர்கொள்ளப்பட்ட போதிலும், நெடுஞ்சாலை வலையமைப்பிற்குத் துறைமுக நகரினையும் காலி முகத்திடலினையும் இணைக்கின்ற துறைமுக அணுகல்வசதியின் உயர்த்தப்பட்ட நெடுஞ்சாலைச் செயற்றிட்டத்தின் நிர்மாணமானது ஆண்டு முழுவதும் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டதுடன் 2022 இறுதியளவில் 54.3 சதவீத பௌதீக முன்னேற்றத்தினை அடைந்தது.

**விரைவுப் பாதைகளுடன் இணைந்த ஒட்டுமொத்த வாகனப் போக்குவரத்து 2022இல் வீழ்ச்சியடைந்து காணப்பட்டது.** கொட்டாவையிலிருந்து கொடகம வரையான மற்றும் பலடுவையிலிருந்து மத்தள வரையான தெற்கு விரைவுப் பாதையில் நாளாந்தம் பயணிக்கின்ற வாகனங்களின் சராசரி எண்ணிக்கையானது முறையே 28,448 மற்றும் 6,425 ஆக முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட எண்ணிக்கையிலிருந்து 2022இல் முறையே 13.3 சதவீதம் மற்றும் 18.2 சதவீதத்தினால் மெதுவடைந்து, எரிபொருள் பற்றாக்குறைகளின் தாக்கத்தினைப்

3

பிரதிபலித்தது. வெளிச்சுற்று விரைவுப் பாதையும் 2021இல் அறிக்கையிடப்பட்ட 37,219 பயணித்த வாகனங்களிலிருந்து 28,291இற்கு 24.0 வீதத்தினால் போக்குவரத்து நடமாட்டங்களில் வீழ்ச்சியொன்றினைக் காண்பித்தது. அதேவேளை, கொழும்பு கட்டுநாயக்க விரைவுப் பாதையில் நாளாந்தம் பயணிக்கின்ற வாகனங்களின் சராசரி எண்ணிக்கை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2022இல் 14.0 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்து காணப்பட்டது. ஆண்டு காலப்பகுதியில், விரைவுப் பாதைகளிலிருந்தான வருவாய்கள் 2021 உடன் ஒப்பிடுகையில் ஏறத்தாழ ரூ.7.9 பில்லியனிற்கு 10.1 சதவீத குறைவொன்றினைப் பதிவுசெய்து வீழ்ச்சியடைந்தன. இருப்பினும், புதிதாகத் திறக்கப்பட்ட மீரிகம தொடக்கம் குருநாகல் வரையான மத்திய விரைவுப் பாதைப் பகுதியானது 2022இல் நாளொன்றிற்கு சராசரியாக 9,106 வாகனங்களை ஈர்த்து ரூ.703.8 மில்லியன் வருவாய்களை உருவாக்கியமையானது, பரிசீலனைக்குட்பட்ட காலப்பகுதியில் விரைவுப் பாதைகளிலிருந்தான வருடாந்த வருவாய்களின் ஒட்டுமொத்த வீழ்ச்சியினைப் பகுதியளவில் எதிரீடு செய்திருந்தது.

**வீதி வலையமைப்புகள் மற்றும் பாலங்கள் என்பவற்றின் அபிவிருத்தி மற்றும் புனரமைப்பு நடவடிக்கைகள் 2022 காலப்பகுதியில் மெதுவான வேகத்தில் முன்னேற்றமடைந்தன.** ஆண்டு காலப்பகுதியில், தெற்கு வீதி இணைப்புச் செயற்றிட்டம் பூர்த்தி செய்யப்பட்டதுடன் பதுளை - செங்கலடி வீதி மேம்பாட்டுச் செயற்றிட்டத்தின் கீழ் (A005) லுணுகல - பிபிள பகுதியின் பூர்வாங்கப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. ஒருங்கிணைந்த வீதி முதலீட்டுச் செயற்றிட்டத்தின் கட்டம் I மற்றும் கட்டம் II, கண்டி பல்மாதிரிப் போக்குவரத்து முனைய அபிவிருத்தித் திட்டம் மற்றும் அனைத்தையுமுள்ளடக்கிய இணைப்பு மற்றும் அபிவிருத்தித் திட்டம் என்பன உள்ளடங்கலாக ஏனைய பல வீதி அபிவிருத்தித் திட்டங்கள் இவ்வாண்டு காலப்பகுதியில் முன்னெடுக்கப்பட்டன. 2022இல் தேசிய வீதிகளில் சில பாலங்களின் புனரமைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட அதேவேளையில் பாலதக்ஷ மாவத்தை மற்றும் சேர் சிதம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, நீதிபதி அக்பர் மாவத்தைப் புகையிரதக் கடவை மற்றும் உத்தரானந்த மாவத்தை புகையிரதக் கடவை ஆகியவற்றை இணைக்கின்ற மேம்பாலங்களது பணிகளும் குறைவானதொரு வேகத்தில் முன்னெடுக்கப்பட்டன.

## வீதிப் பயணிப் போக்குவரத்து


**எரிபொருள் பற்றாக்குறைகள் மற்றும் செலவு உயர்வடைதல்கள் என்பவற்றிற்கு மத்தியில், கொவிட்-19 இடர்நேர்வுகளின் தளர்த்தலுடன் பொதுமக்களது நகர்வின் படிப்படியான இயல்பு நிலையினைப் பிரதிபலிக்கும் வகையில் வீதிப் பயணிப் போக்குவரத்து நடவடிக்கைகள் 2022இல் மேம்பட்டுக் காணப்பட்டன.** இதற்கமைய, இலங்கைப் போக்குவரத்து சபையின் தொழிற்படுத்தப்பட்ட கிலோமீற்றர் தூரம் மற்றும் பயணிகள் கிலோமீற்றர் தூரம் என்பன 2021இலும் பார்க்க ஆண்டு காலப்பகுதியில் முறையே 41.2 சதவீதத்திற்கும் 141.0 சதவீதத்திற்கும் கணிசமானளவு அதிகரித்தன. 2022இல் இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான மொத்த பேரூந்துகளின் எண்ணிக்கை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 6,932இற்கு 1.2 சதவீதத்தினால் சிறிதளவு குறைவடைந்ததுடன் இலங்கைப் போக்குவரத்து சபைக்கு எவ்வித புதிய பேரூந்துகளும் ஒதுக்கப்படவில்லை. இக்காலப்பகுதியில், இலங்கைப் போக்குவரத்து சபையினால் தொழிற்படுத்தப்பட்ட பேரூந்துகளின் சராசரி எண்ணிக்கை 4,279இற்கு 216.3 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவு அதிகரித்ததுடன் இது இலங்கைப் போக்குவரத்து சபையின் பொதுப் போக்குவரத்துத் தொழிற்பாடுகளுக்காக வினைத்திறன்மிக்க விதத்தில் கிடைப்பனவாயிருந்த மொத்த வாகனங்களில் ஏறத்தாழ 84.2 சதவீதமாகக் காணப்பட்டது. இதேவேளை, ஆண்டு காலப்பகுதியில், தனியார் துறையின் தொழிற்படுத்தப்பட்ட கிலோமீற்றர் தூரம் மற்றும் பயணிகள் கிலோமீற்றர் தூரம் என்பனவும் முறையே 24.4 சதவீதத்தினாலும் 23.4 சதவீதத்தினாலும் அதிகரித்துக் காணப்பட்டன. தனியார் துறையினால் தொழிற்படுத்தப்பட்ட பேரூந்துகளின் சராசரி எண்ணிக்கை 2021இல் பதிவுசெய்யப்பட்ட 9,053 உடன் ஒப்பிடுகையில் 2022 இறுதியளவில் 9,807இற்கு 8.3 சதவீதத்தினால் அதிகரித்தது. தனியார் பேரூந்துத் தொழிற்பாடுகளுக்காக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட மாகாணங்களுக்கிடையிலான மற்றும் மாகாணங்களுக்குள்ளேயான அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை 2022 இறுதியளவில் முறையே 3,129 மற்றும் 16,733 ஆகப் பதிவுசெய்யப்பட்டன.

**எரிபொருள் விலைகளில் ஏற்பட்ட உயர்வைத் தொடர்ந்து பொதுப் போக்குவரத்துக்கான கேள்வியில் ஏற்பட்ட அதிகரிப்பைப் பூர்த்தி செய்யும் பொருட்டு பொதுப் போக்குவரத்துத் துறையில் மேம்பாடுகள் தொடர்ந்தும் மிதமடைந்து காணப்பட்டன.** 2022 ஆண்டு காலப்பகுதியில் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு போக்குவரத்து வசதிகளைத் தடையின்றி வழங்குவதனை நிச்சயப்படுத்துவதற்கு அதன் கிரமமான செயற்றிட்டங்களைத் தொடர்ந்தும் முன்னெடுத்த வேளையில், பொதுப் போக்குவரத்தின் தரத்தினை மேம்படுத்துவதனை இலக்காகக் கொண்ட பல்வேறு முயற்சிகளிலிருந்த முன்னேற்றம் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் எதிர்கொள்ளப்பட்ட நிதியியல் கட்டுப்பாடுகளுக்கு மத்தியில் தொடர்ந்தும் மிதமடைந்து காணப்பட்டது. தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் கீழான சிசு செரிய மற்றும் நிசி செரிய ஆகிய இரண்டு சிறப்புப் பேரூந்துச் சேவைகள் முறையே 52 மற்றும் 25 என்றவாறு அவ்விரண்டு சேவைகளுக்கும் வழங்கப்பட்ட புதிய சேவைகளைப் பயன்படுத்துவதன் மூலம் மேலும் மேம்படுத்தப்பட்டன. இதற்கமைய, 2022 இறுதியிலுள்ளவாறு, சிசு செரியவின் கீழ்

1,617 சேவைகளும் நிசி செரிய பேரூந்து சேவைத் திட்டத்தின் கீழ் 219 சேவைகளும் தொழிற்படுத்தப்பட்டன. இதேவேளை, பாடசாலை மாணவர்களுக்கு வசதியளிக்கும் பொருட்டு புதிய செயற்றிட்டமொன்று தொடங்கப்பட்ட போதிலும் 2022இற்காக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவிற்கு அரசாங்கத்தினால் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியானது எரிபொருள் விலை உயர்வுகளுக்கு மத்தியில் தனியார் பாடசாலைப் போக்குவரத்துச் சேவைகளின் செலவின அதிகரிப்புடன் அதிகரித்துச் செல்கின்ற கேள்வியினைப் பூர்த்தி செய்யும் பொருட்டு சிசு செரியவின் கீழ் புதிய சேவைகளை வசதியளிக்கப் போதுமானதாக இருக்காமையினால் அது மானியமற்ற விலைகளைக் கொண்டிருந்தது. 2022 காலப்பகுதியில், பொதுப் போக்குவரத்துத் துறையில் தடங்கலற்ற தன்மையினை நிச்சயப்படுத்தும் பொருட்டு தனியாரிற்குச் சொந்தமான பயணிகள் போக்குவரத்து பேரூந்துகளுக்கும் பாடசாலைப் போக்குவரத்துச் சேவைகளுக்கும் போதியளவிலான எரிபொருளை வழங்குவதற்கு இலங்கை போக்குவரத்து சபையுடன் இணைந்து தேசிய போக்குவரத்து ஆணைக்குழு பல்வேறு வழிமுறைகளை நடைமுறைப்படுத்தியது. இதேவேளை, தனிநபர்கள் பொதுப் போக்குவரத்துச் சேவைகளைத் தேர்ந்தெடுப்பதனை கட்டாயப்படுத்திய எரிபொருள் பற்றாக்குறை மற்றும் எரிபொருள் விலைகளில் மேற்கொள்ளப்பட்ட குறிப்பிடத்தக்க மேல்நோக்கிய திருத்தங்கள் என்பவற்றிற்கு மத்தியில், 2022இல் பொதுப் போக்குவரத்து வசதிகளுக்கான கேள்வியில் அதிகரிப்பொன்று பதிவுசெய்யப்பட்டது. ஏனையவற்றிற்கிடையில் அதிகரித்த எரிபொருள் விலைகள் மற்றும் வரிச் சீர்திருத்தங்களுக்கு மத்தியில் வருமானங்களின் மிதமானதன்மை என்பவற்றுடன் பொதுப் போக்குவரத்து வசதிகளுக்கான கேள்வி எதிர்காலத்தில் மேலும் விரிவடையக்கூடும். இது நாட்டின் பொதுப் போக்குவரத்துத் துறையை மேம்படுத்துவதற்கான அவசரக் கொள்கை வழிமுறைகளைத் தேவைப்படுத்தலாம்.

**ஆண்டு காலப்பகுதியில், பேரூந்துக் கட்டணங்கள் உள்நாட்டு எரிபொருள் விலைத் திருத்தங்களுடன் இசைந்துசெல்லும் விதத்தில் ஏழு சுற்றுக்களாகத் திருத்தப்பட்டன.** இதற்கமைய,

வரைபடம் 3.8
உந்து ஊர்திகளின் புதிய பதிவுகள்




*மூலம்:* போக்குவரத்து திணைக்களம்

அட்டவணை 3.4
உந்து ஊர்திகளின் புதிய பதிவுகள்

| விடயம் | 2021 | 2022 (அ) | வளர்ச்சி வீதம் (%) | |
|---|---|---|---|---|
| | | | 2021 | 2022 (அ) |
| உந்து ஊர்திகளின் புதிய பதிவுகள் (எண்.) | 33,850 | 20,510 | -83.3 | -39.4 |
| பேரூந்துகள் | 281 | 404 | -51.4 | 43.8 |
| மோட்டார் கார்கள் | 3,495 | 1,489 | -83.4 | -57.4 |
| முச்சக்கர வண்டிகள் | 2,093 | 36 | -70.7 | -98.3 |
| இரட்டை நோக்கங்களுக்கான ஊர்திகள் | 771 | 760 | -91.9 | -1.4 |
| உந்து ஈருருளிகள் | 8,011 | 9,060 | -94.7 | 13.1 |
| சரக்குக் கொண்டு செல்வதற்கான ஊர்திகள் | 4,432 | 1,832 | 12.5 | -58.7 |
| நில ஊர்திகள் | 14,764 | 6,929 | 77.8 | -53.1 |
| குவாட்சி ஈருளிகள் மற்றும் மோட்டார் வாகனங்கள் | 3 | - | -99.4 | - |

(அ) தற்காலிகமானது *மூலம்:* போக்குவரத்துத் திணைக்களம்

ஆண்டு காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட ஆரம்ப ஐந்து சுற்றுக்களிலான திருத்தங்களில் குறைந்தபட்ச பேரூந்துக் கட்டணம் ரூ.17.00இலிருந்து ரூ.40.00இற்கு அதிகரிக்கப்பட்டது. இருப்பினும், கடந்த இரண்டு திருத்தச் சுழற்சிகளுடன், குறைந்தபட்ச பேரூந்துக் கட்டணம் 2022 இறுதியளவில் ரூ.34.00 இற்குக் குறைக்கப்பட்டது. சாதாரண, சொகுசு மற்றும் அரைச் சொகுசுப் பேரூந்துச் சேவைகளின் கட்டணங்கள் ஆண்டு காலப்பகுதியில் அநேகமாக இரட்டிப்படைந்து காணப்பட்டன. ஆண்டு காலப்பகுதியில், எரிபொருள் விலைகளில் ஏற்படுத்தப்பட்ட அதிகரிப்பிற்கு ஏற்ப சிசு செரிய, நிசி செரிய, மற்றும் கமி சரிய சேவைகளின் பேரூந்துக் கட்டணம் ரூ.134.00, ரூ.45.00 மற்றும் ரூ.89.00 என்பவற்றிற்கு முறையே 135.1 சதவீதத்தினாலும் 136.8 சதவீதத்தினாலும் 134.2 சதவீதத்தினாலும் மேல்நோக்கிச் சீராக்கப்பட்டன.

**வருவாய்ப் பக்கத்தில் சாதகமான மேம்பாடுகள் காணப்பட்ட போதிலும் இலங்கைப் போக்குவரத்து சபையின் நிதியியல் செயலாற்றம் 2022 காலப்பகுதியில் தொடர்ந்தும் பலவீனமடைந்து காணப்பட்டது.** பேரூந்துக் கட்டணங்களில் பல்வேறு சுற்றுக்களாக மேற்கொள்ளப்பட்ட மேல்நோக்கிய திருத்தங்களினால் ஆதரவளிக்கப்பட்டு ஆண்டு காலப்பகுதியில் வருவாயில் சில சாதகமான மேம்பாடுகள் பதிவுசெய்யப்பட்ட போதிலும் உயர் எரிபொருள் விலைகளுக்கு மத்தியில் செலவினங்களில் காணப்பட்ட குறிப்பிடத்தக்க விரைவுபடுத்தலினால் அத்தகைய தாக்கங்கள் எதிரீடு செய்யப்பட்டன. கணக்காய்வு செய்யப்படாத நிதியியல் கூற்றுக்களின் பிரகாரம், இலங்கைப் போக்குவரத்து சபையின் மொத்த வருமானம் 2022இல் ரூ.69.3 பில்லியனிற்கு 147.0 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த வேளையில், மொத்த செலவினமும் ரூ.69.5 பில்லியனிற்கு ஏறத்தாழ 123.7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. இலங்கைப் போக்குவரத்து சபை முன்னைய ஆண்டில் பதிவுசெய்த ரூ.3.1 பில்லியன் கொண்ட தொழிற்பாட்டு நட்டத்துடன் ஒப்பிடுகையில் 2022இல் ரூ.0.3 பில்லியன் கொண்ட தொழிற்பாட்டு நட்டமொன்றினைப் பதிவுசெய்தது. பேரூந்துக் கட்டணங்களில் மேற்கொள்ளப்பட்ட

3

3

அட்டவணை 3.5
### போக்குவரத்து துறையிலுள்ள அரசிற்கு சொந்தமான தொழில் முயற்சிகளின் முக்கிய பண்புகள்

| விடயம் | 2021 (அ) | 2022 (ஆ) | வளர்ச்சி வீதம் (%) 2021 (அ) | வளர்ச்சி வீதம் (%) 2022 (ஆ) |
|---|---|---|---|---|
| 1. இலங்கை போக்குவரத்துச் சபை | | | | |
| தொழிற்பட்ட கிலோ மீற்றர்கள் (மில்லியன்) | 248 | 350 | -19.7 | 41.2 |
| பயணிகள் கிலோ மீற்றர்கள் (மில்லியன்) | 6,225 | 15,000 | -27.8 | 141.0 |
| மொத்த வருவாய் (ரூ.மில்லியன்) | 28,035 | 69,258 | -10.2 | 147.0 |
| தொழிற்பாட்டுச் செலவு (ரூ.மில்லியன்) | 31,089 | 69,545 | -7.0 | 123.7 |
| தொழிற்பாட்டு இலாபம்(+)/நட்டம்(-) (ரூ.மில்லியன்) | -3,054 | -287 | -38.6 | 90.6 |
| 2. இலங்கைப் புகையிரதப் | | | | |
| தொழிற்பட்ட கிலோ மீற்றர்கள் ('000) | 6,281 | 10,510 | -21.4 | 67.3 |
| பயணிகள் கிலோ மீற்றர்கள் (மில்லியன்) | 2,158 | 6,602 | -44.7 | 205.9 |
| சரக்குத் தொன் கிலோமீற்றர்கள் (மில்லியன்) | 162 | 139 | 41.3 | -14.2 |
| மொத்த வருவாய் (ரூ.மில்லியன்) | 2,679 | 11,076 | -41.3 | 313.5 |
| தொழிற்பாட்டுச் செலவு (ரூ.மில்லியன்) | 12,979 | 23,513 | -11.2 | 81.2 |
| தொழிற்பாட்டு இலாபம்(+)/நட்டம்(-) (ரூ.மில்லியன்) | -10,300 | -12,437 | -2.5 | -20.7 |
| 3. சிறிலங்கன் எயார்லைன்ஸ் | | | | |
| பறந்த மணித்தியாலங்கள் | 50,287 | 84,325 | 20.9 | 67.7 |
| பறந்த பயணிகள் கிலோ மீற்றர்கள் (மில்லியன்) | 2,868 | 11,042 | -21.2 | 285.0 |
| பயணிகள் சுமைக்காரணி (%) | 36 | 74 | -36.0 | 106.8 |
| நிறை சுமைக்காரணி (%) | 74 | 64 | 19.6 | -13.8 |
| சரக்கு (மெ.தொ. '000) | 93 | 88 | 66.0 | -5.4 |
| வேலைவாய்ப்பு (எண்ணிக்கை) | 5,732 | 5,572 | -11.7 | -2.8 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது

*மூலங்கள்:* இலங்கைப் புகையிரதம் சேவைகள்
இலங்கை போக்குவரத்துச் சபை
இலங்கை வான்வழிப் போக்குவரத்து அதிகாரசபை

சடுதியான மேல்நோக்கிய சீராக்கங்களைக் கருத்திற்கொண்டு பருவகால பயணச் சீட்டுக்களுக்கான கேள்வியில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பொன்று பதிவுசெய்யப்பட்டது. இதன் விளைவாக, மாணவர்களுக்கான மானியம் வழங்கப்பட்ட பருவகால பயணச் சீட்டுக்களுக்களை வசதிப்படுத்தும் பொருட்டு அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட உதவித்தொகை 2021இல் பதிவுசெய்யப்பட்ட ரூ.5.3 பில்லியனிலிருந்து 2022இல் ரூ.6.1 பில்லியனிற்கு அதிகரித்த வேளையில், பொருளாதார ரீதியாக பயன்குறைந்த பயண வழிகளுடன் தொடர்புடைய தொழிற்பாடுகளை மேற்கொள்ளும் பொருட்டு வழங்கப்பட்ட உதவித்தொகை 2021இல் அறிக்கையிடப்பட்ட ரூ.5.3 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2022 காலப்பகுதியில் ரூ.2.7 பில்லியனாக விளங்கியது. 2023இன் முற்பகுதியில், இலங்கைப் போக்குவரத்து சபை இந்திய கொடுகடன் வசதியின் கீழ் பெற்றுக்கொண்ட 125 புதிய பேருந்துகளில் 75 பேருந்துகளைப் பிராந்திய டிப்போக்களிடையே பகிர்ந்தளித்த வேளையில், போக்குவரத்துத் திணைக்களத்தின் கீழ் 50 பேருந்துகள் பதிவு செய்யப்பட்டன. தேசிய போக்குவரத்து ஆணைக்குழு இலங்கைப் போக்குவரத்து சபையுடன் இணைந்து பயணிகளின் வசதிக்காக முன்கொடுப்பனவு அட்டைகளை வழங்குவதற்கான திட்டமொன்றினை ஆரம்பித்ததுடன் 2023 பெப்புருவரி மாத முற்பகுதியில் தெற்கு விரைவுப் பாதையில் கொட்டாவையிலுள்ள மாகும்புர பல்மாதிரிப் போக்குவரத்து நிலையத்திலிருந்து காலி வரையில் பயணிக்கின்ற தனியார் பேருந்துகளுக்கான முன்னோடித் திட்டமொன்றும் ஆரம்பிக்கப்பட்டது. இத்திட்டம் வீதிப் பயணிகள் துறையில் வெற்றிகரமாகப் பயன்படுத்தப்பட்டதனைத் தொடர்ந்து புகையிரதப் பயணிகளுக்கும் விரிவுபடுத்தப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. 2022 ஆண்டு காலப்பகுதியில் போக்குவரத்துத் திணைக்களமும் உள்ளெரிகின்ற இயந்திரத்திலான முச்சக்கர வண்டிகள் மற்றும் உந்து ஈருருளிகள் என்பவற்றின் மின்னேற்றுதலுடன் தொடர்புடைய பூர்வாங்கப் பணிகளை ஆரம்பித்தது.

**2020 தொடக்கம் நடைமுறையிலுள்ள மோட்டார் வாகன இறக்குமதிகள் மீதான கட்டுப்பாடுகள் காரணமாக, 2022இல் தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக மோட்டார் வாகனங்களின் புதிய பதிவு குறிப்பிடத்தக்க வீழ்ச்சியொன்றினைப் பதிவுசெய்தது.** இதற்கமைய, மோட்டார் வாகனங்களின் புதிய பதிவுகள் 2022இல் 39.4 சதவீதத்தினால் ஆண்டிற்கு ஆண்டு வீழ்ச்சியடைந்தமையானது மீளாய்விற்குட்பட்ட காலப்பகுதியில் உந்து ஊர்திகள், முச்சக்கர வண்டிகள், சரக்குப் போக்குவரத்து ஊர்திகள் மற்றும் நில ஊர்திகள் என்பவற்றின் பதிவில் ஏற்பட்ட சுருக்கங்களைப் பாரியளவில் பிரதிபலித்தது. ஆயினும், 2021 உடன் ஒப்பிடுகையில், ஆண்டு காலப்பகுதியில் உந்து ஈருருளிகளினதும் பேருந்துகளினதும் பதிவுகள் முறையே 13.1 சதவீதத்தினாலும் 43.8 சதவீதத்தினாலும் அதிகரித்து காணப்பட்டது.

## புகையிரதப் போக்குவரத்து

**2022 ஆண்டு காலப்பகுதியில் இலங்கைப் புகையிரதம் மிதமடைந்த தொழிற்பாட்டு மேம்பாடொன்றினைப் பதிவுசெய்தமையானது கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றினைத் தொடர்ந்து பொதுமக்களது நகர்வின் படிப்படியான மீட்டெடுத்தலினைப் பிரதிபலித்தது.** இலங்கைப் புகையிரதத்தின் மதிப்பிடப்பட்ட ஒட்டுமொத்த தொழிற்படுத்தப்பட்ட கிலோமீற்றர் தூரம் மற்றும் பயணிகள் கிலோமீற்றர் தூரம் என்பன 2021 உடன் ஒப்பிடுகையில் 2022இல் முறையே 67.3 சதவீதத்தினாலும் 205.9 சதவீதத்தினாலும் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் குறிப்பிடத்தக்களவு அதிகரித்துக் காணப்பட்டன. இருப்பினும், சரக்குக் கி.மீ. தூரமானது கடந்த ஆண்டின் தொடர்புடைய காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 161.6 மில்லியன் மெ.தொன் கி.மீ. தூரத்துடன் ஒப்பிடுகையில் மீளாய்விற்குட்பட்ட காலப்பகுதியில் 138.7 மில்லியன் மெ.தொன் கி.மீ. தூரத்திற்கு 14.2 சதவீதம் கொண்ட ஆண்டிற்கு ஆண்டு வீழ்ச்சியொன்றினைப் பதிவுசெய்தது.

**2022இல் இலங்கைப் புகையிரதத்தின் நிதியியல் செயலாற்றமானது தொடர்ந்தும் மெதுவடைந்து காணப்பட்டது.** தற்காலிக நிதியியல் கூற்றுக்களின் பிரகாரம், இலங்கைப் புகையிரதத்தினால் உறப்பட்ட தொழிற்பாட்டு நட்டமானது 2021இல் பதிவுசெய்யப்பட்ட ரூ.10.3 பில்லியன் கொண்ட தொழிற்பாட்டு நட்டத்துடன் ஒப்பிடுகையில் ஆண்டு

காலப்பகுதியில் ரூ.12.4 பில்லியனிற்கு மேலும் உயர்வடைந்தது. இலங்கைப் புகையிரதத்தின் மொத்த வருவாய்கள் ரூ.11.1 பில்லியனாக விளங்கிய முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2022இல் 8.4 பில்லியனிற்கு குறிப்பிடத்தக்களவு அதிகரித்தன. 2022 யூலை தொடக்கம் நடைமுறைக்குவந்த புகையிரதக் கட்டண உயர்விலிருந்து தோற்றம்பெற்ற பயணிகள் போக்குவரத்து நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட வருவாய்களில் ஏற்பட்ட மேம்பாடுகள் இதற்கு முதன்மைக் காரணமாயமைந்தன. அதேவேளை, இலங்கைப் புகையிரதத்தின் மொத்த செலவினம் ரூ.2.1 பில்லியனிலிருந்து ரூ.42.5 பில்லியனிற்கு அதிகரித்ததுடன் இது ஆண்டு காலப்பகுதியில் எரிபொருள் விலைகளில் மேற்கொள்ளப்பட்ட மேல்நோக்கிய சீராக்கங்களுடன் மீண்டெழுகின்ற செலவினத்தில் ஏற்படுத்தப்பட்ட கணிசமானளவிலான அதிகரிப்பிற்கு முதன்மையாகப் பங்களித்திருக்க முடியும். ஆண்டு காலப்பகுதியில் மீண்டெழும் செலவினம் ரூ.23.5 பில்லியனிற்கு 81.2 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில், மூலதனச் செலவினம் ரூ.19.0 பில்லியனிற்கு 30.7 சதவீதத்தினால் சுருக்கமடைந்து காணப்பட்டது. எரிபொருள் விலை சீராக்கங்களுடன் இசைந்து செல்லும் விதத்தில் பயணிகள், சரக்குகள் மற்றும் அஞ்சல்கள் என்பவற்றின் போக்குவரத்திற்கான புகையிரதக் கட்டணங்கள் ஏறத்தாழ நான்கு ஆண்டுகளுக்குப் பின்னர் 2022 யூலை 12 தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில் மேல்நோக்கித் திருத்தப்பட்டன.


**பயணிகள் மற்றும் சரக்கு போக்குவரத்திற்கான சீரானதும் தொடர்ச்சியானதுமான போக்குவரத்து வசதிகளை நிச்சயப்படுத்தும் பொருட்டு உட்கட்டமைப்பினையும் பணிகளையும் மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை இலங்கைப் புகையிரதம் மிதமானதொரு வேகத்தில் முன்னெடுத்தது.** இருப்பினும், நிதியியல் மட்டுப்பாடுகளுடன், புகையிரதப் பாதை வலையமைப்புக்கள், புகையிரதத் தொகுதிகள் மற்றும் சமிக்ஞையிடல் மற்றும் தொலைத்தொடர்பூட்டல் என்பவற்றுடன் தொடர்புடைய சகல பராமரிப்பு மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகளும் மெதுவான வேகத்தில் முன்னேற்றமடைந்தன. 2022 ஓகத்தில், இலங்கைப் புகையிரதம் கொழும்பிற்கும் பதுளைக்குமிடையில் இயங்குகின்ற ‘எல்ல ஒடிஸி’ நகரங்களுக்கிடையிலான அதி விசேட சொகுசுப் புகையிரதத்தினை அறிமுகப்படுத்தியதுடன் இது சுற்றுலாத் துறையை ஊக்குவிக்கும் நோக்கில் பயணிகளுக்குப் பெருமளவு சௌகரியத்துடன் உலகின் மிகவும் அழகிய புகையிரதப் பயணமொன்றினை வழங்குகின்றது. 100 பயணிகள் புகையிரதப் பெட்டிகளைப் புனரமைப்பதற்கான செயற்றிட்டம் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டதுடன் 2022 இறுதியளவில் 50 பயணிகள் புகையிரதப் பெட்டிகள் சேவையினுள் மீளறிமுகப்படுத்தப்பட்டன. மேலும், 2017இல் பெறப்பட்ட இந்திய கொடுகடன் வசதியின் கீழ் 160 பயணிகள் புகையிரதப் பெட்டிகளைக் கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கைகள் ஆண்டு காலப்பகுதியில் நிறைவடைந்தன. அதேவேளை, புகையிரதப் பாதைகளின் புனரமைப்பு, புகையிரத நிலையங்களினதும் பாலங்களினதும் பராமரித்தல், தளங்களின் விரிவுபடுத்துதல் மற்றும் சமிக்ஞையிடல் மற்றும் தொலைத்தொடர்பூட்டல் முறைமைகளை வழங்குதல் என்பவற்றுடன் தொடர்புடைய பல்வேறு செயற்றிட்டங்கள் ஆண்டு காலப்பகுதியில் முன்னெடுக்கப்பட்டன.

## வான்வழிப் போக்குவரத்து

**கொவிட்-19 நோய்த்தொற்றிலிருந்து உலகம் மீட்சியடைந்து வருவதனால் உலகளாவிய போக்குவரத்து நடவடிக்கைகளில் ஏற்படுத்தப்பட்ட படிப்படியான மீட்டெடுத்தலுடன் வான்வழிப் போக்குவரத்துத் துறையின் செயலாற்றமானது 2022இல் மேம்பட்டுக் காணப்பட்டது.** இதற்கமைய, 2022இல் பயணிகளின் வருகைகளானது உலகளாவிய போக்குவரத்து நடவடிக்கைகளின் மீளாரம்பம் மற்றும் 2021இல் காணப்பட்ட தாழ்ந்தளவிலான புள்ளிவிபர தளம் என்பவற்றினால் பாரியளவில் ஆதரவளிக்கப்பட்டு 5.5 மில்லியனிற்கு 266.8 சதவீத குறிப்பிடத்தக்க ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சியொன்றினைப் பதிவுசெய்தன. ஆண்டு காலப்பகுதியில், சரக்குக் கையாளல் 166,969 மெற்றிக்தொன்களிற்கு 9.3 சதவீதத்தினால் ஆண்டிற்கு ஆண்டு சுருங்கியது. 2022 இறுதியளவில், நாட்டில் 33 பன்னாட்டு விமான நிலையங்களும் ஐந்து உள்நாட்டு விமான நிலையங்களும் தொழிற்பாட்டிலிருந்தன. பண்டாரநாயக்க பன்னாட்டு விமான நிலையம் ஆண்டு காலப்பகுதியில் 41,547 வானூர்தி நடமாட்டங்களுக்கு 70.7 சதவீத குறிப்பிடத்தக்க வளர்ச்சியொன்றினைப் பதிவுசெய்ததுடன் வானூர்தி நடமாட்டங்களின் மொத்த எண்ணிக்கையில் 42,196இற்கு 68.2 சதவீதம் கொண்ட அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இது சுற்றுலாத் துறையின் மீளெழுச்சிக்கு ஆதரவளிக்கின்ற விதத்தில் ரூசியா, உஸ்பெகிஸ்தான், ஐக்கிய அரபு இராச்சியம் மற்றும் தாய்லாந்தில் ஆகிய நாடுகளிலிருந்து புதிய விமானங்களை ஈர்ப்பதற்கான அரசாங்கத்தின் முயற்சிகளினால் முக்கியமாக வசதியளிக்கப்பட்டது. அதேவேளை, எயார்

வரைபடம் 3.9

விமானப் பயணிகள் மற்றும் விமான சரக்கு கையாளல்




*மூலம்:* இலங்கை வான்வழி போக்குவரத்து அதிகாரசபை

அட்டவணை 3.6
**வான்வழித் துறையின் செயலாற்றம்**

| விடயம் | 2021 (அ) | 2022 (ஆ) | வளர்ச்சி வீதம் (%) | |
|---|---|---|---|---|
| | | | 2021 (அ) | 2022 (ஆ) |
| **1. பயணிகள் (இ)** | **1,500,078** | **5,502,539** | **-36.8** | **266.8** |
| சிறிலங்கன் எயார்லைன்ஸ் | 857,158 | 3,295,841 | -30.8 | 284.5 |
| வெளிநாட்டு எயார்லைன்ஸ் | 642,920 | 2,206,698 | -43.4 | 243.2 |
| **2. சரக்கு கையாளுதல் (மெ.தொ)** | **184,139** | **166,969** | **35.3** | **-9.3** |
| சிறிலங்கன் எயார்லைன்ஸ் | 93,195 | 88,170 | 66.0 | -5.4 |
| வெளிநாட்டு எயார்லைன்ஸ் | 90,944 | 78,799 | 13.8 | -13.4 |
| **3. வானூர்திகளின் அசைவுகள் (எண்ணிக்கை) (ஈ)** | **25,090** | **42,196** | **-1.9** | **68.2** |
| பண்டாரநாயக்க ப.வி.நி. | 24,336 | 41,547 | -2.4 | 70.7 |
| மாத்தளை ரா.ப.வி.நி. | 722 | 266 | 43.0 | -63.2 |
| யாழ்ப்பாண ப.வி.நி. | 32 | 383 | -77.1 | 1,096.9 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) இடைநிற் பயணிகள் நீங்கலாக
(ஈ) உள்நாட்டு விமான அசைவுகள் உள்ளடங்கலாக

*மூலம்:* இலங்கை வான்வழி போக்குவரத்து அதிகாரசபை



பிரான்ஸ், சுவிஸ் பன்னாட்டு எயார்லைன்ஸ், அலையன்ஸ் எயார் என்பன உள்ளடங்கலாக பல பன்னாட்டு விமானங்களின் தொழிற்பாடுகள் இலங்கையில் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டன. உள்நாட்டு விமானப் பயணிகள் போக்குவரத்து கணிசமானளவிலான வளர்ச்சியொன்றினை 2022 இல் பதிவுசெய்தது. குறிப்பாக 2022 நடுப்பகுதியில் உள்நாட்டு எரிபொருள் பற்றாக்குறைகளினால் வான்வழிப் போக்குவரத்து நடவடிக்கைகள் சவாலுக்குட்படுத்தப்பட்ட போதிலும், சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை அரசாங்கத்துடன் இணைந்து ஆண்டு முழுவதும் வானூர்தித் தொழிற்பாடுகளுக்கான உறுதியான எரிபொருள் நிரம்பலை நிச்சயப்படுத்தும் பொருட்டு விமான நிலையங்கள் மற்றும் கைத்தொழில் துறையிலுள்ள ஏனைய ஆர்வலர்களுடன் தொடர்ந்தும் நெருக்கமான ஈடுபாட்டினைக் கொண்டிருந்தது. அதேவேளை, இலங்கை விமான நிலையங்களுக்கு அதிகளவிலான விமான சேவைகளை ஈர்க்கும் பொருட்டு புதிய எயார்லைன்ஸ் மற்றும் தற்போதுள்ள தொழிற்படுத்துநர்களுக்கான நாட்டிலிருந்து வெளியேறுவதற்கான தீர்வை மற்றும் தரையிறக்கம் மற்றும் நிறுத்தி வைத்தல் கட்டணங்கள் ஆகியவற்றில் பல்வேறு சலுகைகள் வழங்கப்பட்டன.

**கடுமையான பொருளாதார நெருக்கடியினால் ஏற்பட்ட சில தடங்கல்களுக்கு மத்தியில், பல்வேறு வான்வழிப் போக்குவரத்து அபிவிருத்திச் செயற்றிட்டங்களின் கட்டடவாக்கப் பணிகள் 2022இல் முன்னெடுக்கப்பட்டன.** வரையறுக்கப்பட்ட விமான நிலைய மற்றும் வான்வழிப் போக்குவரத்துச் சேவைகள் (இலங்கை) நிறுவனம் பண்டாரநாயக்க பன்னாட்டு விமான நிலையத்தில் தற்போதுள்ள பயணிகள் முனையக் கட்டிடத்தில் புனரமைப்பு மற்றும் மீள்வடிவமைப்புச் செயற்றிட்டங்களை மேற்கொண்டு, தற்போதுள்ள இயலளவினை வினைத்திறனாகப் பயன்படுத்த முயற்சித்தது. மேலும், இறக்குமதிச் சரக்கு முனையக் கட்டிடத்தின் நிர்மாணம், பண்டாரநாயக்க பன்னாட்டு விமான நிலையத்தின் உள்ளக மற்றும் வெளியகப் பாதைகளை மாற்றியமைத்தல் மற்றும் பண்டாரநாயக்க பன்னாட்டு விமான நிலையத்தில் இலத்திரனியல் கடைத்தொகுதிக்கான பிணைக்கப்பட்ட பண்டகசாலைச் செயற்றிட்டம் என்பன ஆண்டு காலப்பகுதியில் முன்னேற்றங்கண்டன. மேலும், பண்டாரநாயக்க பன்னாட்டு விமான நிலையத்தின் ஒழுங்கான அபிவிருத்தியினை நிச்சயப்படுத்தும் பொருட்டு, அடுத்த 30 ஆண்டுகளுக்கான வான்வழிப் போக்குவரத்துக் கேள்விகளைத் தளர்த்துவதற்குப் புதிய விமான நிலைய முதன்மைச் செயற்றிட்டமொன்றினை உருவாக்குவதற்கான முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டன. அதேவேளை, கொழும்பு இரத்மலானை பன்னாட்டு விமான நிலையத்தின் 2030ஆம் ஆண்டை நோக்கிய முதன்மைச் செயற்றிட்டத்தின் கீழ் மேலதிக சுற்றுவட்டப் பாதையொன்றுடனான புதிய விமான நகர்வுப் பாதைக் கட்டுமானச் செயற்றிட்டம் 2022 மாச்சில் நிறைவு செய்யப்பட்டது.

**சிறிலங்கன் எயார்லைன்ஸின் நிதியியல் செயலாற்றமானது ஒப்பீட்டளவில் குறைந்தளவிலான தொழிற்பாட்டு நட்டங்களைப் பதிவுசெய்த வேளையில், நடவடிக்கைகள் ஓரளவு மேம்பட்டமையானது பயணத்திற்கான வளர்ச்சியடைந்து வருகின்ற உலகளாவிய நாட்டத்தினைப் பிரதிபலித்தது.** தற்காலிக நிதியியல் கூற்றுக்களின் படி, சிறிலங்கன் எயார்லைன்ஸின் தொழிற்பாட்டு நட்டமானது 2021இன் திசெம்பர் இறுதியில் முடிவடைகின்ற ஒன்பது மாத காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ரூ.15.6 பில்லியன் கொண்ட நட்டத்துடன் ஒப்பிடுகையில் 2022இன் தொடர்புடைய காலப்பகுதியில் ரூ.4.4 பில்லியனிற்கு வரையறுக்கப்பட்டுக் காணப்பட்டது. மீளாய்வுக்குட்பட்ட காலப்பகுதியில், சிறிலங்கன் எயார்லைன்ஸின் வருவாய்கள் 222.9 சதவீத குறிப்பிடத்தக்க அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்த வேளையில் தொழிற்பாட்டுச் செலவினம் 176.0 சதவீதத்தினால் அதிகரித்தது. இலங்கையில் காணப்பட்ட எரிபொருள் நெருக்கடிக்கு மத்தியில் வான்வழிப் போக்குவரத்து எரிபொருள் பற்றாக்குறை மற்றும் அதனைத் தொடர்ந்து வானூர்திகளின் பொது மீள் எரிபொருளேற்றுவதற்கான எரிபொருளின் கிடைப்பனவின்மையெனும் சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் பிரகடனத்துடன் விமான நிலையங்கள் ‘எண்ணெய்த் தொட்டிகளை’ நாடியதுடன் மீள் எரிபொருளேற்றுவதற்காக ஏனைய தரிப்பிடங்களின் ஊடாக தொழிற்பட்டமையானது உயர்ந்தளவிலான செலவினங்களைத் தோற்றுவித்தது. சிறிலங்கன் எயார்லைன்ஸின் நிதியியல் மட்டுப்பாடுகளிலிருந்து தோற்றம்பெற்ற இறைச் சுமையைக் கருத்திற்கொண்டு, கணிசமானளவிலான பங்குகளையும் நிறுவனத்தின் முகாமைத்துவத்தினையும் வெளிப்படைத் தன்மையிலமைந்த பெறுகைச் செய்முறையொன்றினூடாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்ற முதலீட்டாளர்களிடம் ஒப்படைப்பதன் மூலம் சிறிலங்கன் எயார்லைன்ஸினையும் அதன் துணை


நிறுவனங்களையும் மறுசீரமைப்பதற்கான முக்கிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இதற்கமைய, நிதி, பொருளாதார உறுதிப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளை மறுசீரமைப்புச் செய்கின்ற பிரிவானது சிறிலங்கன் எயார்லைன்ஸினை மறுசீரமைப்பதற்கான பரிந்துரைகளை வழங்குவதற்குக் குறித்தொதுக்கப்பட்டது.

## துறைமுகப் பணிகள்

**2022இல் பல்வேறு கட்டுப்பாடுகள் மற்றும் மெதுவடைந்த பொருளாதார நடவடிக்கைகள் என்பவற்றிற்கு மத்தியில் இறக்குமதிக் கேள்வியின் மிதமடைதலினால் துறைமுக நடவடிக்கைகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டன.** ஆண்டின் முதலாம் காலாண்டில் சாதகமான செயலாற்றமொன்று பதிவுசெய்யப்பட்ட போதிலும், துறைமுக நடவடிக்கைகள் 2022இல் ஒட்டுமொத்த சுருக்கமொன்றினைப் பதிவுசெய்தமையானது இறக்குமதிக் கட்டுப்பாடுகள் மற்றும் ஆழ்ந்த பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் துறைமுகத் தொழிற்பாடுகள் மீதான நலிவடைந்த பன்னாட்டு நம்பிக்கை என்பன காரணமாக உள்நாட்டு இறக்குமதி அளவுகளில் ஏற்பட்ட வீழ்ச்சியின் தாக்கத்தினைப் பிரதிபலித்தது. அதேவேளை, உலகளாவிய வர்த்தக அளவுகளின் வளர்ச்சியில் ஏற்பட்ட மிதமடைதலும் ஆண்டு முழுவதும் துறைமுக நடவடிக்கைகள் மீதான தாக்கத்தினைக் கொண்டிருந்தது. இதற்கமைய, ஒட்டுமொத்த கொள்கலன் கையாளல் மற்றும் சரக்கு கையாளல் நடவடிக்கைகள் முறையே 5.3 சதவீதம் மற்றும் 8.2 சதவீதம் கொண்ட ஆண்டிற்காண்டு அடிப்படையிலான சுருக்கங்களைப் பதிவுசெய்த வேளையில், கப்பல் வருகைகளும் 2022 காலப்பகுதியில் 2.6 சதவீத ஆண்டிற்காண்டு அடிப்படையிலான சுருக்கமொன்றினைப் பதிவுசெய்த போதிலும், ஆண்டின் பிற்பகுதியில் சில மேம்பாடுகள் காணப்பட்டன. கொழும்பு துறைமுகத்தின் சகல முனையங்களும் சரக்குக் கையாளல் மற்றும் கொள்கலன் கையாளல் ஆகிய இரண்டிலும் வீழ்ச்சிகளைப் பதிவு செய்துள்ளன. கொழும்பு

வரைபடம் 3.10


**கொள்கலன் கையாளல், மாற்றிக் கப்பலேற்றல் அளவு மற்றும் கப்பல் வருகைகள்**




*மூலம்:* இலங்கை துறைமுக அதிகாரசபை

வரைபடம் 3.11

**துறைமுக நடவடிக்கைகளின் செயலாற்றம்**




*மூலம்:* இலங்கை துறைமுக அதிகாரசபை

பன்னாட்டு கொள்கலன் முனைக்கோடி, ஜெயா கொள்கலன் முனைக்கோடி, ஐக்கிய கொள்கலன் முனைக்கோடி மற்றும் கிழக்கு கொள்கலன் முனைக்கோடியின் முதலாவது துறைமுக மேடை என்பன உள்ளடங்கலாக இலங்கைத் துறைமுக அதிகாரசபை மற்றும் தெற்காசிய நுழைவாயில் முனைக்கோடி என்பன கையாண்ட மொத்த கொள்கலன்களின் அளவில் முறையே 46.4 சதவீதத்திற்கும் 28.1 சதவீதத்திற்கும் 25.5 சதவீதத்திற்கும் மற்றும் கொழும்புத் துறைமுகத்தில் கையாண்ட மாற்றிக் கப்பலேற்றுகின்ற கொள்கலன்களில் முறையே 45.3 சதவீதத்திற்கும் 28.6 சதவீதத்திற்கும் 26.1 சதவீதத்திற்கும் வகைகூறின. அம்பாந்தோட்டை துறைமுகத்தின் மொத்த ஊர்திக் கையாளலானது 2022 காலப்பகுதியில் உள்நாட்டு ஊர்திக் கையாளலுடன் தொடர்புடைய குறைந்தபட்ச நடவடிக்கைகளுக்கு மத்தியில் மாற்றிக் கப்பலேற்றுகின்ற நோக்கங்களுக்கான அதிகரித்த ஊர்திக் கையாளலுடன் விரிவடைந்து காணப்பட்டது. இதற்கமைய, அம்பாந்தோட்டைத் துறைமுகத்தில் கையாளப்பட்ட மொத்த ஊர்திகளின் எண்ணிக்கை 2022இல் 558,188 ஆக விளங்கி, 13.1 சதவீத ஆண்டிற்காண்டு வளர்ச்சியொன்றினைப் பதிவுசெய்தது. ஆண்டு காலப்பகுதியில், ஊர்திக் கப்பலேற்றல்கள் மொத்த ஊர்திக் கையாளலின் 99.8 சதவீதமாக விளங்கி, 13.8 சதவீத ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சியொன்றினைப் பதிவுசெய்த வேளையில், 1,137 ஊர்திகள் மாத்திரமே மோட்டார் வாகன இறக்குமதி மீதான தொடர்ச்சியான கட்டுப்பாடுகளுடன் உள்நாட்டு நோக்கங்களுக்காகக் (அதாவது இறக்குமதிகள்) கையாளப்பட்டன.

**துறைமுக உட்கட்டமைப்பு மற்றும் பணிகள் என்பவற்றின் அபிவிருத்தியானது நாட்டின் உட்கட்டமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலின் முக்கிய முன்னுரிமைகளில் ஒன்றாகத் தொடர்ந்தும் காணப்பட்டது.** இதற்கமைய, கொழும்புத் துறைமுகத்துடனும் பிராந்திய துறைமுகங்களுடனும் தொடர்புடைய முக்கிய அபிவிருத்திச் செயற்றிட்டங்கள் 2022இல் தொடர்ந்தும் விரிவடைந்தன. கிழக்கு கொள்கலன் முனைக்கோடியின் இரண்டாம் கட்டத்தின் நிர்மாணப் பணிகள் ஆண்டு காலப்பகுதியில் முன்னேற்றங்கண்டதுடன் மண் அகழ்வு

3

அட்டவணை 3.7

**துறைமுகப் பணிகளின் செயலாற்றம்**

| விடயம் | 2021 | 2022 (அ) | வளர்ச்சி வீதம் (%) 2021 | வளர்ச்சி வீதம் (%) 2022 (அ) |
|---|---|---|---|---|
| **1. வருகை தந்த கப்பல்கள் (எண்ணிக்கை)** | **4,180** | **4,073** | **-3.6** | **-2.6** |
| கொழும்பு | 3,675 | 3,648 | -3.4 | -0.7 |
| காலி | 14 | 7 | -36.4 | -50.0 |
| திருகோணமலை | 117 | 95 | -13.3 | -18.8 |
| அம்பாந்தோட்டை | 374 | 323 | - | -13.6 |
| **2. கையாளப்பட்ட மொத்தச்சரக்கு ('000 மெ.தொ)** | **109,369** | **100,376** | **6.3** | **-8.2** |
| கொழும்பு | 103,824 | 96,170 | 6.3 | -7.4 |
| எஸ்ஏஜீரி | 24,062 | 22,731 | -3.3 | -5.5 |
| சிஐசீரி | 42,400 | 41,717 | 13.6 | -1.6 |
| இதுஅ | 37,362 | 31,722 | 5.3 | -15.1 |
| காலி | 106 | 1 | -73.8 | -98.9 |
| திருகோணமலை | 3,190 | 2,089 | 3.8 | -34.5 |
| அம்பாந்தோட்டை | 2,249 | 2,116 | 28.5 | -5.9 |
| **3. மொத்தக் கொள்கலன் போக்குவரத்து (000 இ.க.அ.) (ஆ)** | **7,249** | **6,862** | **5.8** | **-5.3** |
| எஸ்ஏஜீரி | 1,839 | 1,752 | -1.8 | -4.7 |
| சிஐசீரி | 3,212 | 3,184 | 11.3 | -0.9 |
| இதுஅ | 2,198 | 1,926 | 4.8 | -12.4 |
| **4. மாற்றிக் கப்பலேற்றல் கொள்கலன் கையாளல் ('000 இ.ச.அ) (ஆ) (இ)** | **6,050** | **5,832** | **4.9** | **-3.6** |
| எஸ்ஏஜீரி | 1,573 | 1,523 | -2.1 | -3.2 |
| சிஐசீரி | 2,600 | 2,640 | 13.4 | 1.5 |
| இதுஅ | 1,877 | 1,670 | 0.6 | -11.1 |

(அ) தற்காலிகமானது

(ஆ) இ.ச.அ = இருபது அடிக்குச் சமமான கொள்கலன் அலகுகள்

(இ) மீட்டமைத்தல் உள்ளடங்கலாக

*மூலம்:* இலங்கைத் துறைமுக அதிகாரசபை

மற்றும் நில மீட்சி என்பவற்றுடன் தொடர்புடைய 30 சதவீதப் பணிகள் 2022 இறுதியளவில் நிறைவடைந்தன. அதேவேளையில், செயற்றிட்டத்தின் அபிவிருத்திக்காக வெளிநாட்டு முதலீட்டாளர், உள்நாட்டு முதலீட்டாளர் மற்றும் இலங்கைத் துறைமுக அதிகாரசபை ஆகியோருக்கிடையிலான 35 ஆண்டுகளுக்கும் மேலாக நீடித்து வருகின்ற கட்டுமானம்-செயற்படுத்தல்-மாற்றல் உடன்படிக்கை இறுதிப்படுத்தப்பட்டதனைத் தொடர்ந்து, கொழும்பு துறைமுகத்தின் மேற்குக் கொள்கலன் முனைக்கோடியின் நிர்மாணப் பணிகள் 2022 நவெம்பரில் தொடங்கப்பட்டன. கிழக்குக் கொள்கலன் முனைக்கோடி மற்றும் மேற்குக் கொள்கலன் முனைக்கோடி என்பன முறையே 2025 மற்றும் 2027 ஆண்டளவில் நிறைவடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இரண்டு முனைக்கோடிகளும் நிறைவடைந்தவுடன், கொழும்புத் துறைமுகத்தின் மதிப்பிடப்பட்ட வருடாந்த இயலளவு ஏறத்தாழ 6 மில்லியன் பெறுமதியான இருபது அடிக்கு நிகரான அலகுகளினால் மேம்படுத்தப்படுமென எதிர்பார்க்கப்படுவதுடன் இது துறைமுகத் துறையில் எதிர்காலக் கேள்வியைப் பூர்த்தி செய்வதற்குப் பாரியளவில் துணைபுரிந்து, கொழும்புத் துறைமுகம் அதன் உபாய ரீதியிலான புவிசார் அமைவிடத்திலிருந்து பயன்களைப் பெற்றுக்கொள்வதனை இயலச்செய்யும். மேலும், கொழும்பு வடக்குத் துறைமுக அபிவிருத்திச் செயற்றிட்டத்திற்கான சாத்திய ஆய்வு மற்றும் புதிய துறைமுக தொடர்பூட்டல் முறைமையொன்றினை நடைமுறைப்படுத்துவதற்கான பூர்வாங்க வடிவமைப்பு மற்றும் சாத்திய ஆய்வு என்பனவும் 2022இல் முன்னெடுக்கப்பட்டன. காங்கேசன்துறைத் துறைமுகத்தை பன்னாட்டு வர்த்தகத் துறைமுகமொன்றாகப் புனரமைப்பதற்கு முன்னெடுக்கப்படுகின்ற பணிகளுக்கு மேலதிகமாக, காங்கேசன்துறைக்கும் தென்னிந்தியாவின் பாண்டிச்சேரிக்கும் இடையிலான படகுச் சேவையொன்றினை ஆரம்பிப்பதற்கான செயற்றிட்டத்திற்கு 2022 செத்தெம்பரில் அமைச்சரவை ஒப்புதலளித்தது. இது தொடர்பாக, வடிவமைப்பு, கட்டுமானம், செயற்படுத்தல் மற்றும் மாற்றல் உடன்படிக்கையின் கீழ் பயணிகள் முனையத்தினை அபிவிருத்தி செய்வதற்கான பரிசோதனைசார் ஏற்பாடுகள் மற்றும் முன்மொழிவுக்கான கோரிக்கை ஆண்டு காலப்பகுதியில் முன்னேற்றங்கண்டன. இதேவேளை, முதலீட்டாளர்களின் தெரிவுப் பட்டியலின் நிறைவடைதலினைத் தொடர்ந்து, காலி துறைமுக அபிவிருத்திச் செயற்றிட்டத்தின் கீழ் முன்மொழிவுக்கான கோரிக்கையினையும் செயற்றிட்ட உடன்படிக்கையினையும் தயாரிக்கும் பணிகள் முன்னேற்றமடைந்து காணப்பட்டன.


**செலாவணி வீதத்தில் காணப்பட்ட குறிப்பிடத்தக்க தேய்வடைதலினால் ஆதரவளிக்கப்பட்ட அதிகரித்த வருவாயினால் பாரியளவில் உந்தப்பட்டு துறைமுக நடவடிக்கைகளின் ஒட்டுமொத்த வீழ்ச்சிக்கு மத்தியில் இலங்கைத் துறைமுக அதிகாரசபையின் நிதியியல் செயலாற்றமானது 2022இல் மேம்பட்டுக் காணப்பட்டது.** 2022 ஏப்பிறல் 01 தொடக்கம் நடைமுறைக்கு வந்த இலங்கைத் துறைமுக அதிகாரசபையின் துறைமுக கட்டணங்களின் மேல்நோக்கிய திருத்தமும் வருவாயில் ஏற்பட்ட அதிகரிப்பிற்குப் பகுதியளவில் பங்களித்தன. மேலும், இலங்கைத் துறைமுக அதிகாரசபையின் முனைக்கோடி முகாமைத்துவ முறைமை மற்றும் பயிற்சி முயற்சிகள் என்பவற்றின் ஆதரவுடன் இலங்கைத் துறைமுக அதிகாரசபையின் மணித்தியாலத்திற்கான சுமை தூக்கி உற்பத்தித்திறனுடன் தொடர்புடைய துறைமுக நடவடிக்கையின் வினைத்திறன் தன்மை முன்னைய ஆண்டிலும் பார்க்க 2022இல் குறிப்பிடத்தக்களவு மேம்பட்டுக் காணப்பட்டது. இதற்கமைய, இலங்கைத் துறைமுக அதிகாரசபையின் மொத்த வருவாய்கள் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் ரூ.68.4 பில்லியனிற்கு 50.5 சதவீதத்தினால் அதிகரித்துள்ள வேளையில், தொழிற்பாட்டுச் செலவினம் ரூ.43.7 பில்லியனிற்கு 33.0 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. இதன் விளைவாக, இலங்கைத் துறைமுக அதிகாரசபை 2021இல் பதிவுசெய்த ரூ.25.6 பில்லியன் கொண்ட வரிகளுக்கு முன்னரான இலாபத்துடன் ஒப்பிடுகையில் 2022இல் ரூ.57.0 பில்லியனாகக் காணப்பட்டது.

## தொடர்பூட்டல் பணிகள்

**உலகளாவிய நோய்த்தொற்று மற்றும் மெதுவடைந்த பொருளாதார நடவடிக்கை என்பன காணப்பட்ட காலப்பகுதியில் உயர்வடைந்திருந்த தொடர்பூட்டலுக்கான கேள்வியானது 2022இன் பிற்பகுதியில் ஏற்பட்ட மெதுவடைதலின் காரணமாக**

**தொலைத்தொடர்பூட்டல் துறையின் செயலாற்றமானது மிதமடைந்து காணப்பட்டது.** உலகளாவிய நோய்த்தொற்றின் தொடக்கத்திலிருந்து பின்பற்றப்பட்ட பணி, கல்வி மற்றும் ஏனைய நாளாந்த நடவடிக்கைகளுக்கான இணையவழித் தளங்களின் அடிப்படையிலான முறைமையின் தடங்கலற்ற தன்மையினால் பாரியளவில் உந்தப்பட்டு, 2022இன் முதலாம் அரையாண்டுக் காலப்பகுதியில் வலுவான வளர்ச்சி உத்வேகமொன்றினை தொலைத்தொடர்பூட்டல் துறை பதிவுசெய்தது. இருப்பினும், பொதுமக்களின் நகர்வு படிப்படியாக இயல்புநிலைக்குத் திரும்பியமை மற்றும் பணி மற்றும் கல்விசார் நடவடிக்கைகளுக்கு நேரடியாக சமுகமளித்தலிலான மீளாரம்பம் என்பவற்றினைத் தொடர்ந்து, 2022இன் பிற்பகுதியில் தொலைத்தொடர்பூட்டல் நடவடிக்கைகள் மிதமடைந்து காணப்பட்டன. அதேவேளை, தொலைத்தொடர்பூட்டல் கட்டணங்களில் மேற்கொள்ளப்பட்ட மேல்நோக்கிய சீராக்கமானது 2022இன் பிற்பகுதியில் துறைச் செயலாற்றத்தின் மிதமடைதலுக்குப் பகுதியளவில் பங்களித்தது. பொருத்தப்பட்ட தொலைபேசி இணைப்புக்கள் 2022இன் முதலாம் அரையாண்டுப் பகுதியில் 6.3 சதவீத வளர்ச்சியொன்றினைப் பதிவுசெய்த போதிலும், 2022இல் 7.0 சதவீதம் கொண்ட ஒட்டுமொத்த ஆண்டிற்கு ஆண்டு வீழ்ச்சியொன்றினைப் பதிவுசெய்தன. ஆண்டு காலப்பகுதியில், செல்லிடத் தொலைபேசி இணைப்புக்களும் 3.7 சதவீதத்தினால் ஆண்டிற்கு ஆண்டு வீழ்ச்சியடைந்ததுடன் செல்லிடத் தொலைபேசி மற்றும் பொருத்தப்பட்ட இணைய இணைப்புக்களை உள்ளடக்கிய மொத்த இணைய இணைப்புக்கள் 2.0 சதவீதத்தினால் ஆண்டிற்கு ஆண்டு சுருக்கமடைந்தன. 100 நபர்களுக்கான இணைப்புக்கள் மூலம் அளவிடப்பட்டவாறு, பொருத்தப்பட்ட மற்றும் செல்லிடத் தொலைபேசி ஊடுருவல் என்பன முறையே 12.0 மற்றும் 142.0 ஆக விளங்கிய அதேவேளை, இணைய ஊடுருவல் 2022இன் இறுதியளவில் 97.7 ஆக விளங்கியது. உலகளாவிய நோய்த்தொற்றுடன் தொடர்புடைய நகர்வு மீதான கட்டுப்பாடுகளின் நீக்கலுடன் 2021 ஒத்தோபரிலிருந்து வீழ்ச்சியடைந்து சென்றுகொண்டிருந்த மொத்த தரவுப் பயன்பாடானது 2022

வரைபடம் 3.12
தொலைபேசி மற்றும் இணைய நுழைவு




*மூலங்கள்:* இலங்கைத் தொலைத்தொடர்பூட்டல் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு
தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

அட்டவணை 3.8
தொலைத்தொடர்பூட்டல் துறையின் செயலாற்றம்

| விடயம் | 2021 (அ) | 2022 (ஆ) | வளர்ச்சி வீதம் (%) | |
|---|---|---|---|---|
| | | | 2021 (அ) | 2022 (ஆ) |
| பொருத்தப்பட்ட தொலைபேசி பணிகள் (எண்ணிக்கை) ('000) | 2,852 | 2,651 | 9.1 | -7.0 |
| சேவையிலுள்ள கம்பிவழித் தொலைபேசி இணைப்புக்கள் | 1,264 | 1,263 | 1.5 | -0.1 |
| கம்பியல்லா உள்ளூர் தொலைபேசி இணைப்புக்கள் | 1,587 | 1,388 | 16.1 | -12.5 |
| செல்லிடத் தொலைபேசிகள் (எண்ணிக்கை) ('000) | 29,959 | 28,838 | 4.2 | -3.7 |
| இணையத்தளத் தொடர்புகள் (எண்ணிக்கை) ('000) (இ) | 22,106 | 21,668 | 26.1 | -2.0 |
| நுழைவு (ஈ) | | | | |
| பொருத்தப்பட்ட தொலைபேசிகள் | 12.9 | 12.0 | 8.0 | -7.1 |
| செலூலர் தொலைபேசிகள் | 135.2 | 130.0 | 3.1 | -3.8 |
| இணையம் (இ) | 99.8 | 97.7 | 24.8 | -2.1 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) செல்லிடத் தொலைபேசி இணையத் தொடர்புகள் உள்ளடங்கலாக
(ஈ) 100 நபர்களுக்கான தொடர்புகள் என வரையறுக்கப்பட்டுள்ளது


*மூலங்கள்:* இலங்கைத் தொலைத் தொடர்பூட்டல் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு
தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

3

மாச்சிலிருந்து ஆரம்பித்து ஆண்டு காலப்பகுதியில் படிப்படியான அதிகரிப்பொன்றினைக் காண்பித்தது. மேலும், கடுமையான எரிபொருள் பற்றாக்குறைகளினால் ஏற்பட்ட போக்குவரத்து இடையூறுகளுக்கு மத்தியில், தொலைவிலிருந்து பணி மற்றும் கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான நகர்வுடன் 2022 யூலையில் தரவுப் பயன்பாட்டில் சடுதியான உயர்வொன்று பதிவுசெய்யப்பட்டது.

**பொருளாதாரத்தில் எதிர்பார்க்கப்படுகின்ற இலத்திரனியல் நிலைமாற்றத்தினை வசதிப்படுத்தும் பொருட்டு 2022இல் இலத்திரனியல் உட்கட்டமைப்புத் தளத்தினை மேம்படுத்துவதில் அரசாங்கமும் ஏனைய முக்கிய ஆர்வலர் நிறுவனங்களும் தொடர்ந்தும் ஈடுபட்டன.** இலங்கைத் தொலைத்தொடர்பூட்டல் ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு 'கமட சன்னிவேதனய' எனும் செயற்றிட்டத்தின் ஊடாக நாடு முழுவதும் இலத்திரனியல் பணிகளுக்கான தடங்கலற்ற அணுகலை நிச்சயப்படுத்தும் பொருட்டு நாடளாவிய ரீதியில் 4G கவரேஜ் வலையமைப்பினை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. 2021 தொடக்கம் 2024 வரையான காலப்பகுதியில் 10 மாவட்டங்களில் 276 கோபுரத் தளங்களை நிறுவுதலானது ஆரம்பத் திட்டமாகக் காணப்பட்ட போதிலும், பொருளாதார அழுத்தங்களின் முதன்மைக் காரணமாகச் செயற்றிட்டத்தினை 2026 ஆண்டளவில் நிறைவுசெய்வதற்கு மீள்திட்டமிடப்பட்டது. 2022இன் இறுதியளவில், இச்செயற்றிட்டத்தின் கீழ், 38 கோபுர தளங்கள் நிறைவு செய்யப்பட்டு ஊடுகடத்தப்பட்டு செயற்பாட்டிலிருந்தன. இலங்கைத் தொலைத்தொடர்பூட்டல் ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு 2023 ஆண்டளவில் வர்த்தக ரீதியிலான 5G சேவைகளை இயலச்செய்வதனை நோக்காகக் கொண்டுள்ளது. அதேவேளை, 2022 மாச்சில்

வரைபடம் 3.13
அகலப்பட்டை தரவுப் பயன்பாடு




*மூலங்கள்:* டயலொக் எக்சியாட்டா பி.எல்.சி.
இலங்கை டெலிகொம் பி.எல்.சி.
மொபிடெல் (தனியார்) லிமிடெட்
பார்டி எயார்டெல் லங்கா (தனியார்) லிமிடெட்

குறிப்பு: 1 பெடாபைட் = 1 மில்லியன் ஜிகாபைட்

3

2022ஆம் ஆண்டின் 9ஆம் இலக்கத் தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புச் சட்டத்தின் சட்டவாக்கத்துடன் அனைத்தையுமுள்ளடக்கிய தரவுப் பாதுகாப்புச் சட்டவாக்கத்தினைச் சட்டவாக்கம் செய்த முதலாவது தென்னாசிய நாடாக இலங்கை திகழ்ந்தது. 2023இல் தரவுப் பாதுகாப்பு அதிகாரசபையின் நிறுவுதலுடன் தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புச் சட்டம் வினைத்திறனான கண்காணிப்பு மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் செய்முறையொன்றின் மூலம் பொதுமக்களின் தகவல்களைப் பாதுகாக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. தகவல் மற்றும் தொடர்பூட்டல் தொழில்நுட்ப முகவராண்மையானது அரசாங்க நிறுவனங்களின் பணி வழங்கலின் செயற்றிறனை மேம்படுத்துவதற்கும் தகவல் தொழில்நுட்பம் மற்றும் வெளியிலிருந்து வியாபாரப் பணிகளைப் பெற்றுக்கொள்ளல் தொழிற்துறையின் போட்டித்தன்மையை மேம்படுத்துவதற்கும் 'தேசிய இலத்திரனியல் நிலைமாற்ற உபாயத்தின்' கீழ் முன்னெடுப்புக்களை நடைமுறைப்படுத்தியது. ஆண்டு காலப்பகுதியில், லங்கா அரசாங்க வலையமைப்பு 2.0, லங்கா அரசாங்க கிளவுட் 2.0, இலங்கையின் தனித்துவமான இலத்திரனியல் அடையாளப்படுத்தல் கட்டமைப்புச் செயற்றிட்டம், தொழில்நுட்ப வியாபித்தல் செயற்றிட்டம் மற்றும் இலத்திரனியல் ரீதியாக அனைத்தையுமுள்ளடக்கிய இலங்கைக்கான இயலளவு அபிவிருத்தி போன்ற பாரியளவிலான செயற்றிட்டங்கள் உள்ளடங்கலாக தகவல் மற்றும் தொடர்பூட்டல் தொழில்நுட்ப முகவராண்மையின் கண்ணோட்டத்தின் கீழ் 23 செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. மேலும், தேசிய உபாயத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட மேலும் 17 செயற்றிட்டங்களுக்கான தகவல் மற்றும் தொடர்பூட்டல் தொழில்நுட்ப முகவராண்மை தொழில்நுட்ப நிபுணத்துவத்தினை வழங்கியது. மேலும், தொலைத்தொடர்பூட்டல் துறையின் அபிவிருத்தியில் மைல்கல்லொன்றினைப் பதிவுசெய்து, தகவல் மற்றும் தொடர்பூட்டல் தொழில்நுட்ப முகவராண்மையானது ஏனைய இரு முன்னணி தனியார் துறைத் தொலைத்தொடர்பூட்டல் மற்றும் தகவல் தொழில்நுட்ப கம்பனிகளுடன் இணைந்து தேசிய எரிபொருள் உரிமத்திற்கான கியுஆர் முறைமையினை நடைமுறைப்படுத்தியது. தேசிய எரிபொருள் உரிமத்திற்கான கியுஆர் முறைமையானது 2022இல் பெற்றோலிய எண்ணெய்ப் பகிர்ந்தளிப்புடன் இணைந்த சமூக பதற்றங்களைத் தளர்த்துவதில் கருவியொன்றாகக் காணப்பட்டதுடன் இது ஏனைய பொதுப் பணிகளை இதற்கு நிகரான தளங்களுக்கு நிலைமாற்றுவதற்கு ஊக்கமளிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. அதேவேளை, ஆண்டு காலப்பகுதியில் செலாவணி வீதத்தின் தேய்வடைதலிலிருந்து தோற்றம்பெற்ற உயர்வடைந்த தொழிற்பாட்டுச் செலவினைக் கருத்திற்கொண்டு தொலைத்தொடர்பூட்டல் கட்டணங்கள் 2022 செத்தெம்பரிலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் மேல்நோக்கித் திருத்தப்பட்டன. இதற்கமைய, தரவு, குரல் அழைப்பு மற்றும் பே-டீவி (pay-Tv) இணைப்புக்கள் என்பவற்றுடன் தொடர்புடைய கட்டணங்கள் 20 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில், பயன்பாட்டுக் கட்டணங்கள் மாற்றமின்றிக் காணப்பட்டன.

**2022 காலப்பகுதியில் தொழிற்பாட்டு நடவடிக்கைகளில் காணப்பட்ட இடையூறுகள் காரணமாக அஞ்சல் திணைக்களத்தின் செயலாற்றம் தொடர்ந்தும் மெதுவடைந்து காணப்பட்டது.** நாடளாவிய ரீதியில் 8,157 வழங்கல் பிரதேசங்களை உள்ளடக்குகின்ற விதத்தில் 653 பிரதான அஞ்சல் அலுவலகங்கள், 3,342 உப அஞ்சல் அலுவலகங்கள் மற்றும் 140 முகவர் அஞ்சல் அலுவலகங்கள் என்பனவூடாக அஞ்சல் பணிகள் வழங்கப்பட்டன. அஞ்சல் திணைக்களமானது புத்துருவாக்க பணி அணுகுமுறைகளினூடாக அதன் பணி வழங்கலை தொடர்ந்தும் மேம்படுத்திய வேளையில், சமூக ஊடக தளங்களின் வாயிலாக அத்தகைய பணிகள் பற்றிய பொதுமக்கள் விழிப்புணர்வினை ஊக்குவிக்கவும் அதிகரிக்கவும் நடவடிக்கைகளை மேற்கொண்டது. இதற்கமைய, 2020இல் மீள ஆரம்பிக்கப்பட்ட 'வழங்கலின் போதான காசுக் கொடுப்பனவு' சேவைகள் 2021இல் பதிவுசெய்யப்பட்ட ரூ.34.0 மில்லியன் கொண்ட வருமானத்துடன் ஒப்பிடுகையில் 2022இல் ரூ.269.0 மில்லியன் கொண்ட குறிப்பிடத்தக்க வருமானமொன்றினைப் பதிவுசெய்தன. நான்கு ஆண்டுகளுக்கும் மேலானதோர் இடைவெளிக்குப் பின்னர், அஞ்சல் பணிகளுடன் தொடர்புடைய போக்குவரத்துச் செலவு உயர்வுகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் வெளிநாட்டு அஞ்சல் வீதங்களுக்கான திருத்தங்களுடன் இணைந்து, உள்நாட்டு அஞ்சல் வீதங்கள் 2022 ஓகத்தில் மேல்நோக்கித் திருத்தப்பட்டன. இதற்கமைய, உள்நாட்டுச் சாதாரண அஞ்சல் சேவை மற்றும் குறைந்தபட்ச பதிவு கட்டணம் என்பவற்றிற்குப் பிரயோகிக்கத்தக்க குறைந்தபட்ச அஞ்சல் கட்டணங்கள் முறையே ரூ.35.00 மற்றும் ரூ.30.00 இனால் முறையே ரூ.50.00 மற்றும் ரூ.60.00 இற்கு அதிகரித்த வேளையில், ஏனைய அஞ்சல் சேவைகளுக்குப் பிரயோகிக்கத்தக்க அநேகமான கட்டணங்கள் ஆண்டு காலப்பகுதியில் மேல்நோக்கி உயர்த்தப்பட்டன. இம்முன்னேற்றங்கள் காணப்பட்ட போதிலும், 2022இல் அஞ்சல் திணைக்களத்தின் ஒட்டுமொத்த நிதியியல் நிலைமை தொடர்ந்தும் நலிவடைந்து காணப்பட்டது. அஞ்சல் திணைக்களத்தின் தற்காலிக நிதியியல் கூற்றுக்களின் பிரகாரம்,

வருவாய்கள் ரூ.9.3 பில்லியனிற்கு 29.6 சதவீதத்தினால் அதிகரித்த போதிலும், ரூ.16.1 பில்லியனிற்கு 15.3 சதவீதத்தினால் அதிகரித்த உயர்ந்தளவிலான தொழிற்பாட்டுச் செலவினமானது 2021இல் பதிவுசெய்யப்பட்ட ரூ.7.2 பில்லியன் நட்டத்துடன் ஒப்பிடுகையில் 2022இல் ரூ.7.0 பில்லியன் கொண்ட தொழிற்பாட்டு நட்டமொன்றினைத் தோற்றுவித்தது. அஞ்சல் திணைக்களத்தின் நிதியியல் ஆற்றலை மேம்படுத்துவதற்கான கிரமமான அஞ்சல் கட்டணத் திருத்த பொறிமுறைகளிற்குப் புறம்பாக, நாட்டில் அஞ்சல் சேவையின் வளர்ச்சியடைந்து வருகின்ற நுகர்வோர் தேவைகளைக் கருத்திற்கொண்டு, ஏனையவற்றிற்கிடையில் விரிவடைந்த சேவைப் பன்முகப்படுத்தன்மையின் ஊடாக தன்னியக்கச் சேவை, இணையவழிச் சேவை, 'ஓர் இடத்திலிருந்து இன்னுமோர் இடத்திற்குத் தொடர்ச்சியாக சுவட்டினைப் பின்பற்றிச் செல்லல்', வாடிக்கையாளரிடம் வந்து பொருட்களைப் பெற்றுக்கொள்ளும் சேவை ஆகிய வடிவங்களில் நவீன தொழில்நுட்பம், புத்துருவாக்கம் மற்றும் வாடிக்கையாளர்களை மையமாகக் கொண்ட அணுகுமுறைகளில் உயர்ந்தபட்ச அனுகூலத்தினைப் பெற்றுத்தருகின்ற விரிவான நவீனமயமாக்கலை அஞ்சல் திணைக்களம் தேவைப்படுத்துகின்றது.


## நீர் வழங்கல் மற்றும் நீர்ப்பாசனம்

**2022 காலப்பகுதியில் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை குழாய் நீரிற்கான வளர்ச்சியடைந்து வருகின்ற கேள்வியைப் பூர்த்தி செய்ய பாதுகாப்பான மற்றும் நீடித்து நிலைத்திருக்கக்கூடிய நீரை வழங்குவதற்கான அதன் பணிகளை விரிவுபடுத்தியது.** 153,217 புதிய நீர் வழங்கல் இணைப்புகளின் வழங்கலுடன், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையினால் நிர்வகிக்கப்பட்ட மொத்த இணைப்புகளின் எண்ணிக்கை ஆண்டு காலப்பகுதியில் 2.9 மில்லியனிற்கு அதிகரித்தது. இதற்கமைய, பாதுகாப்பான குடிநீரிற்கான அணுகல் வசதியினைக் கொண்டுள்ள குடித்தொகையின் சதவீதம் 2021இல் பதிவுசெய்யப்பட்ட 94.4 சதவீதத்திலிருந்து 2022இல் 96.0 சதவீதத்திற்கு அதிகரித்த வேளையில், மொத்த குழாய் நீரிற்கான உள்ளடக்கம் 2022இல் குடித்தொகையின் 60.4 சதவீதமாக விளங்கியது. மேலும், நாட்டின் வருமானமல்லாத நீர்ப் பயன்பாட்டின் விகிதாசாரம் 2021இல் பதிவுசெய்யப்பட்ட 25.8 சதவீதத்திலிருந்து 2022இல் 25.2 சதவீதத்திற்கு சிறிதளவு வீழ்ச்சியடைந்துள்ளது. ஆண்டு காலப்பகுதியில், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் நீர் வழங்கல் மேம்பாட்டு முயற்சிகள் நிதியியல் மட்டுப்பாடுகளினாலும் பேரண்டப் பொருளாதார உறுதிப்பாடின்மையினாலும் தடைப்பட்டமையானது தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் அபிவிருத்திச் செயற்றிட்டங்களில் மெதுவான வேகத்திலான முன்னேற்றமொன்றினைத் தோற்றுவித்தது. இலங்கையின் குழாய் நீர் உள்ளடக்கம் 2025 ஆண்டளவில் 79 சதவீதத்திற்கு அதிகரிப்பதனை நோக்காகக் கொண்ட தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் மாபெரும் அபிவிருத்திச் செயற்றிட்டமான 'அனைவருக்கும் நீர்' எனும் செயற்றிட்டமானது அமைச்சரவையின் ஒப்புதலுடன் 2022இல் நிறுத்தப்பட்டது. மாறாக, தற்போதுள்ள நீர் வழங்கல் செயற்றிட்டங்களின் இயலளவினையும் பகிர்ந்தளிப்பு விரிவாக்கத்தினையும் மேம்படுத்துவதனை நோக்காகக் கொண்டு ஆண்டு காலப்பகுதியில் 'இயலளவு மேம்பாடு மற்றும் பகிர்ந்தளிப்பு விரிவாக்கச்' செயற்றிட்டம் தொடங்கப்பட்டது. இதேவேளை, 2017இல் ஆரம்பிக்கப்பட்டு ஆண்டு காலப்பகுதியில் நிறைவடைந்த பாரிய மாத்தளை நீர் வழங்கல் திட்டமானது மாத்தளை நகரம் மற்றும் அதனைச் சூழவுள்ள 90,000 குடும்பங்களுக்குப் பாதுகாப்பான குடிநீரை வழங்குகின்ற அதேவேளையில், காலிக் கொத்தணிச் செயற்றிட்டம் மற்றும் கொழும்பு நீர் வழங்கல் சேவையின் செயற்றிட்டம் I ஆகிய மேம்பாட்டுச் செயற்றிட்டங்களும் 2022 இல் நிறைவடைந்தன. மேலும், அலவ்வ, பொல்கஹவெல, பொத்துஹர ஒருங்கிணைந்த நீர் வழங்கல் செயற்றிட்டம் மற்றும் மாத்தறை நீர் வழங்கல் செயற்றிட்டம்-கட்டம் IV ஆகியன 2022இல் முறையே 94.0 சதவீத மற்றும் 93.1 சதவீத பௌதீக முன்னேற்றமொன்றினை எய்திய வேளையில், இவ்விரு செயற்றிட்டங்களும் 2023இல் நிறைவடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. செயற்றிட்டங்களின் நிறைவடைதலினைத் தொடர்ந்து, இச்செயற்றிட்டங்கள் தென் மற்றும் வடமேல் மாகாணங்களிலுள்ள 20 பிரதேச செயலகங்களில் பாதுகாப்பான குடிநீர் வசதிகளை மேம்படுத்துவதனை நோக்காகக் கொண்டுள்ளன. மேலும், யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய நீர் வழங்கல் மற்றும் சுகாதாரச் செயற்றிட்டமானது இவ்விரு மாவட்டங்களிலுமுள்ள 300,000 பயனாளிகளின் நீர்த் தேவைப்பாட்டினைப் பூர்த்தி செய்வதனை நோக்காகக் கொண்டதுடன் 2022 இறுதியளவில் 71.4 சதவீத பௌதீக முன்னேற்றமொன்றினைப் பதிவுசெய்தது. இருப்பினும், நிதியியல் நெருக்கடிகளுக்கு மத்தியில் ஆண்டு காலப்பகுதியில் காணப்பட்ட மெதுவான வேகத்திலான முன்னேற்றம் காரணமாக ஏனைய பல்வேறு நீர் வழங்கல் செயற்றிட்டங்கள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டதுடன் ஏறத்தாழ பத்து முக்கிய நீர் வழங்கல் செயற்றிட்டங்களுக்கான எதிர்பார்க்கப்பட்ட நிறைவுக் காலக்கெடுவும் நீடிக்கப்பட்டது.

**10 ஆண்டு காலப்பகுதியிலானதோர் இடைவெளிக்குப் பின்னர் 2022இல் நீர் மற்றும் கழிவு நீர் தீர்வைகளின் மேல்நோக்கிய திருத்தமானது தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் நிதியியல் செயலாற்றத்தினை வலுப்படுத்தத் துணைபுரிந்தது.** நாட்டில் நீர் வழங்கலிற்கும் நீர் உட்கட்டமைப்பினைப் பராமரிப்பதற்குமான அதிகரித்து வருகின்ற செலவினையும் நீர்த் தீர்வைகளுக்கான கிரமமான திருத்தங்களின்மையினால் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையினால் உறப்பட்ட அதன் விளைவான நிதியியல் நட்டங்களையும் கருத்திற்கொண்டு, நீர் மற்றும்

3

வரைபடம் 3.14
நீர் வழங்கலின் நிலைமை




*மூலம்:* தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை

3

கழிவு நீர்த் தீர்வைகளை 2022 செத்தெம்பர் 01இலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் மேல்நோக்கித் திருத்துவதற்கு அமைச்சரவை ஒப்புதலளித்தது. இதற்கமைய, குடியிருப்பாளர் வகைக்கான பயன்பாட்டுத் தீர்வைகள் ஏறத்தாழ 70.0 சதவீதத்தினால் உயர்த்தப்பட்டதுடன் பயனாளர்களின் சகல வகைகளுக்குமான அடுக்கு நீர்த் தீர்வை முறைமை கணிசமானளவில் அதிகரிக்கப்பட்டது. இருப்பினும், சமுர்த்தி பெறுநர்கள் போன்ற குறை வருமான நுகர்வோருக்கு பிரயோகிக்கக் கூடிய தீர்வைகள் பாடசாலைகள், சமய மற்றும் தொண்டு நிறுவனங்கள் போன்ற வகைகளுக்கு பிரயோகிக்கக் கூடிய தீர்வை வீதங்களுடன் இணைந்து தொடர்ந்தும் பாரியளவில் மாற்றமின்றிக் காணப்பட்டன. மேலும், புதிய நீர் இணைப்புகளுக்கான கட்டணங்களும் 2022 ஒத்தோபர் 17 தொடக்கம் நடைமுறைக்கு வரும் விதத்தில் மேல்நோக்கித் திருத்தப்பட்டன. இத்திருத்தங்களுக்குப் பகுதியளவில் பங்களித்து, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் தொழிற்பாட்டு நட்டம் முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட ரூ.3.1 பில்லியன் நட்டத்துடன் ஒப்பிடுகையில் 2022இல் ரூ.1.2 பில்லியனிற்கு வீழ்ச்சியடைந்தது. முன்னோக்கிச் செல்கையில், நீர்த் தீர்வைகள் கிரமமாக அட்டவணையிடப்பட்ட கால இடைவெளிகளில் திருத்தச் செய்முறைக்கு உட்படுத்தப்படுவது இன்றியமையாததாகக் காணப்படுவதுடன் அதன்மூலம் நீண்ட காலத்திற்கு மக்களின் நலன் மற்றும் நலனோம்புகையைப் பாதுகாக்கும் பொருட்டு நாட்டின் நீர் வழங்கல் மற்றும் சுகாதார முறைமையின் நீடித்துநிலைத்திருக்கும் தன்மை நிச்சயப்படுத்தப்படும்.

**நீர்ப்பாசன திணைக்களம் 2022இல் வேளாண்மை மற்றும் குடியிருப்பு நோக்கங்களுக்கான நீர்ப்பாசனச் செயற்றிட்டங்களைப் பராமரிப்பதற்கும் மேம்படுத்துவதற்குமான அதன் முயற்சிகளைத் தொடர்ந்தது.** ஆண்டு காலப்பகுதியில், நீர்ப்பாசன திணைக்களம் ரூ.3.8 பில்லியன் மொத்த செலவொன்றினை ஏற்படுத்துகின்ற 19 முக்கிய நீர்ப்பாசனச் செயற்றிட்டங்களை முன்னேற்றமடையச் செய்ததுடன் இதில் உமா ஓயா நீரோட்டத் திசை அபிவிருத்திச் செயற்றிட்டத்திற்கு ரூ.2.0 பில்லியனும் யான் ஓயா செயற்றிட்டத்திற்காக ரூ.616.3 மில்லியனும் செலவிடப்பட்டது. உமா ஓயா நீரோட்டத் திசை அபிவிருத்திச் செயற்றிட்டம் 2022 இறுதியளவில் 74.1 சதவீத பௌதீக முன்னேற்றமொன்றினை எட்டியது. ஆண்டு காலப்பகுதியில் ரூ.1.1 பில்லியன் செலவினை ஏற்படுத்தி, புனரமைப்பினூடாக நீர்ப்பாசன நிலப்பரப்பை மேம்படுத்துவதற்கும் அனைத்து மாவட்டங்களிலும் ஏறத்தாழ 250,000 குடும்பங்களின் நலனுக்காக தாங்கிகளினதும் அணைக்கட்டுக்களினதும் இயலளவினை மேம்படுத்துவதற்குமான முயற்சியில் 'வாரிசௌபாக்கியா தேசிய செயற்றிட்டம்' முன்னேற்றங்கண்டது. இச்செயற்றிட்டத்தின் கீழ், ஆரம்ப திட்டத்தின் பிரகாரம் கருத்திற்கொள்ளப்பட்ட 739 தாங்கிகள்/அணைக்கட்டுக்களுடன் ஒப்பிடுகையில் 2022 இறுதியளவில் 598 தாங்கிகளின் புனரமைப்பு நிறைவுசெய்யப்பட்டது. மேலும், பெரமடுவ நீர்த்தேக்கச் செயற்றிட்டம் மற்றும் பதவிய மற்றும் வஹல்கட திட்டங்களின் புனரமைப்புப் பணிகள் ஆகியன உள்ளடங்கலாக பல நடுத்தரளவிலான நீர்ப்பாசனச் செயற்றிட்டங்களின் பௌதீகப் பணிகளுடன் தொடர்புடைய நடவடிக்கைகள் 2022இல் ஆரம்பிக்கப்பட்டன. அதேவேளை, நாட்டில் 80 நீர்ப்பாசனத் திட்டங்களில் நிலம், நீர் மற்றும் பயிர் உற்பத்தித்திறனை மேம்படுத்தும் பொருட்டு நீர்ப்பாசன முறைமை வினைத்திறன் தன்மைகளை மேம்படுத்தும் நோக்கில் 2017 இல் ஆரம்பிக்கப்பட்ட 'உற்பத்தித்திறன் மேம்பாடு மற்றும் நீர்ப்பாசன முறைமை வினைத்திறன் மேம்பாட்டுச் செயற்றிட்டம்' வரையறுக்கப்பட்ட வரவு செலவுத்திட்ட ஒதுக்கீடுகளுக்கு மத்தியில் ஆண்டு காலப்பகுதியில் மெதுவான வேகத்தில் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டது.

அட்டவணை 3.9
தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் நீர் வழங்கல்

| விடயம் | 2021 | 2022 (அ) | வளர்ச்சி வீதம் (%) 2021 | வளர்ச்சி வீதம் (%) 2022 (அ) |
|---|---|---|---|---|
| மொத்த நீர் வழங்கல் திட்டங்கள் (எண்ணிக்கை) (ஆ) | 337 | 339 | 1.8 | 0.6 |
| காலப்பகுதியில் புதிதாக வழங்கப்பட்ட மொத்த புதிய இணைப்புக்கள் (எண்ணிக்கை) | 192,087 | 153,217 | 56.5 | -20.2 |
| மொத்த இணைப்புக்கள் (எண்ணிக்கை) (ஆ) | 2,752,324 | 2,905,541 | 7.5 | 5.6 |
| மொத்த நீர் உற்பத்தி (மி.க.மீ) (இ) | 815 | 818 | 4.2 | 0.4 |
| வருவாயற்ற நீர் (சதவீதம்) | | | | |
| கொழும்பு நகரம் | 34.8 | 24.1 | -11.4 | -30.6 |
| முழுத்தீவும் | 25.8 | 25.2 | 4.8 | -2.3 |
| பாதுகாப்பான குடிநீரின் கிடைக்குந்தன்மை (சதவீதம்) | 94.3 | 96.0 | 1.2 | 1.8 |
| பாதுகாப்பான குழாய் நீரின் கிடைக்குந்தன்மை (சதவீதம்) (ஈ) | 54.2 | 60.4 | 2.1 | 11.4 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) ஆண்டின் இறுதியில் உள்ளவாறு
(இ) மி.க.மீ = மில்லியன் கன மீற்றர்கள்
(ஈ) ஏனைய அதிகாரசபைகளினால் முகாமைத்துவம் செய்யப்படும் முறைமைகள் உள்ளடங்கலாக

*மூலம்:* தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை

## 3.3. சமூக உட்கட்டமைப்புக் கொள்கைகள், நிறுவனசார் கட்டமைப்பு மற்றும் செயலாற்றம்

### சுகாதாரம்

**நாட்டின் சுகாதார வழங்கல் 2022 ஆண்டு காலப்பகுதியில் சமகால சவால்களுடன் தொடர்ந்தும் போராடியது.** 2022இன் முதலாம் காலாண்டில் பதிவுசெய்யப்பட்ட கொவிட்-19 தொற்றுக்குள்ளாகின்ற நோயாளர்களின் எண்ணிக்கையில் எழுச்சியொன்று காணப்பட்டபோதிலும், இறுதியாக ஆண்டின் இரண்டாம் அரையாண்டில் நோய்ப்பரவலின் தீவிரத்தன்மை குறைவடைந்தது. 2021இன் இறுதியில் ஓமிக்ரோன் திரிபின் பரவலுடன், கொவிட்-19 தொற்றுக்குள்ளாகின்ற நோயாளர்களின் எண்ணிக்கை 2022 ஏப்பிறல் இறுதி வரை வலுவான அதிகரிப்பொன்றினைக் காண்பித்ததுடன் 2022 யூலையளவில் படிப்படியான வீழ்ச்சியொன்றினைத் தொடர்ந்தது. அதன் பின்னர், அதிகளவில் தொற்றுக்குள்ளாகக்கூடிய மற்றும் அதிகளவு நோயெதிர்ப்பைத் தடுக்கும் திரிபாக அறியப்படுகின்ற ஒமிக்ரோன் பீஏ. 5 எனும் துணைத் திரிபின் ஊடுகடத்தல் 2022 இறுதியில் குறைவடைவதற்கு முன்னர் 2022 யூலை மாத நடுப்பகுதியில் தீவிரமடைந்தது காணப்பட்டது. சுகாதார அமைச்சின் பிரகாரம், 2023 மாச்சு நடுப்பகுதியிலுள்ளவாறு, 672,048 கொவிட்-19 தொற்றுக்குள்ளானவர்கள் அறிக்கையிட்ட அதேவேளை, இறப்புக்களின் எண்ணிக்கை 16,831 ஆகக் காணப்பட்டது. இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட தொற்றுக்குள்ளானவர்களினதும் இறப்புக்களினதும் எண்ணிக்கை அயல் நாடுகளுடன் ஒப்பிடுகையில், ஒப்பீட்டளவில் குறைவாகக் காணப்பட்டமையானது வைரஸ் தொற்றுப்பரவலைக் கட்டுப்படுத்துவதில் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு உபாயங்களின் வெற்றிகரமான செயற்படுத்தலைக் குறித்துக்காட்டியது. நாடு முழுவதும் தடுப்புமருந்தின் துரித வழங்கலுடன் இணைந்து நகர்வு மீதான கட்டுப்பாடுகள் மற்றும் சமூக இடைவெளி வழிமுறைகள் என்பன நாட்டில் பன்முக நோய்ப்பரவலைக் கையாள்வதற்குத் துணைபுரிந்தன. 2023 மாச்சு நடுப்பகுதியிலுள்ளவாறு, தேசிய தடுப்பூசியேற்றும் செயற்றிட்டமானது 12 வயதிற்கு மேற்பட்ட குடித்தொகையில் ஒரு தடுப்பூசியையேனும் ஏற்றிக்கொண்ட 97.1 சதவீத மற்றும் இரண்டு தடுப்பூசிகளையும் ஏற்றிக்கொண்ட 83.6 சதவீத குடித்தொகையினரை வெற்றிகரமாக உள்ளடக்கியிருந்தது. 2023 மாச்சு நடுப்பகுதியில் முதலாவது தடுப்பூசியினைப் பெற்றுக்கொண்ட குடித்தொகையில் 55.7 சதவீதமானோர் முதலாம் பூஸ்டர் தடுப்பூசியினைப் பெற்றுள்ளதுடன் முதலாம் பூஸ்டர் தடுப்பூசியினைப் பெற்றுக்கொண்ட 2.5 சதவீத குடித்தொகையினர் இரண்டாம் பூஸ்டர் தடுப்பூசியினைப் பெற்றுக்கொண்டனர். பைசர் இரண்டாம் பூஸ்டர் தடுப்பூசியினைப் பெற்றுக்கொள்ளலானது பொது மக்களுக்கான தடுப்பூசிகளை வழங்குவதற்கு முன்னர், முதிய குடித்தொகையினரையும் நோயெதிர்ப்புக் குறைபாடுள்ள தனிப்பட்டவர்களையும் முன்னுரிமைப்படுத்தி 2022 மேயில் கட்டங்களாக ஆரம்பிக்கப்பட்டது. இருப்பினும், இரண்டாம் பூஸ்டர் தடுப்பூசியினைப் பெற்றுக்கொள்வதில் காணப்பட்ட முன்னேற்றமானது 2022 இறுதியளவில் தொடர்ந்தும் பின்னடைவினை சந்தித்தமையானது, பூஸ்டர் தடுப்பூசிக்கான பொதுமக்களின் மெதுவடைந்த முன்னுரிமைகளைப் பகுதியளவில் பிரதிபலித்தது. அனைத்து ஆர்வலர்களினதும் ஒருங்கிணைந்த முயற்சியினூடாக கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் வெற்றிகரமாக கட்டுப்படுத்தலுக்கு மத்தியில், எதிர்வரும் காலப்பகுதியில் இத்தகைய சுகாதார அவசரநிலைகளின் ஏதேனும் மீளெழுச்சி சுகாதார முறைமையின் மீது அழுத்தங்களைச் செலுத்தும் என்பதுடன் இது கொள்வனவு நடவடிக்கைகளிலுள்ள பிரச்சனைகளின் காரணமாக மருத்துவ நிரம்பல்கள் மற்றும் மருந்துகளில் ஏற்பட்டுள்ள பற்றாக்குறைகளின் காரணமாக ஏற்கனவே ஆபத்தான நிலையில் சிக்குண்டுள்ளது. முன்னோக்கிச் செல்கையில், நாட்டினது சுகாதார முறைமையின் தாக்குப்பிடிக்கக்கூடிய தன்மையினை மேம்படுத்துவதற்கான அவசியத்தை உணர்ந்து, சுகாதார உட்கட்டமைப்பில் அரசாங்கத்தின் முதலீட்டிற்கு மேல் சுகாதாரத் துறையில் தனியார் துறை முதலீடுகளை ஊக்குவிக்கும் அதேவேளையில் சுகாதாரக் கொள்வனவு செய்முறையை நெறிப்படுத்தல் மற்றும் தன்னியக்கமாக்கல் என்பனவூடாக வெளிப்புற அதிர்வுகளுக்கு சுகாதார முறைமையின் தயார்நிலையை வலுப்படுத்துவதற்கான வழிமுறைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

**சுகாதார முறைமையானது 2022 ஆண்டு காலப்பகுதியில் நாடு ஏனைய தொற்று நோய்களின் பரவலுக்குள்ளாகின்ற நிலையால் சுமைகளுக்குள்ளாகியிருந்தது.** டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட 35,924 நோயாளர்களின் எண்ணிக்கையிலிருந்து 76,689இற்குக் கணிசமானளவு தீவிரமடைந்ததுடன் டெங்குடன் தொடர்புடைய

அட்டவணை 3.10
சுகாதாரத்துறைப் பணிகளின் முக்கிய பண்புகள்

| விடயம் | 2021 (அ) | 2022 (ஆ) |
|---|---|---|
| **1. அரசாங்கம் (எண்ணிக்கை)** | | |
| மருத்துவமனைகள் (மேற்கத்தேய மருத்துவத்தைக் கையாள்பவை) | 618 | 617 |
| படுக்கைகள் | 78,228 | 78,228 |
| ஆரம்ப நலக்கவனிப்பு பிரிவுகள் | 542 | 544 |
| மருத்துவர்கள் | 20,209 | 21,045 |
| துணை மருத்துவ தொழில் புரிபவர்கள் | 648 | 642 |
| தாதிமார்கள் | 39,091 | 40,775 |
| உடன் கவனிப்பாளர்கள் | 8,334 | 8,310 |
| **2. ஆயுர்வேதம் (எண்ணிக்கை)** | | |
| மருத்துவமனைகள் | 118 | 119 |
| படுக்கைகள் | 5,444 | 5,345 |
| தகுதிபெற்ற ஆயுர்வேத மருத்துவர்கள் | 1,806 | 2,303 |
| பதிவு செய்யப்பட்ட ஆயுர்வேத மருத்துவர்கள் (இ) | 26,183 | 26,650 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) ஆயுர்வேத ஆணையாளர் திணைக்களத்துடன் பதிவு செய்யப்பட்டது

*மூலங்கள்:* சுகாதார அமைச்சு
ஆயுர்வேத திணைக்களம்

சிறப்புக்குறிப்பு 5

## இலங்கையில் பொருளாதார நெருக்கடியின் காரணமாக ஏற்பட்ட சிறுவர் ஊட்டச்சத்துக் குறைபாட்டிற்கெதிராகப் போராடுதல்

**அறிமுகம்**

2022இன் பொருளாதார நெருக்கடிகளினால் அதிகரித்த பல பொருளாதார மற்றும் சமூகப் பிரச்சனைகளின் காரணமாக வீட்டுத்துறையினரின் அதிகரித்த உணவுப் பாதுகாப்பின்மையின் காரணமாக சிறுவரிடையே உயர்வடைந்து செல்லும் ஊட்டச்சத்துக் குறைபாடு கரிசனைக்குரிய முக்கிய கொள்கையாக மாறியிருக்கின்றது. உலக சுகாதார நிறுவனத்தின்படி, ஊட்டச்சத்துக் குறைபாடென்பது உட்கொள்ளப்படும் ஊட்டச்சத்தின் குறைபாடுகள் அல்லது மிகைகள், அத்தியாவசிய ஊட்டச்சத்துக்களின் சமமற்ற தன்மை, அல்லது தவறான ஊட்டச்சத்து பயன்பாடு என்பனவற்றைக் குறிப்பதுடன் இது குறைந்தளவு ஊட்டசத்து கூடியளவு ஊட்டசத்து என்ற இரட்டைச் சுமைகளை ஏற்படுத்துகிறது. ஊட்டச்சத்துக் குறைபாடு படிப்படியான உடல் மெலிவு (உயரத்திற்கு நிறை குறைவாக இருத்தல்) வளர்ச்சிக் குறைவு (வயதிற்கேற்ற உயரம் இல்லாமை) குறைந்த நிறை (வயதிற்கேற்ற நிறை இல்லாமை) நுண்ணிய ஊட்டச்சத்துக் குறைபாடுகள் போன்ற வடிவங்களில் இடம்பெறுகிறது. அளவுக்கதிகமான ஊட்டச்சத்து என்பது ஆரோக்கிய இடர்நேர்வாகும். இது, மனித உடலில் அசாதாரண அல்லது மிகையான கொழுப்பு ஒன்றுசேர்வதனால் உருவாகுவதுடன் இது அளவுக்கதிகமான நிறைகளைத் தோற்றுவித்து இறுதியில் உடற்பருமன் தொடர்பான கரிசனைகளைத் தோற்றுவிக்கிறது. குடித்தொகையினரிடையே காணப்படும் ஊட்டச்சத்துக் குறைபாடு வளர்ச்சியைப் படிப்படியாகக் குறைத்துவிடும் காரணியொன்றாக நீண்ட காலமாக நோக்கப்படுவதுடன் இது மனித மூலதன உற்பத்தியாக்கத்தின்மீது நேரடியாக செல்வாக்குச் செலுத்துவதுடன் நீண்ட காலத்தில் மனித மூலதனத்தினைப் பெருக்குவதன் மீது தலைமுறைகளிடையே தாக்கத்தினையும் ஏற்படுத்துகிறது. ஐக்கிய நாடுகளின் உணவு வேளாண்மை அமைப்பின் உணவு மற்றும் வேளாண்மை (2013) நிலை தொடர்பான அறிக்கையின்படி, ஊட்டச்சத்துக் குறைபாடு உலகளாவிய சமூக மற்றும் பொருளாதாரத்தின் மீது மதிப்பிடப்பட்ட ஐ.அ.டொலர் 3.5 றில்லியன் கொண்ட சுமையினை ஏற்படுத்துகிறது. இது ஏறத்தாழ ஆளொருவருக்கான ஐ.அ.டொலர் 500 இற்குச் சமமானதாகும். பொருளாதார வளர்ச்சியில் மனித மூலதனத்தின் முக்கியமான வகிபாகத்தினைக் கவனத்தில் கொள்கையில், ஊட்டச்சத்தின் குறைபாட்டுப் பிரச்சனை உலகளாவிய கவனத்தினைக் குறிப்பிடத்தக்களவில் ஈர்த்திருப்பதுடன் பிலெத்தோறா என அழைக்கப்படும் செங்குருதி மிகை நோயிற்கான கொள்கை வழிமுறைகளை நடைமுறைப்படுத்துவது உலகம் முழுவதும் இந்நோயினைக் கட்டுப்படுத்துவதனை இலக்காகக் கொண்டிருந்தது. இலங்கை அதன் முதலாவது தேசிய ஊட்டச்சத்துக் கொள்கையினை 1986இல் நடைமுறைப்படுத்தியதுடன் ஊட்டச்சத்துக் குறைபாட்டினைக் குறைப்பதற்கும் குடித்தொகையின் ஊட்டச்சத்து நிலைமையினை மேம்படுத்துவதற்குமாக பல்வேறுபட்ட ஊட்டச்சத்து திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. மானிட அபிவிருத்திக் குறிகாட்டிகளின் மேம்பட்ட நிலைமைகளுக்கு மத்தியிலும் சிறுவர் ஊட்டச்சத்துக் குறைபாட்டினை ஒழிப்பதில் அடையப்பட்ட முன்னேற்றங்கள் அப்படியே தேக்கநிலையில் இருப்பது ஊட்டச்சத்து தலையீடுகளில் காணப்படும் குறைபாடுகளையும் பொருளாதாரத்தில் விடாப்பிடியாகக் காணப்படும் வருமான ஏற்றத்தாழ்வுகளையும் காட்டுகிறது. இப்பின்னணியில், குடித்தொகையில் உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து முரண்பாடுகள், உலகளாவிய நோய்தொற்றினாலும் அதன் பின்னர் ஏற்பட்ட உணவு விலைகளின் திடீர் உயர்வு, வலு நெருக்கடிகளின் கரணமாக வழங்கல் சங்கிலியில் ஏற்பட்ட இடையூறுகள், உணவுப் பண்டங்களில் காணப்பட்ட பற்றாக்குறை, வாழ்வாதாரங்கள் இழக்கப்பட்டமை மற்றும் செலவிடத்தக்க வருமானத்தில் ஏற்பட்ட வீழ்ச்சி மற்றும் பல காரணங்களின் மூலம் மேலும் பெரிதாகியது.


**நெருக்கடிகளுக்கு முன்னர் சிறுவர் ஊட்டச்சத்துக் குறைபாட்டின் நிலைமை**

சுதந்திரத்திற்குப் பின்னர், உணவுப் பாதுகாப்பு, ஊட்டச்சத்து மற்றும் பாதுகாப்பு வலையமைப்புத் திட்டங்கள் போன்றன தொடர்பில், பல்வேறு திட்டங்களூடாக மக்களின் சமூகப் பொருளாதார நலனோம்புகைகளை உயர்த்துவதற்கும் இலங்கை பல்வேறு முயற்சிகளையும் ஆரம்பித்திருக்கிறது. அவை பாடசாலை உணவு வழங்கல், கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு உணவு/ காசுப்படிகளை வழங்குதல், திரிபோஷா நிகழ்ச்சித்திட்டம், சுகாதார முறையில் பாடசாலை நீர்வழங்கல் மற்றும் சுத்திகரிப்பு நடவடிக்கைகள் அயடின் கலந்த உப்பு நிகழ்ச்சித்திட்டம் மற்றும் இன்னும் பல விடயங்களை உள்ளடக்கியுள்ளது. அநேக தசாப்தங்களாகப் பின்னிப்பிணைந்துள்ள இம்முயற்சிகளினதும் கடப்பாடுகளினதும் தாக்கங்களைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் 1975 இலிருந்து 1995 வரையான காலப்பகுதியில் சிறுவரிடையே ஊட்டச்சத்துக் குறைபாடு வீழ்ச்சியடைந்ததுடன் ஐந்து வயதிற்கும் குறைவான பிள்ளைகளிடையேயான ஊட்டச்சத்துக் குறைபாடு 1975இன் 49.9 சதவீதத்திலிருந்து 1995இல் 26.1 சதவீதத்திற்கு குறைவடைந்த வேளையில், நிறை குறைந்த பிள்ளைகளின் குடித்தொகை 1975இன் 57.3 சதவீதத்திலிருந்து 1995இல் 29.3 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. எனினும், ஊட்டச்சத்துக் குறைபாட்டினை ஒழிப்பதற்கான முன்னேற்றம் கடந்த ஒரு சில தசாப்தங்களுக்கும் மேலாக மிதமடைந்து காணப்படுகிறது. அண்மைய குடித்தொகையியல் மற்றும் சுகாதார அளவீடு - 2016இன்படி ஐந்து வயதிற்கும் குறைவான பிள்ளைகளிடையே பரவியுள்ள உடல்மெலிவு நோய் 15.1 சதவீதத்தில் தொடர்ந்தும் காணப்படுவதன் மூலம் பிள்ளைகளிடையே காணப்படும் உடல்மெலிவு நோய் அபாயகரமான மட்டமொன்றினை அடைகிறது. அத்துடன் ஐந்து வயதிற்குட்பட்ட சிறுவரிடையே காணப்படும் உடல்மெலிவு நோய் 1995/96 இலிருந்து 2016 வரையான காலப்பகுதியில் எடுக்கப்பட்ட அளவீட்டில் குறிப்பிடத்தக்க முன்னேற்றமெதனையும் காட்டவில்லை. உலக வங்கியின் புள்ளிவிபரங்களின்படி, இலங்கையில் ஐந்து வயதிற்குட்பட்ட சிறுவரிடையே காணப்படும் உடல்மெலிவு நோய் தென்னாசிய பிராந்தியத்திலுள்ள நாடுகளிடையே இரண்டாவது மோசமாகப் பாதிக்கப்பட்ட நாடாக இலங்கையை தரப்படுத்தியிருக்கிறது. மேலும் இவ்வயது குழுவினரிடையே நிறை குறைந்த பிள்ளைகள் 2000ஆம் ஆண்டில் 20.0 சதவீதமாகக் காணப்பட்ட வேளையில் வளர்ச்சி குன்றிய பிள்ளைகளிடையேயும் குறிப்பிடத்தக்க முன்னேற்றமெதுவும் பதிவுசெய்யப்படவில்லை.

அதேவேளை, நாட்டில் பிராந்தியங்களிடையேயும் பொருளாதாரத் துறைகளிலும் பரவியுள்ள ஊட்டச்சத்துக் குறைபாட்டில் காணப்படும் விடாப்பிடியான சமமற்ற தன்மை ஊட்டச்சத்து முரண்பாடுகள் நீண்ட காலமாக தீர்க்கப்படாமல்

வரைபடம் சி.கு 5.1

**சிறுவர் ஊட்டச்சத்து குறைவு நிலை (5 வயதிற்கு கீழ்) (1975 - 2016)**




*மூலம்:* தொலைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

இருப்பதனை எடுத்துக்காட்டின. வதிவிடத் துறைகளைப் பொறுத்தவரை பெருந்தோட்டத் துறை மிகவும் பாதிக்கப்பட்ட துறையாக இருப்பதுடன் ஐந்து வயதிற்குட்பட்ட சிறுவரிடையே வளர்ச்சி குன்றிய மற்றும் நிறை குறைந்த பிள்ளைகளின் எண்ணிக்கையின் பரவல் மிக உயர்வாகக் காணப்பட்டது. குடித்தொகையியல் மற்றும் சுகாதார அளவீடு - 2016இன் படி நகரப் பிரதேசங்களிலுள்ள 14.7 சதவீதத்தினருடனும் கிராமப் பிரதேசங்களிலுள்ள 17.0 சதவீதத்தினருடனும் ஒப்பிடுகையில் பெருந்தொட்டத் துறையிலுள்ள பிள்ளைகளில் ஏறத்தாழ 31.7 சதவீதத்தினர் வளர்ச்சி குன்றியவர்களாகக் காணப்பட்டனர். மேலும், பெருந்தோட்டத் துறையிலுள்ள ஐந்து வயதிற்குக் குறைந்த பிள்ளைகளில் 29.7 சதவீதத்தினர் நிறை குறைந்தவர்களாகக் காணப்பட்டனர். மாவட்டங்களிடையே ஐந்து வயதிற்குக் குறைந்த பிள்ளைகளிடையே காணப்படும் நிறை குறைந்த மற்றும் வளர்ச்சி குறைந்த பிள்ளைகளிடையே காணப்படும் நிறை குறைந்த மற்றும் வளர்ச்சி குன்றிய பிள்ளைகளின் உயர்ந்த எண்ணிக்கை நுவரெலியா மாவட்டத்தில் பதிவுசெய்யப்பட்டது. ஊட்டச்சத்தில் பிரதேச அமைப்புக்களிடையே காணப்படும் சமமற்ற தன்மைகளுக்கு பொருளாதார பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் கல்வியைப் பெறக்கூடிய தன்மை, இணைப்புத் தன்மைகள், உட்கட்டமைப்பு அபிவிருத்திகள் என்பன முக்கிய காரணங்களாக அமைந்தன. எடுத்துக்காட்டாக, தாய்மாரின் கல்வி மட்டம், பிள்ளைகளின் ஊட்டச்சத்து மட்டத்தில் செல்வாக்குச் செலுத்தும் முக்கிய காரணியாக அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. உதாரணமாக, பட்டப்படிப்பு அல்லது அதற்குமேற்பட்ட கல்வித் தகைமையைக் கொண்ட தாய்மாரின் பிள்ளைகள் தொடர்பில் பதிவுசெய்யப்பட்ட முறையே 12.1 சதவீதம் மற்றும் 10.0 சதவீதங்களுடன் ஒப்பிடுகையில் முறைசார்ந்த கல்வியைப் பெறாத தாய்மார்களுக்குப் பிறந்த பிள்ளைகளிடையேயான குன்றிய வளர்ச்சி மற்றும் நிறை குறைந்த பரவல் முறையே 37.6 சதவீதமாகவும் 33.9 சதவீதமாகவும் காணப்பட்டன. வீட்டுத்துறை வருமானம் மற்றும் செலவின அளவீடு -2019இனை அடிப்படையாகக் கொண்ட இலங்கை சிறுவர் ஊட்டச்சத்துக் குறைவு வறுமைச் சுட்டெண்கள் 0 - 4 வயதிற்கிடைப்பட்ட பிள்ளைகளில் மூன்றிலொரு பங்கினர் ஊட்டச்சத்து குறைபாட்டினைக் கொண்டவர்களாகவோ நிறை குறைந்தவர்களாகவோ அல்லது வளர்ச்சி குறைந்தவர்களாகவோ இருப்பதனைக் காட்டியது. அதேவேளை, நீடித்துநிலைத்திருத்தல் அறிக்கை 2022 (சஞ்ஜே மற்றும் மற்றையவர்கள், 2022) இலங்கை பட்டினியினை 2030 அளவில் பூஜ்ய மட்டத்திற்கு குறைப்பதனை நோக்கிய முன்னேற்றத்தில் பின்தங்கியிருப்பதனைக் காட்டியிருப்பதுடன் இது எதிர்பார்க்கப்பட்டவாறு நீடித்துநிலைத்திருக்கும் அபிவிருத்தி இலக்கினை அடைய போதுமானதாக இல்லை.

**சிறுவர் ஊட்டச்சத்து நிலை மீது நடைமுறைப் பொருளாதார நெருக்கடியின் தாக்கம்**

ஊட்டச்சத்துக் குறைபாட்டிற்கான[1] ஐக்கிய நாடுகள் சிறுவர் அவசரகால நிதியக் கோட்பாட்டுக் கட்டமைப்பு, பொருளாதாரக் காரணிகளை ஊட்டச்சத்துக் குறைபாட்டிற்கான மிக முக்கியமான அடிப்படைக் காரணிகளிலொன்றாக அடையாளம் கண்டிருப்பதுடன் இது குடித்தொகையின் ஊட்டச்சத்து நிலையின் மீது சாதகமான தாக்கத்தினை ஏற்படுத்தக்கூடும். குழப்பகரமான பொருளாதார நிலைமைகள் குறிப்பாக, வழங்கல் மார்க்கங்களுக்கும் உணவு முறைமைகளுக்கும் அதேபோன்று மக்களின் வருமான மார்க்கங்களுக்கும் இடையூறாக விளங்கி அதன் மூலம் வீட்டுத்துறையினர் ஊட்டச்சத்துமிக்க உணவினை அடைவதற்கும் அதனைப் பெற்றுக்கொள்வதற்குமான இயலளவினைக் குறைவடையச் செய்து, குடித்தொகையினரின் ஊட்டச்சத்து நலனோம்புகைகளை நேரடியாகப் பாதிக்கிறது. பொருளாதார அதிர்வுகள் விளிம்பு நிலையிலுள்ள குடித்தொகையினரை கலோரி அதிகரித்த ஆனால் ஊட்டம் குறைந்த உணவினை நுகர்வதற்கு முன்னுரிமையளிக்கின்றமையினால் அது உணவின் தரத்தின் தேய்விற்கு வழியமைத்து இறுதியாக அதிகரித்த ஊட்டச்சத்துக் குறைவினை ஏற்படுத்துகிறது.

இலங்கை, மோசமான பொருளாதார மந்தம் எவ்வாறு ஏற்படுகின்றது என்பது பற்றியும் அதிகரித்த பேரண்டப் பொருளாதார உறுதிப்பாடற்ற தன்மை முன்னொருபோதுமில்லாத விதத்தில் பாரிய சமூக மற்றும் பொருளாதார விளைவுகளை உருவாக்குவது பற்றியும் இது குடித்தொகையின் ஊட்டச்சத்து நலனோம்புகைகளில், குறிப்பாக சிறுவர் ஊட்டச்சத்துக் குறைபாடுகளில் மோசமான தன்மைகளை விளைவித்து தலைமுறை தலைமுறையாக சுமையினைக் கொண்டிருக்கும் என்பது தொடர்பில் ஆழமான கரிசனைகளை தோற்றுவிக்கின்றது என்பதற்கு உதாரணங்களை எடுத்துக்காட்டி விளக்குகிறது. நெருக்கடிகள் தூண்டிய நிரம்பல் சங்கிலி இடையூறுகள், கடுமையான வழங்கல் பற்றாக்குறைபாடுகளினால் உள்நாட்டு உணவு உற்பத்திகளில் ஏற்பட்ட வீழ்ச்சியுடன் இணைந்து காணப்படும் உயர்ந்த செலவு என்பனவற்றின் காரணமாக இலங்கையில் 2021இன் பிற்பகுதியிலிருந்து உணவு விலைகள் அதிகரிக்கத் தொடங்கி, 2020 இறுதியின் 22.1 சதவீதம் மற்றும் 2021இல் 9.2 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2022 செத்தெம்பரில் வரலாற்றிலேயே மிக உயர்ந்த பணவீக்கமான 94.9 சதவீதத்தினைப் பதிவுசெய்ததுடன் 2022இன் பிற்பகுதியிலிருந்து உணவுப் பணவீக்கத்தில் ஓரளவு வீழ்ச்சி அவதானிக்கப்பட்ட போதும் உணவு விலைகள் 2022இல் உயர்வாகவே காணப்பட்டன. பணவீக்கத்தில் ஏற்பட்ட உயர்வு, வீட்டுத்துறையினரின் உண்மை வருமானத்தில் கணிசமான தேய்வினை ஏற்படுத்திய வேளையில் குறிப்பாக, வாழ்வாதாரங்கள் இழக்கப்பட்டமையின் மூலம் நெருக்கடிகள் வீட்டுத்துறையினரின் சுமையினை பெரிதாக்கியமையினால்

1 ஊட்டச்சத்துக் குறைபாட்டிற்கான உடனடிக் காரணங்களாக தரம் குறைந்த உணவு எடுப்பனவுகள் (தரம்/ அளவு) உடற்பயிற்சிகள் இல்லாமை மற்றும் நோய் நிலைமைகள் என்பன காணப்பட்ட வேளையில், வீட்டுத்துறையினரின் பாதுகாப்பற்ற உணவு, சிறுவர், பெண்கள் பற்றி போதியளவு கவனம் செலுத்தப்படாமை, குறைந்த சுகாதாரப் பணி வழங்கல் மற்றும் ஒரே இடத்தில் இருக்கும் வாழ்க்கை முறை மற்றும் நடத்தைகள் என்பன ஊட்டச்சத்துக் குறைபாட்டிற்கான முக்கிய காரணங்களாகக் கருதப்படுகின்றன. ஊட்டச்சத்துக் குறைபாட்டின் அடிப்படைக் காரணங்களாக சமூகக் கலாச்சரம், பொருளாதாரம் மற்றும் அரசியல் காரணிகளும் அதேபோன்று காலநிலை வேறுபாடுகளும் தீவிரமான வானிலை நிலைமைகளும் காணப்படுகின்றன. இக்காரணிகள் உணவின் கிடைப்பனவு மற்றும் தாங்கக்கூடிய தன்மை இரண்டையும் பாதிக்கக்கூடும்.

முறைசாரா துறையினரின் வாழ்வாதாரங்கள் இழக்கப்பட்டன. முறைசாராத் துறை தொழில்நிலையில் 58.4 சதவீதத்திற்கும் வறுமை மட்டத்தில் 14.3 சதவீதத்திற்கும் வகைகூறுவதனால், வாழ்வாதாரம் பொருளாதார உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து நிலை என்பன குழப்பநிலையின் மீது சாத்தியமான விளைவுகளைக் கணிசமான அளவில் ஏற்படுத்தும். இது வீட்டுத்துறையினர் நெருக்கடிக் காலத்தல் மாற்று ஏற்பாடுகளைப் பின்பற்றுவதன் மூலம் நிலைமைகளைச் சமாளிப்பதற்கு நிர்ப்பந்திக்கும்.

அனைத்து ஒன்பது மாகாணங்களிலுமுள்ள 2,137 அளவீடுகளை உள்ளடக்கிய உலக உணவு நிகழ்ச்சித்திட்டம் கணனியினால் உதவப்பட்ட தொலைபேசியூடான நேர்விளம்பலூடாக தொடர்பு கொண்டு சேகரிக்கப்பட்ட தரவுச் சேகரிப்பு அணுகுமுறையின்படி வீட்டுத்துறை நாட்டின் உணவுப் பாதுகாப்பு நிலையினால் 2022இல் இறுதியில் பாதிக்கப்படக்கூடியதாக இருந்ததுடன் குடித்தொகையில் 68 சதவீதத்தினர் உணவின் அளவினை மட்டுப்படுத்துதல், உணவின் எண்ணிக்கையினைக் குறைத்தல், முன்னுரிமை குறைந்த உணவுகளில் தங்கியிருத்தல் என்பனவூடாக தமது உணவினைச் சமாளிக்கும் உபாயங்களைப் பின்பற்றினர். அதேவேளை, ஏறத்தாழ 40 சதவீதமான குடித்தொகையினர் கல்வி மற்றும் சுகாதாரம் மீதான செலவிடலைக் குறைத்துக் கொண்டமையின் மூலம் அவர்களது அடிப்படை வாழ்வாதாரத்தினைக் கொண்டு நடத்த வேண்டியவர்களாக இருந்தமையினால் இது இறுதியில் நீண்ட கால ஊட்டச்சத்து நிலைமைகளையும் நலனோம்புகைகளையும் பாதிக்கும். ஐந்து வயதிற்குக் குறைந்த பிள்ளைகளின் ஊட்டச்சத்து நிலை தொடர்பில், 2022 ஒத்தோபரில் ‘ஊட்டச்சத்து’ மாதம் என்ற கோட்பாட்டின் கீழ் நடத்தப்பட்ட சுகாதார அமைச்சின் குடும்ப நலப் பணியகத்தின் அண்மை அலுவல்சார் மதிப்பீடுகளில் பிள்ளைகளின் ஊட்டச்சத்து நிலை 2022இல் மோசமடைந்த தன்மையினை எடுத்துக்காட்டியதுடன் பொருளாதார நெருக்கடிக் காலத்தில் வீட்டுத்துறை நலனோம்புகைகள் வீழ்ச்சியடைந்தமையினையும் பிரதிபலித்தது. ஐந்து வயதிற்குக் குறைவான வகையிலுள்ள பிள்ளைகளுக்கான குறிப்பாக, வளர்ச்சி குன்றிய உடல் மெலிந்த மற்றும் நிறை குறைந்த பிள்ளைகள் தொடர்பாக அனைத்து முக்கிய ஊட்டச்சத்து குறிகாட்டிகளும் மோசமான தன்மையினையே எடுத்துக்காட்டின. தேசிய மட்டத்தில் ஐந்து வயதிற்குக் குறைந்த நிறை குறைந்த பிள்ளைகளின் சதவீதம் 2021இன் 12.2 சதவீதத்திலிருந்து 2022இல் 15.3 சதவீதத்திற்கு அதிகரித்தது. ஐந்து வயதிற்குக் குறைந்த பிள்ளைகளிடையே வளர்ச்சி குன்றிய மற்றும் உடல் மெலிந்தவர்களின் சதவீதம் 2021இல் பதிவுசெய்யப்பட்ட முறையே 7.4 சதவீதம் மற்றும் 8.2 சதவீதத்திலிருந்து 2022இல் முறையே 9.2 சதவீதத்திற்கும் 10.1 சதவீதத்திற்கும் அதிகரித்தன. எனினும், பிள்ளைகளிடையேயான நிறை கூடிய தன்மை 2022இல் சில முன்னேற்றமொன்றினைப் பதிவுசெய்தது.

அட்டவணை சி.கு 5.1


**2022இல் பிள்ளைகளின் ஊட்டச்சத்துக் குறைவு நிலை**

| குறிகாட்டி | 5 வயதிற்குக் குறைந்த பிள்ளைகளின் சதவீதம் | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | 2016 | 2017 | 2018 | 2019 | 2020 | 2021 | 2022 |
| நிறை குறைவு | 15.6 | 14.5 | 14.3 | 14.0 | 13.1 | 12.2 | 15.3 |
| குன்றிய வளர்ச்சி | 9.2 | 9 | 8.9 | 8.4 | 8.2 | 7.4 | 9.2 |
| உடல்மெலிவு | 11.3 | 11.1 | 10.2 | 9.9 | 8.6 | 8.2 | 10.1 |
| அதிக நிறை | 0.5 | 0.5 | 0.6 | 0.6 | 0.8 | 0.8 | 0.6 |

*மூலம்:* குடும்ப நலப் பணியகம், சுகாதார அமைச்சு

வரைபடம் சி.கு 5.2

**மாவட்ட மட்டத்திலான ஊட்டச்சத்து குறைவான பிள்ளைகளின் மோசமான நிலை**




*மூலம்:* குடும்ப நலப் பணியகம், சுகாதார அமைச்சு

அளவீட்டின்படி பிள்ளைகளின் ஊட்டச்சத்துக் குறைவு அனைத்து மாவட்டங்களிலும் மோசமடைந்திருப்பது, தற்போது நாடு முழுவதிலும் பிள்ளைகளிடையே காணப்படும் ஊட்டச்சத்து முரண்பாடுகளை பெரிதாக்கும். அறிக்கையிடப்பட்ட 22.8 சதவீதத்துடன் நுவரெலியா மாவட்டம் வளர்ச்சி குன்றிய பிள்ளைகளின் உயர்ந்த சதவீதத்தினைக் கொண்டிருந்தது. அதேவேளை, கொழும்பு மாவட்டத்தில் வளர்ச்சி குன்றிய பிள்ளைகள் 5.1 சதவீதமாகக் காணப்பட்டனர். மேலும், ஐந்து வயதிற்குட்பட்ட வளர்ச்சி குன்றிய பிள்ளைகளைப் பொறுத்தவரை நுவரெலிய மாவட்டம் 23.9 சதவீதமான மிக உயர்ந்த வீதத்தினைப் பதிவுசெய்த வேளையில் கொழும்பு மாவட்டம் வளர்ச்சிய குன்றிய பிள்ளைகள் தொடர்பில் 9.8 சதவீதமான குறைந்த சதவீதத்தினைக் கொண்டிருந்தது. இது, அரச முயற்சிகளின் தலையீடுகளுக்கு மத்தியிலும் ஊட்டச்சத்து முரண்பாடுகள் நாட்டில் பாதிக்கப்படக்கூடிய தன்மையில் இருப்பதனை எடுத்துக்காட்டியதுடன் இவ்வேற்றத்தாழ்வுகள் சரியான விதத்தில் கட்டுப்படுத்தப்பட்டாலொழிய பொருளாதார நெருக்கடிக் காலத்தில் மேலும் மோசமடையும் போல் தெரிகிறது.

### அரசாங்கத்தின் பதிலிறுப்புக்கள்

குடித்தொகையின் ஊட்டச்சத்து நிலையின் மீது பொருளாதார மற்றும் உணவு நெருக்கடிகள் தோற்றுவிக்கும் சேதம் விளைக்கும் தாக்கங்களை ஒழிப்பதற்கும் ஊட்டச்சத்து குறைவு நிலைமைகள் மேலும் மோசமடைவதனைக் குறைப்பதற்குமாக 2022 - 2024 காலப்பகுதிக்காக அவசரகால ஊட்டச்சத்து திட்டமொன்று சுகாதார அமைச்சினால் உருவாக்கப்பட்டது. திட்டமானது உணவு கிடைப்பனவு மற்றும் தாங்கிக் கொள்ளக்கூடிய சமமற்ற தன்மை, பாதிக்கப்படக்கூடிய குழுமத்தினருக்கான சுகாதார முறைமைப்

பணிகளில் காணப்படும் இடைவெளி மற்றும் ஊட்டச்சத்துப் பிரச்சனைகளைத் தடுப்பதில் தொடர்பூட்டல் மற்றும் வலுவூட்டல் இடைவெளிகள் போன்ற நெருக்கடியான பிரச்சனைகளைக் கட்டுப்படுத்துவதனை நோக்கமாகக் கொண்டிருந்தது. இதன்படி, திட்டத்தின் அடையாளம் காணப்பட்ட உபாயங்கள் மற்றும் முக்கிய நடவடிக்கைகளை திட்டமிடுவதிலும் நடைமுறைப்படுத்துவதிலும் ஆர்வலர்கள் ஈடுபட்டிருந்த வேளையில் நடைமுறைப்படுத்தலின் ஒவ்வொரு மட்டத்திலும் கண்காணிப்புச் செய்முறைகளும் மேற்கொள்ளப்பட்டன. அதேவேளை, குறைந்த வருமானங்களைக் கொண்ட கர்ப்பிணித் தாய்மார். பாலூட்டும் தாய்மார், பெண்களைத் தலைவர்களாகக் கொண்ட குடும்பங்கள், ஐந்து வயதிற்குட்பட்ட சிறுவர்கள் பன்னாட்டு முகவர்களின் உதவியுடன் வாழும் ஊட்டச்சத்துக் குறைந்த மக்கள் ஆகியோரை உள்ளடக்கிய பாதிக்கப்படும் குடித்தொகையினரை இலக்காகக் கொண்டு அரசாங்கத்தினால் பல நிதியியல் உதவி நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. இந் நிகழ்ச்சித்திட்டங்கள் வீட்டுத்துறையினருக்கான உணவுப் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதனை நோக்கமாகக் கொண்டிருந்த வேளையில் பாடசாலை உணவு நிகழ்ச்சித்திட்டத்தினூடாக பாடசாலைப் பிள்ளைகளுக்கு சமச்சீரான உணவுகளைத் தொடர்ந்தும் வழங்குவதற்கு வழிமுறைகள் எடுக்கப்பட்டன. அதேவேளை, குடும்ப நலப் பணியகத்தினூடாக வழங்கப்பட்ட ஏனைய சுகாதாரப் பணிகளுடன் சேர்த்து கடுமையான ஊட்டச்சத்துக் குறைவான பிள்ளைகளுக்காக துணை மருத்துவம் சார்ந்த உணவுகளும் வழங்கப்பட்டன.

**சிறுவர் ஊட்டச்சத்துக் குறைபாடுகளை ஒழிப்பதற்கான கொள்கை நிகழ்ச்சிநிரல்**

சிறுவர் ஊட்டச்சத்து இன்மையினை ஒழிப்பதற்கு தொடர்ச்சியாக வந்த அரசாங்கங்களினால் எடுக்கப்பட்ட கொள்கை முன்முயற்சிகள் சடுதியாக ஏற்படும் சமூகப் பொருளாதார அதிர்வுகளுக்குத் தாக்குப்பிடிப்பதற்கு போதுமானவையாக இருக்கவில்லை. இது. பல்வேறு துறை சார்ந்த கட்டமைப்புடன் உணவுப் பாதுகாப்பைப் பேணுவதனையும் ஊட்டசத்துக் குறைவினை ஒழிப்பதனையும் இலக்காகக் கொண்ட உபாயங்களை மீள் உருவாக்குவதற்கான தேவையை வலியுறுத்துகிறது. இது தொடர்பில் குறுங்கால நடுத்தர கால மற்றும் நீண்ட கால தீர்வுகளுக்கான கொள்கைகள் உருவாக்கப்பட வேண்டிய அதேவேளையில் ஏற்கனவேயுள்ள ஊட்டச்சத்து நிகழ்ச்சித்திட்டங்களில் காணப்படும் இடைவெளிகள் கட்டுப்படுத்தப்படல் வேண்டும். குறுங்கால தீர்வுகள் உணவு விலைகளில் ஏற்படும் உயர்வு காரணமாக ஏற்படும் எதிர்மறையான வருமானத் தாக்கங்களை பாதுகாப்பு வலையமைப்பினை வழங்குதல், ஏற்கனவேயுள்ள சமூகப் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டங்களை அதிகரித்தல் போன்றவற்றின் மூலம் இழப்பீடு செய்வதனை இலக்காகக் கொண்டிருத்தல் வேண்டும். அதேவேளை, விரும்பத்தக்க பெறுபேறுகளை எய்துவதற்கு பொருத்தமான வெளியேறல் பொறிமுறையுடன் இந்நலன்புரி நன்மைகள் இலக்கிடப்படல் வேண்டும். அரசாங்கத்தினால் வழிநடத்தப்படும் ஊட்டச்சத்து தலையீடுகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டளவிலான இறை இடைவெளியே இருப்பதனைக் கவனத்தில் கொள்கையில் அண்மைக் காலத்தில் பாதிக்கப்படக்கூடிய துறைகளிடையேயான பட்டினியைக் குறைப்பதற்கு கொடை வழங்கும் முகவர்களிடமிருந்தும் அயல் நாடுகளிலிருந்தும் உணவு உதவிக்கான வழிகளைத் தீவிரமாகக் கண்டறிவது மிக முக்கியமானதாகவுள்ள அதேவேளையில் அத்தகைய நிகழ்ச்சித்திட்டங்கள் வெளிப்படையாகக் கண்காணிக்கப்படுவதும் மதிப்பிடப்படுவதும் உறுதிப்படுத்தப்படல் வேண்டும். ‘சனசமூக சமயலறை’ போன்ற ஊக்கமளிக்கும் சனசமூகத்தினை அடிப்படையாகக் கொண்ட நிகழ்ச்சித்திட்டங்கள் ஊட்டச்சத்துக் குறைப்பிற்கான பரந்தளவு காரணங்களைக் கட்டுப்படுத்துவதற்கு, அத்தகைய நடவடிக்கைகள் பொதுவான தளமொன்றினை வழங்குவதனால் இவை நன்மையளிப்பனவாக இருக்கக்கூடும். கர்ப்பிணிகள் மற்றும் சிறுவர் ஊட்டச்சத்தினைப் மேம்படுத்துவதற்கு ஐக்கிய நாடுகள் சிறுவர் அவசரகால நிதியியல் முறைமை அணுகுமுறையில் எடுத்துக்காட்டப்பட்டவாறு சிறுவர் ஊட்டச்சத்துக் குறைபாட்டினை ஒழிப்பதற்கான நீண்ட கால உபாயங்கள் ஐந்து முறைமைகளை அடிப்படையாகக் கொண்டிருத்தல் வேண்டும். உணவு முறைமை, சுகாதார முறைமை, நீர் மற்றும் சுத்திகரிப்பு முறைமைகள், கல்வி முறைமை மற்றும் சமூக பாதுகாப்பு முறைமைகளே அவை. இதன்படி, உணவு முறைமை சீர்திருத்தங்கள் மற்றும் முதலீடுகளை இது நீடித்துநிலைத்திருக்கக்கூடிய முறையொன்றில் ஊட்டச்சத்துமிக்க பாதுகாப்பு உணவினை கிடைக்கத்தக்க விதத்திலும் தாங்கக்கூடிய விலையொன்றில் வழங்குவது முக்கியமாகவுள்ள வேளையில் குடும்பங்களுக்கு சிறந்த உணவுத் தெரிவுகளையும் இயலுமைப்படுத்தும். இது தொடர்பில் மக்களுக்கு ஆரோக்கியமான உணவினை வழங்குவதற்கு நாட்டின் உணவு முறையில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் இடம்பெறுவது அவசியமாகும். இவை கூடியளவு புத்தாக்கம் மற்றும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திகளுடன் சேர்த்து வேளாண்மைத் துறையில் உற்பத்தித்திறனை மேம்படுத்தல், அறுவடைக்குப் பின்னரான இழப்புக்களைக் குறைத்தல், வேளாண்மைத் துறையில் கூடியளவு பெறுமதிகூட்டல்கள், உணவு முறைமைகளுக்கு இறக்குமதிகளில் தங்கியிருப்பதனைக் குறைத்தல், காலநிலை மாற்றங்களை எதிர்த்துநிற்கக்கூடிய உணவுப் பயிர்களை அறிமுகப்படுத்தல் குறிப்பாக, ஒருங்கிணைக்கப்பட்ட பணிகள் உற்பத்திகளை பிரபல்யப்படுத்துவதன் மூலம் பரந்தளவு ஊட்டச்சத்துக்களைக் கொண்ட பெறுமதிமிக்க உணவுகளை ஊக்குவித்தல் வேளாண்மைத் துறை உதவுதொகைகளை மீள சமநிலைப்படுத்தல் மற்றும் வரிக் கொள்கைகள் வேளாண் பொருளாதார நடைமுறைகளை மேம்படுத்தல் அதேபோன்று அவசரகால உணவு வகைகளை எதிர்கொள்வதற்குப் போதுமான தாங்கிருப்புக்களைப் பேணுதல் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன.

பொதுமக்களிடையே சாதகமான பல ஊட்டச்சத்து நடைமுறைகளைப் பேணி வளர்க்கும் விதத்திலான பங்களிப்புக்களுக்குப் புறம்பாக, சுகாதார முறைமையானது ஊட்டச்சத்துக் குறைபாட்டினைத் தவிர்ப்பதற்கும் அதற்கான சிகிச்சைகளுக்குமான தளங்களை வழங்கும் விதத்தில் அதன் வகிபாகத்தினை ஆற்றுவதற்கு மேம்படுத்தப்படல் வேண்டும். இது தொடர்பில், நலம் மற்றும் ஊட்டச்சத்துப் பணிகளை அணுகுவதனை விரிவாக்கும் நோக்குடன் அடிப்படைச் சுகாதாரம் ஊட்டச்சத்துப் பணிகளின் புதிய முதலீடுகளை ஊக்குவிப்பது அவசியமானதாகவுள்ள அதேவேளையில் மிகப் பின்தங்கிய சமூகத்தினருக்காக அடிப்படை ஊட்டச்சத்துப் பொதியினை அறிமுகப்படுத்துவதும் அவசியமாகும். மேலும், கல்வியும் ஊட்டச்சத்துக் குறைபாடும் வலுவான தலைகீழான தொடர்புகளைக் கொண்டிருப்பதனால் குறிப்பாக, பாதிக்கப்படக்கூடிய குடித்தொகையினரை இலக்காகக் கொண்டு கல்வியில் முதலீடு செய்வது இன்றியமையாயதாகக் காணப்படுகிறது. பிள்ளைகளின் ஊட்டச்சத்து மட்டங்களைத்

3

தீர்மானிப்பதில் பெண்களின் கல்விக்கான முதலீடு இன்றியமையாத வகிபாகத்தினைக் கொண்டிருக்கின்றவிடத்து கல்வியூடாக உருவாக்கப்படுகின்ற பெண்களுக்கான வருமான வாய்ப்புக்கள் வீட்டுத்துறையினரின் ஊட்டச்சத்துப் பாதிக்கப்படும் தன்மைக்கு உதவும்.

நெருக்கடிகளின் காரணமாக, சிறுவர் ஊட்டச்சத்துக் குறைவு தொடர்பாக மீண்டெழுந்துள்ள அச்சுறுத்தல்களின் விளைவாக ஏற்படக்கூடிய பாரிய செயல் கொண்ட சமூகப் பொருளாதார விளைவுகளைப் பரிசீலனையில் கொள்கையில், இலங்கையில் சிறுவர்களிடையேயான ஊட்டச்சத்துக் குறைபாட்டினை அகற்றுவதற்கு குறுங்காலத்திலிருந்து நீண்ட காலம் வரையிலான பரந்த உபாயங்களை மீள் உருவாக்குவதன் மீது கொள்கை வகுப்பாளர்கள், இது தொடர்பில் குறிப்பாக, அரசாங்கம், சுகாதார முறைமைகள், கல்வி முறைமைகள் உணவு முறைமையிலுள்ள பங்கேற்பாளர்கள் நாட்டின் அனைத்துப் பிரசைகளிடமிருந்துமான ஆதரவு என்பன கொள்கைகளை நடவடிக்கைகளாக மாற்றுவதற்குத் தொடர்ந்தும் முக்கியமானவைகளாக இருக்கும். இதன் மூலம் சிறுவர்களின் ஊட்டச்சத்து நிலைமைகள் உயர்த்தப்படுவதற்கு உதவியளிக்கப்படுகிறது. இவ்வொன்று திரண்ட முயற்சிகள் ஊட்டச்சத்து உபாயங்களை வடிவமைத்தல் தற்போதுள்ள ஊட்டச்சத்து நிகழ்ச்சித்திட்டங்களின் இயலாற்றலை வலுப்படுத்தல் மற்றும் அத்தகைய முன்முயற்சிகளுக்கான நிதிகளைத் திரட்டுதல் என்பன தொடர்பில் ஆர்வலர்களுக்கிடையேயான இணைப்புக்களை வலுப்படுத்தும். அதேவேளை, ஊட்டச்சத்துக்களுக்கான சிறுவர்களின் உரிமையினை பாதுகாப்பதற்கு தரவு மைய சான்றுகளை அடிப்படையாகக் கொண்ட தீர்மானங்கள் செய்முறைப்படுத்தப்படல் வேண்டும்.

**உசாத்துணைகள்**



1. Department of Census and Statistics (2016) Demographic and Health Survey Report [Online]. Available at: http://www.statistics.gov.lk/(Accessed: 10 Feb 2023)
2. Family Health Bureau, Ministry of Health (2022) Nutritional Month Report [Online]. Available at: https://www.fhb.health.gov.lk/ (Accessed: 08 Feb 2023)
3. Food and Agriculture Organization of the United Nations (2013) The State of Food and Agriculture [Online]. Available at: https://www.fao.org/ (Accessed: 10 Feb 2023)
4. Jayawardena, P.(2020) A Proactive Path to Combat Malnutrition in Sri Lanka[Online].Available at: https://www.ips.lk/ (Accessed: 15 Feb 2023)
5. Sachs, J. Lafortune, G. Kroll, C. Fuller, G. and Woelm, F. (2022) Sustainable Development Report 2022. From Crisis to Sustainable Development: the SDGs as Roadmap to 2030 and beyond [Online]. Available at: https://dashboards.sdgindex.org (Accessed: 10 Feb 2023)
6. United Nations Children's Fund (2020) Nutrition for Every Child. UNICEF Nutrition Strategy 2020-2030 [Online]. Available at: https://www.unicef. org/ (Accessed: 25 Feb 2023)
7. Weerahewa, J. (2018) Food Policies and Nutrition Transition in Sri Lanka: Historical Trends, Political regimes, and options for Interventions[Online]. Available at https://www.researchgate.net/ (Accessed: 19 Feb 2023)
8. World Food Programme (2022) Sri Lanka Food Security Monitoring-Remote Household Food Security Survey [Online]. Available at: https://reliefweb.int/ (Accessed: 01 Mar 2023)
9. World Health Organization (2016).Strategic Action Plan to reduce the double burden of malnutrition in the South-East Asia Region 2016–2025 [Online]. Available at: https://www.who.int/ (Accessed: 22 Feb 2023)


3

இறப்புகள் 2021இல் 28 இறப்புகளிலிருந்து 72இற்கு அதிகரித்தன. உயர்ந்தளவிலான குடித்தொகை அடர்த்தி காரணமாக டெங்கு பரவுகின்ற இடர்நேர்வு கணிசமானளவில் காணப்பட்ட கொழும்பு மற்றும் கம்பஹா ஆகிய மாவட்டங்களில் உயர்ந்தளவிலான நோயாளர்களின் எண்ணிக்கை அறிக்கையிடப்பட்டது. 2022இல் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பிற்கு பூச்சிக்கொல்லிகளிலும் எரிபொருளிலும் காணப்பட்ட பற்றாக்குறை காரணமாக டெங்கு தடுப்பு வழிமுறைகளை மேற்கொள்வதில் ஏற்பட்ட இடைவெளிகள் பாரியளவில் பங்களித்திருந்தன. இத்தகைய பற்றாக்குறைகளின் நீடிப்பானது 2023இன் முற்பகுதியில் டெங்குத் தொற்றின் மேல்நோக்கிய போக்கில் தொடர்ச்சியொன்றினை ஏற்படுத்தலாம். உலக சுகாதார அமைப்பினால் பொது சுகாதாரப் பிரச்சனையொன்றாகக் காணப்பட்ட யானைக்கால் நோயினை இலங்கை இல்லாதொழித்துள்ளதாக 2016இல் உறுதிப்படுத்தப்பட்ட போதிலும், 2022இல் ஏறத்தாழ 73 யானைக்கால் தொற்றுநொயாளர்கள் அறிக்கையிடப்பட்டுள்ளனர். நாட்டின் யானைக்கால் நோய்க் கட்டுப்பாட்டுச் செயற்றிட்டமானது பரீட்சிப்புக்குப் பின்னரான கண்காணிப்புக் கட்டத்திலுள்ளதுடன் இது 2030 ஆண்டளவில் நோய்ப் பரவலை முற்றிலும் தடுப்பதற்கான இலக்கினை நிர்ணயித்துள்ளது. 2021இல் பதிவுசெய்யப்பட்ட 6,946 மஞ்சள் காமாலை தொற்றுநோயாளர்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில் 2022இல் தொற்றுநோயாளர்களின் எண்ணிக்கை 6,970ஆக அறிக்கையிடப்பட்ட வேளையில், இரத்தினபுரி, கேகாலை, காலி மற்றும் களுத்துறை ஆகிய மாவட்டங்களிலிருந்து உயர்ந்தளவிலான தொற்றுநோயாளர்களின் எண்ணிக்கை அறிக்கையிடப்பட்டது. உலக சுகாதார அமைப்பினால் 2016இல் இலங்கை மலேரியா பரவாத நாடாக பிரகடனப்படுத்தப்பட்ட போதிலும், கொவிட்-19 நோய்த்தொற்றுடன் தொடர்புடைய கட்டுப்பாடுகளின் தளர்த்தலினைத் தொடர்ந்து அதிகரித்தளவிலான எல்லைகளுக்கிடையிலான ஊடுகடத்தின் விளைவொன்றாக 2021இல் பதிவுசெய்யப்பட்ட 26 தொற்றுநோயாளர்களுடன் ஒப்பிடுகையில் 2022இல் வேறு நாடுகளிலிருந்து வந்த 37 மலேரியா தொற்றுநோயாளர்கள் அறிக்கையிடப்பட்டுள்ளமையானது நாட்டில் மலேரியாவின் நம்பத்தகுந்த மீளெழுச்சி மீதான கரிசனைகளை எழுப்புகின்றது.

**மோசமடைந்த சமூக பொருளாதார பிரச்சனைகளுக்கு மத்தியில் சுகாதாரத் துறையானது தொற்றாத நோய்களால் உருவாக்கப்பட்ட சவால்களால் தொடர்ந்தும் போராடியது.** ஆரோக்கியமற்ற உணவுப்பழக்கம், உடற்பயிற்சியின்மை, புகைப்பிடித்தல், மது மற்றும் போதைப்பொருள் நுகர்வு மற்றும் மனநலப் பாதிப்பு போன்ற வாழ்க்கைமுறை இடர்நேர்வுக் காரணிகள் காரணமாக, கடந்த சில ஆண்டுகளாக நாட்டில் தொற்றாத நோய்களில் வலுவான உயர்வொன்று பதிவுசெய்யப்பட்டுள்ளது. தொற்றாத நோய்களின் தடுப்பு, நோயினைக் கண்டறிதல், கட்டுப்பாடு மற்றும் முகாமைத்துவம் என்பவற்றுடன் தொடர்புடைய பொது விழிப்புணர்வை ஊக்குவிப்பதில் சுகாதார அமைச்சு தனது ஈடுபாட்டினைத் தொடர்ந்தும் முன்னெடுத்தது. இதற்கமைய, இலங்கையில் தொற்றாத நோய்களைத் தடுப்பதற்கும்

வரைபடம் 3.15
வருடாந்த டெங்கு தொற்றாளர்கள் மற்றும் இறப்புக்கள்




*மூலம்:* சுகாதார அமைச்சு

கட்டுப்படுத்துவதற்குமான திருத்தப்பட்ட தேசியக் கொள்கை மற்றும் உபாயக கட்டமைப்பானது பொதுமக்களின் கருத்துக்காக வெளியிடப்பட்ட வேளையில் இலக்கிடப்பட்ட திட்டமிடல் மற்றும் பணி ஒருங்கிணைப்பு என்பவற்றினூடாகத் தீங்கினைத் தடுப்பதற்கான உபாய தலைமைத்துவத்தினை வழங்கும் பொருட்டு 2022இல் விபத்து தவிர்ப்பு மற்றும் முகாமைத்துவம் தொடர்பான பல்துறை உபாய செயற்றிட்டம், இலங்கை 2021-2025 அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது. தொற்றாத நோய்களின் குறிகாட்டியினைக் குறைக்கின்ற நோக்குடன் குறிப்பாக இளைஞர் குடித்தொகையினை இலக்காகக்கொண்டு பல்வேறு பௌதீக நடவடிக்கை ஊக்குவிப்பு செயற்றிட்டங்கள் மற்றும் ஆரோக்கியமான உணவுத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. மேலும், முன்கூட்டிக் கண்டறிதல் மற்றும் தடுத்தல் உள்ளடங்கலாக முதன்மைப் பராமரிப்பு மட்டத்தில் புற்றுநோய்க் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளில் சுகாதார அமைச்சு தொடர்ந்தும் ஈடுபட்டு வந்தது. இதற்கமைய, ஆண்டு காலப்பகுதியில் இரத்தினபுரி போதனா வைத்தியசாலையில் புற்றுநோயை முன்கூட்டிக் கண்டறிதல் நிலையமொன்று தொழிற்பட ஆரம்பித்தது. இருப்பினும், நாட்டில் மருத்துவ மற்றும் மருந்தாக்கல் பொருட்களின் குறைவடைந்த கிடைப்பனவிற்கு மத்தியில், தொற்றாத நோயாளிகளுக்குத் தொடர்ந்து சிகிச்சையளிப்பது சவாலானதொன்றாகுமென்பது நிரூபிக்கப்பட்டுள்ளதுடன் இது சனத்தொகையில் பாதிக்கப்படக்கூடிய பிரிவினர்கள் மீதான விகிதாசாரமற்ற சுமையினை உருவாக்கியது. இப்பின்னணியில், சுகாதார அவசரநிலைகளுக்கான தேவைப்பாடுகளையும் போதியளவிலான வரவு செலவுத்திட்ட ஒதுக்கீட்டின் வழங்கலினையும் முன்னுரிமைப்படுத்தும் வேளையில் உள்நாட்டில் உற்பத்திசெய்யப்படுகின்ற மருந்துகள் மற்றும் ஏனைய மருத்துவ நிரம்பல்களிற்கான முதலீடுகளை ஊக்குவித்தல் மற்றும் பிரசைகளின் நலனோம்புகையினை ஊக்குவிக்கும் பொருட்டு நாட்டில் சுகாதார முறைமையின் செயற்றிறனை மேம்படுத்துதல் என்பவற்றிற்கான கடுமையான தேவையொன்று காணப்படுகின்றது.

**சுகாதார பணிகளின் தரத்தினை மேம்படுத்துவதனை நோக்காகக் கொண்டு பல்வேறு உட்கட்டமைப்பு அபிவிருத்தி மற்றும் இயலாற்றலைக் கட்டியெழுப்புகின்ற முயற்சிகள் 2022இல் முன்னெடுக்கப்பட்டன.** இதற்கமைய, முதன்மை மருத்துவக் கவனிப்பு நிறுவனங்களின் ஊடாக தரமான பணிகளை வழங்கும் பொருட்டு முதன்மை சுகாதார முறைமை வலுப்படுத்தல் செயற்றிட்டத்தின் கீழ் உலக வங்கியினால் ஒதுக்கப்பட்ட நிதியைப் பயன்படுத்தி ஐந்து வைத்தியசாலைகளில் முதன்மை சுகாதார வசதிகள் அபிவிருத்தி செய்யப்பட்டு வலுப்படுத்தப்பட்டன. 2022இல் களுத்துறை மற்றும் அம்பாறை மாவட்ட பொது வைத்தியசாலைகள் உள்ளடங்கலாக தெரிவுசெய்யப்பட்ட வைத்தியசாலைகளில் விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பணிகளை நிறுவும் நடவடிக்கைகள் முன்னேற்றங்கண்டன. மேலும், இரத்தினபுரி, கராப்பிட்டிய மற்றும் மொனராகலை போன்ற அரசாங்க வைத்தியசாலைகளின் விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவுகளை மேம்படுத்துகின்ற நோக்கில் பல்வேறு செயற்றிட்டங்களும் முன்னேற்றங்கண்டன. மேலும், பக்கவாத சிகிச்சைக்கான தேசிய மையமொன்றாக முல்லேரியா ஆதார வைத்தியசாலையில் தேசிய மாதிரி நிலையமொன்றின் நிர்மாணப் பணிகள் 2022 ஆண்டு காலப்பகுதியில் முன்னெடுக்கப்பட்டன. அதேவேளை, சுகாதாரத் துறையில் மானிட மூலதன இயலளவினைக் கட்டியெழுப்புவதனை இலக்காகக் கொண்ட செயற்றிட்டங்கள் தொடரப்பட்டன. சுகாதாரத் துறையில் உயர்ந்தளவிலான ஆற்றல்வாய்ந்த தொழில்சார் நிபுணர்களின் பற்றாக்குறையை கருத்திற்கொண்டு, இடைக்காலக் கொள்கை ஏற்பாடொன்றாக, மருத்துவ ஆலோசகர்கள், அரச வைத்திய அதிகாரிகள், பல் அறுவைச் சிகிச்சை நிபுணர்கள் மற்றும் பதிவுசெய்யப்பட்ட மருத்துவ அதிகாரிகள் ஆகியோருக்கான ஓய்வுபெறும் வயது 2022 திசெம்பர் 12 தொடக்கம் மேலும் ஓராண்டிற்கு நீடிக்கப்பட்டதுடன் இது 2023 திசெம்பர் 31 வரை கொள்கை ஏற்புடையதாகக் காணப்படும். அதற்கு மேலதிகமாக, சுகாதாரத் துறை ஊழியர்கள் உள்ளடங்கலாக அரச ஊழியர்கள் வெளிநாட்டில் தொழில்புரிவதற்காக ஐந்தாண்டு கால ஊதியமற்ற விடுமுறையினை அனுமதிக்க அரசு தீர்மானித்தது. இருப்பினும், பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் சுகாதாரத் துறையிலிருந்து உயர்ந்தளவிலான ஆற்றல்வாய்ந்த தொழிலாளர்கள் இடம்பெயர்தலின் அதிகரித்துவரும் போக்குகள் எதிர்வருகின்ற காலப்பகுதியில் பொது சுகாதார பணிகளைத் தொடர்வதில் கடுமையான தாக்கங்களை ஏற்படுத்தக்கூடுமென்பது உயர்ந்தளவிலான ஆற்றல்வாய்ந்த மருத்துவ தொழில்சார் நிபுணர்களையும் விசேட நிபுணர்களையும் நாட்டினுள் தக்கவைத்துக்கொள்வதற்கான உடனடியான கொள்கைப் பதிலிறுத்தலினைப் பரிந்துரைக்கின்றது.

**இலங்கையில் நோய்த்தடுப்பு மற்றும் நோய் குணப்படுத்தல் பணிகள் ஆகிய இரண்டிலுமான சுகாதார வழங்கலில் தனியார் துறை தொடர்ந்தும் குறிப்பிடத்தக்க வகிபாகமொன்றினைக்**

3

கொண்டிருந்தது. 5,602 மொத்தப் படுக்கை இயலளவுடன் பதிவுசெய்யப்பட்ட தனியார் வைத்தியசாலைகளின் எண்ணிக்கை 2022 இறுதியளவில் 250 ஆக விளங்கிய வேளையில், ஆறு புதிய முழுநேர தனியார் வைத்திய வளாகங்கள்/மருந்தகங்கள்/சிகிச்சை நிலையங்கள் ஆண்டு காலப்பகுதியில் நிறுவப்பட்டன. 2022இல் கொவிட்-19 நோய்ப்பரவலைக் கட்டுப்படுத்துவதற்கான அரசாங்கத்தின் முயற்சிகளை முழுமையடைச் செய்யும் வகையில், சுகாதார அமைச்சின் ஒப்புதலுடன் 25 இடைநிலைக் கவனிப்பு மையங்கள் மற்றும் மூன்று கொவிட்-19 சிகிச்சை நிலையங்கள் என்பன தனியார் வைத்தியசாலைகளினால் தொழிற்படுத்தப்பட்டதுடன் 13 தனியார் ஆய்வுகூடங்களில் பீசீஆர் மற்றும் துரித அன்டிஜன் பரிசோதனைகளை மேற்கொள்வதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தன. மருத்துவ நிரம்பல் பற்றாக்குறைக்கு மத்தியில் பொது வைத்தியசாலைகளினால் வழங்கப்பட்ட கிரமமற்ற சுகாதாரப் பணிகளின் வரம்புகளைக் கருத்திற்கொண்டு, பெரும்பாலான மக்கள் 2022 காலப்பகுதியில் தனியார் வைத்தியசாலைகளினால் வழங்கப்பட்ட பணிகளைத் தேர்ந்தெடுத்தனர். இருப்பினும், மருத்துவ நிரம்பல்கள், மருந்துகள், ஆய்வுகூடப் பரிசோதனைகள் மற்றும் ஆலோசனைக் கட்டணங்கள் என்பவற்றின் உயர்ந்தளவிலான செலவுடன் இம்மருத்துவப் பணிகளின் கட்டணம் விஞ்சியளவிலான தொகைகளுக்கு சடுதியாக உயர்வடைந்துள்ளமையானது, தனியார் சுகாதார வசதிகளுக்கான தற்போதுள்ள ஒழுங்குமுறைப்படுத்தல் பொறிமுறையிலுள்ள பலவீனத்தினைப் பிரதிபலித்தது. இதன் விளைவாக, குறிப்பாக நடுத்தர வருமானம் ஈட்டுகின்ற தனிநபர்கள், தனியார் சுகாதார வசதிகளுக்கான அவர்களின் சாதாரண அணுகலைத் தவிர்க்கும் நிலை காணப்பட்டது. இச் சூழலில், சகலருக்கும் சுகாதாரத்திற்கான சமமான அணுகல் வசதியினை நிச்சயப்படுத்தும் பொருட்டு பின்தங்கிய குழுக்களிற்கான பொதுச் சுகாதாரப் பணிகளின் வழங்கலின் நலன்களைப் பாரியளவிலான சமரச இணக்கமின்றி, பொது சுகாதார வழங்கலினை முழுமையடையச் செய்யும் பொருட்டு தனியார் துறையின் ஒழுங்குவிதிகளை வலுப்படுத்துவதனையும் தனியார் சுகாதார பணி வழங்குநர்களுடன் தொடர்புடைய அங்கீகாரக் கொள்கைகளை நெறிப்படுத்துவதனையும் இலக்காகக் கொண்ட கொள்கைகள் மூலம் தனியார் சுகாதாரத் துறையை விரிவடையச்செய்வதானது தொடர்ந்தும் இன்றியமையாததொன்றாகக் காணப்படுகின்றது.

## கல்வி

**எரிபொருள் நெருக்கடியினால் தூண்டப்பட்ட இடையூறுகள் மற்றும் கல்வி முறைமை மீதான கொவிட்-19 குறுக்கீடுகள் என்பவற்றின் நீங்கலுடன் 2022இன் இரண்டாம் அரையாண்டுப் பகுதியில் கல்வி நடவடிக்கைகள் படிப்படியாக மீளெழுச்சியடைந்தன.** கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் காரணமாக 2020இலிருந்து பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் ஏனைய கல்வி மையங்கள் என்பவற்றின் இடைக்கிடையிலான மூடுதலினைத் தொடர்ந்து, 2022இன் தொடக்கத்தில் நேரடியான கல்வி நடவடிக்கைகள் மீள் ஆரம்பிக்கப்பட்ட போதிலும், உள்நாட்டு எரிபொருள் வழங்கல்களில் காணப்பட்ட கடுமையான பற்றாக்குறையிலிருந்து தோற்றம்பெற்ற போக்குவரத்து இடர்பாடுகள் காரணமாக 2022இன் இரண்டாம் காலாண்டின் முற்பகுதியில் கல்விசார் நடவடிக்கைகள் மீண்டும் தடைப்பட்டன. நாடளாவிய ரீதியில் காணப்பட்ட போக்குவரத்து இடர்பாடுகளுக்கு மத்தியில் 2022 யூன் மாத நடுப்பகுதியில் கல்வி நடவடிக்கைகள் இணையவழித் தளங்களுக்கு மாற்றப்பட்டன. இருப்பினும், ஆண்டு காலப்பகுதியில் நாடு எதிர்கொண்ட கிரமமான மின்வெட்டுகளினால் இவ்விணையவழிக் கல்வி முறைமைகளும் கடுமையாகப் பாதிக்கப்பட்டன. எரிபொருள் நிரம்பலுடன் தொடர்புடைய பிரச்சனைகளுக்கான சில தீர்வுகளுடன், 2022இன் இரண்டாம் அரையாண்டுப் பகுதியில் கல்வி நடவடிக்கைகள் படிப்படியாக மீட்சியடைந்தமையானது 2022 ஓகத்திலிருந்து முழு நேர அடிப்படையிலான நேரடியான கல்விசார் நடவடிக்கைகளைத் தொடங்க அனுமதித்தது. ஆண்டு காலப்பகுதியில் நேரடியான கல்விசார் நடவடிக்கைகள் மீள் ஆரம்பிக்கப்பட்ட போதிலும், 2020 தொடக்கம் கல்விசார் நடவடிக்கைகளில் ஏற்பட்ட இடைக்கிடையிலான இடர்பாடுகளினால் ஏற்பட்ட கற்றல் இழப்புகள் தொடர்ந்தும் நீடித்தன. கல்விசார் உட்கட்டமைப்பு மற்றும் தொழில்நுட்பத்துடன் தொடர்புடைய உட்கட்டமைப்பு வசதிகளுக்கான அணுகல்வழியில் ஏற்கனவே இருக்கின்ற சமமின்மைகளைக் கருத்திற்கொள்கையில், இவ்விடர்பாடுகள் கற்றல் பெறுபேறுகளில் மிகவும் பாதகமான விளைவுகளை உருவாக்கக்கூடும் என்பதுடன் அதன்மூலம் வேறுபட்ட பொருளாதார மற்றும் சமூக பின்புலங்களிலும் புவியியல்சார் அமைவிடங்களிலுமுள்ள பிள்ளைகளுக்கு இடையிலான கல்விசார் பெறுபேறுகளில் சமமின்மைகளை விரிவடையச்செய்யும். 2021-2022 காலப்பகுதியிலிருந்து கல்வி அமைச்சினால் நடாத்தப்பட்ட இலங்கையிலுள்ள 03ஆம் தர மாணவர்களின் கல்வியறிவு மற்றும் எண்ணியலறிவு என்பவற்றில் அடிப்படைத் திறன்களின் அடைவு மட்டங்கள் மீதான மதிப்பீட்டின் பிரகாரம் கல்வியறிவில் ஒவ்வோர் அடிப்படைத் திறனையும் அடையப்பெற்ற மாணவர்களின் சதவீதம் மாதிரியின் ஏறத்தாழ 6 சதவீதமாக மாத்திரம் காணப்பட்ட வேளையில் எண்ணியலறிவில் சகல திறன்களினையும் அடையப்பெற்ற மாணவர்களின் சதவீதமும் 7 சதவீதமாகத் தொடர்ந்தும் குறைவாகவே காணப்பட்டது. மேலும், கொவிட்-19 நோய்த்தொற்று மற்றும் நாட்டில் முன்னெப்பொழுதுமில்லாத பொருளாதார நெருக்கடியின் கசிவுத் தாக்கங்கள் என்பவற்றினைத் தொடர்ந்து நீடித்த பாடசாலை மூடுதல்கள் பாதிக்கப்படக்கூடிய குடியிருப்பாளர்களுக்கு மத்தியிலான பாடசாலை இடைவிலகல்கள் அதிகரிப்பதற்கு வழிவகுத்தன. 2020இற்கான கிடைப்பனவாகவுள்ள அண்மைய தரவுகளிற்கமைய, ஆரம்பப் பிரிவிலான பாடசாலை இடைவிலகல்களின் எண்ணிக்கை 2019இல் பதிவுசெய்யப்பட்ட

அட்டவணை 3.11

**பொதுக் கல்வியின் முக்கிய பண்புகள்**

| விடயம் | 2021 (அ) | 2022 (ஆ) |
|---|---|---|
| 1. பாடசாலைகள் (எண்ணிக்கை) | 11,088 | 11,082 |
| அரச பாடசாலைகள் | 10,146 | 10,134 |
| முதலாந்தர | 3,893 | 3,883 |
| இரண்டாந்தர | 6,253 | 6,251 |
| இதில் தேசிய பாடசாலைகள் | 396 | 396 |
| ஏனைய பாடசாலைகள் | 942 | 948 |
| பிரிவேனா | 819 | 823 |
| தனியார் மற்றும் விசேட பாடசாலைகள் (இ) | 123 | 125 |
| 2. மாணவர்கள் (எண்ணிக்கை) (ஈ) | 4,260,466 | 4,236,207 |
| அரச பாடசாலைகள் | 4,048,937 | 4,024,207 |
| ஏனைய பாடசாலைகள் | 211,529 | 212,000 |
| பிரிவேனா | 70,310 | 70,500 |
| தனியார் மற்றும் விசேட பாடசாலைகள் (இ) | 141,219 | 141,500 |
| சர்வதேச பாடசாலைகள் | வி.கி. | வி.கி. |
| 3. ஆசிரியர்கள் (எண்ணிக்கை) (ஈ) | 256,676 | வி.கி. |
| அரச பாடசாலைகள் | 241,054 | வி.கி. |
| ஏனைய பாடசாலைகள் | 15,622 | வி.கி. |
| பிரிவேனா | 7,347 | வி.கி. |
| தனியார் மற்றும் விசேட பாடசாலைகள் (இ) | 8,275 | வி.கி. |
| சர்வதேச பாடசாலைகள் | வி.கி. | வி.கி. |
| 4. புதிதாக அனுமதிக்கப்பட்டோர் (எண்ணிக்கை) (உ) | 304,105 | 301,519 |
| 5. மாணவர்கள்/ ஆசிரியர்கள் விகிதம் | | |
| அரச பாடசாலைகள் | 17 | வி.கி. |
| ஏனைய பாடசாலைகள் | 14 | வி.கி. |
| சர்வதேச பாடசாலைகள் | வி.கி. | வி.கி. |
| 6. முதலாந்தர தேறிய அனுமதி விகிதம் (தரம் 1 - 5) | வி.கி. | வி.கி. |
| 7. இரண்டாந்தர தேறிய அனுமதி விகிதம் (தரம் 6 - 11) | வி.கி. | வி.கி. |
| 8. வயது குறித்துரைக்கப்பட்ட அனுமதி விகிதம் (தரம் 1 - 9) | வி.கி. | வி.கி. |
| 9. ஆசிரியர் பயிற்சிப் பாடசாலைகள் (எண்ணிக்கை) | 8 | 8 |
| 10. ஆண்டுக்காலப்பகுதியில் பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் (எண்ணிக்கை) | வி.கி. | வி.கி. |
| 11. தேசிய கல்வியியற் கல்லூரிகள் (எண்ணிக்கை) | 19 | 19 |
| பயிற்சி ஆசிரியர்கள் (எண்ணிக்கை) | வி.கி. | வி.கி. |
| ஆண்டுக்காலப்பகுதியில் சித்தியடைந்தோர் எண்ணிக்கை | வி.கி. | வி.கி. |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) அரசினால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் பாடசாலைகள் மற்றும் விசேட தேவைகளுடனான சிறுவர் பாடசாலைகள் (இந்த எண்ணிக்கை கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட சர்வதேச பாடசாலைகள் நீங்கலானது)
(ஈ) சர்வதேச பாடசாலைகளிலிருந்தான தரவுகள் நீங்கலாக
(உ) அரச பாடசாலைகள் மட்டும்

*மூலம்:* கல்வி அமைச்சு

8,834இலிருந்து 9,269இற்கு அதிகரித்துள்ளது. இச் சூழலில், பாதிக்கப்படக்கூடிய குடியிருப்பாளர்கள் பொருளாதார அழுத்தங்களுக்கு மத்தியில் நிலைமையைச் சமாளிப்பதற்கான உத்தியொன்றாகக் கல்விச் செலவுகளைக் குறைப்பதற்கு விரும்புவதனால், 2022இல் பாடசாலை இடைவிலகல்கள் மேலும் அதிகரிக்கக்கூடும். அதேவேளை, எழுது பொருட்கள் மற்றும் ஏனைய பாடசாலைப் பொருட்களின் பற்றாக்குறை மற்றும் 2022 காலப்பகுதியில் காணப்பட்ட குடியிருப்பாளர்களின் நிதியியல் நெருக்கடிகளுக்கு மத்தியில் துரிதமாக அதிகரித்த பணவீக்கத்தினால் இப்பொருட்களின் அதிகரித்துச் செல்கின்ற விலைகள் என்பன காரணமாக குறைந்தளவிலான வருமானம் ஈட்டுகின்ற குடியிருப்பாளர்களிலிருந்தான பிள்ளைகள் மேலும் இடர்பாடுகளை எதிர்கொண்டமையானது கற்றல் பெறுபேறுகளில் விரிவடைந்து செல்கின்ற சமமின்மைகளின் சாத்தியமான இடர்பாடுகளைக் குறித்துக்காட்டியது. மறுபுறம், மாற்று மதிப்பீட்டு முறைகளைப் பின்பற்றுவதற்கும் பாடத்திட்டங்களில் குறிப்பிடத்தக்க சமரச இணக்கங்களை சீராக்குவதற்கும் பதிலாக, தேசிய மட்டத்திலான பரீட்சைகளின் பிற்போடலானது, குறுங்காலத்தில் மாணவர்களின் காலந்தவறாத கல்விசார் முன்னேற்றத்தினைத் தடுப்பதுடன் நீண்ட காலத்திற்கு நாட்டின் உற்பத்தித்திறன் வாய்ந்த மனித மூலதனத் தளத்தின் அபிவிருத்தி தொடர்பிலான கரிசனைகளையும் எடுத்துக்காட்டுகின்றது. கடந்த மூன்று ஆண்டுகளாக மாணவர்கள் அனுபவித்து வருகின்ற இடர்பாடுகளின் தொடர்ச்சியான தன்மையினைக் கருத்திற்கொண்டு, பொதுக் கல்வி முறைமையிலுள்ள சகல மட்டங்களிலுமுள்ள மாணவர்களின் கற்றல் பெறுபேறுகளில் ஏற்படுகின்ற இடையூறுகளின் தாக்கத்தினையும் உயர் கல்வியைத் தொடர்தல் மற்றும் தொழில் வாய்ப்புகளைப் பெற்றுக்கொள்ளல் என்பவற்றுடன் தொடர்புடைய இவ்விடையூறுகளின் வாழ்நாள் முழுவதுமான தாக்கங்களினையும் உரிய முறையில் கருத்திற்கொண்டு எதிர்காலக் கொள்கைகள் சீராக்கப்பட வேண்டும். ஆதலால், இணையவழிக் கற்றல் பெறுபேறுகளின் தரம் மற்றும் உட்கட்டமைப்புத் தளம், புதிய மதிப்பீட்டு முறைகள் மற்றும் அனைத்து கல்விசார் மட்டங்களிலும் தொழிற்படைத் திறன் விருத்திற்கான பாடத்திட்டங்களின் தரமுயர்வு என்பவற்றினை மேம்படுத்தும் வேளையில், நாட்டின் துறைசார் முன்னுரிமைகளுக்கமைவாக அவற்றை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கு ஒருங்கிணைந்ததொரு முயற்சியும் தேவைப்படுகின்றது.

**2022இல் பொதுக் கல்விக்கான சமத்துவமான அணுகல் வசதியினை மேம்படுத்துவதற்கும் இலங்கையில் கல்விப் பணிகளின் தரம், ஆளுகை மற்றும் பணி வழங்கல் என்பவற்றை உயர்வடையச் செய்வதற்கும் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.** ஆண்டு காலப்பகுதியில், கல்வி அமைச்சு கல்வி ஆர்வலர்களுடன் இணைந்து, பாடத்திட்டத்தையும் கற்றல் மறுசீரமைப்புக்களையும் நடைமுறைப்படுத்துதல், எதிர்கால கற்றல் தேவைகளைக் கண்டறிதல், கற்றல்சார் இழப்புகளை மீட்டெடுப்பதற்கான உதவிகளை வழங்குதல் மற்றும் அத்தியாவசிய கற்றல்சார் தேர்ச்சிகளைப் பெறுதல் மற்றும் ஆசிரிய விருத்திச் செய்முறையினை தரநிலைப்படுத்தல் என்பவற்றுடன் அதன்மூலம் எதிர்வருகின்ற காலப்பகுதியில் பொதுக் கல்வியின் தரத்தை உயர்த்துவதனை நோக்காகக் கொண்ட தற்போதைய கல்வி முறைமையினை தொடர்ந்து மீளாய்வு செய்தது. தேசிய கல்வி நிறுவனம் 2024இல் 1, 6 மற்றும் 10ஆம் தர மாணவர்களுக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பாடசாலைகளில் முன்னோடிச் செயற்றிட்டமொன்றாக அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகின்ற புதிய பாடத்திட்ட மறுசீரமைப்புக்களில் தொடர்ந்து பணியாற்றி வருகின்றது. 'புதிய தேசிய பாடசாலை அபிவிருத்திச் செயற்றிட்டம்' மற்றும் 'அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை' செயற்றிட்டம் போன்ற பிற முயற்சிகளும்

அட்டவணை 3.12

### பல்கலைக்கழகக் கல்வியின் முக்கிய பண்புகள் (அ)

| | விடயம் | 2021 (ஆ) | 2022 (இ) |
|---|---|---|---|
| 1. | பல்கலைக்கழகங்கள் (எண்ணிக்கை) | 17 | 17 |
| 2. | ஏனைய உயர்கல்வி நிறுவனங்கள் (எண்ணிக்கை) | 19 | 19 |
| 3. | மாணவர்கள் (இளநிலை பட்டதாரிகள்) (எண்ணிக்கை) (ஈ) | | |
| | பல்கலைக்கழகங்கள் (உ) | 119,068 | 128,638 |
| | நிறுவகங்கள் | 3,611 | 3,712 |
| | திறந்த பல்கலைக்கழகம் | 28,824 | 28,591 |
| 4. | மொத்த அலுவலர்கள் (அனைத்துப் பல்கலைக்கழகங்கள்) (எண்ணிக்கை) | | |
| | கல்விசார் | 7,004 | 7,204 |
| | கல்விசாராததோர் | 13,164 | 13,150 |
| 5. | மாணவர்கள்/ ஆசிரியர்கள் விகிதம் | 19.4 | 20.2 |
| 6. | வயது குறித்துரைக்கப்பட்ட இளநிலை பட்டதாரி மாணவர்களின் உள்ளெடுப்பு விகிதம் (19-23 வருடங்கள்) (ஈ) | 8.9 | 9.3 |
| 7. | க.பொ.த (உ.த.) இருந்து பல்கலைக்கழகங்களுக்கு முன்னேற்றம் | | |
| | பல்கலைக்கழக அனுமதிக்குத் தகுதி பெற்றோர் (%) | 62.47 | 62.89 |
| | தகுதி பெற்றோர் சதவீத அடிப்படையிலான அனுமதி (%) | 22.58 | வி.கி. |
| 8. | பட்டம் பெற்ற மாணவர்கள் (எண்ணிக்கை) (ஊ) | 36,012 | வி.கி. |
| | முதற் பட்டம் | 25,890 | வி.கி. |
| | பட்டமேற்படிப்பு பட்டம் | 10,122 | வி.கி. |
| 9. | முதற் பட்டத்திற்கான புதிய அனுமதிகள் (எண்ணிக்கை) (எ) | 43,927 | வி.கி. |
| 10. | பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதி பெற்றோர் (எண்ணிக்கை) | 194,366 | 171,497 |

(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவகங்கள்
(ஆ) திருத்தப்பட்டது
(இ) தற்காலிகமானது
(ஈ) வெளிவாரிப் பட்ட கற்கை நெறிகள் நீங்கலாக
(உ) திறந்த பல்கலைக்கழகம் நீங்கலாக
(ஊ) வெளிவாரிப் பட்டம் மற்றும் திறந்த பல்கலைக்கழகங்கள் உள்ளடங்கலாக
(எ) வெளிவாரிப் பட்டம் மற்றும் திறந்த பல்கலைக்கழகங்கள் நீங்கலாக

*மூலம்:* பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

முன்னெடுக்கப்பட்டன. நாடு முழுவதுமுள்ள 525 பாடசாலைகளில் உயர்தரக் கற்கைகளுக்கான ‘தொழில்முறைப்’ பிரிவின் வழங்கலுடன் 2022இல் ‘13 வருட கட்டாயக் கல்விக்’ கொள்கை மேலும் வலுப்பெற்றது. 2022இல், தொழில்முறைப் பிரிவின் கீழ் கற்கை நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்த ஏறத்தாழ 8,000 மாணவர்கள் நிறுவனசார் பயிற்சிக்கு நெறிப்படுத்தப்பட்ட வேளையில் ஆண்டு காலப்பகுதியில் ஏழாவது உயர்தரக் கல்விப் பிரிவாக தொழிற்கல்விப் பிரிவினை நிறுவும் பொருட்டு அமைச்சரவையின் ஒப்புதலைப் பெற்றுக்கொள்வதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. அதேவேளை, 2021 தொடக்கம் நடைமுறையிலிருந்த இணையவழிச் செயற்றிட்டங்களின் தொடர்ச்சியுடன், ஆண்டு காலப்பகுதியில் நேரடியான கல்வி நடவடிக்கைகளுக்கு ஏற்பட்ட இடையூறுகளுக்கு மத்தியில் தேவைக்கேற்ப கலந்த கற்றல் அணுகுமுறையொன்றின் ஊடாக கல்விசார் நடவடிக்கைகளைக் கல்வி அமைச்சு தொடர்ந்தும் வசதிப்படுத்தியது. கல்வி அமைச்சு ஆங்கில மொழித் தேர்ச்சியினை உயர்த்தும் பொருட்டு ‘மூட்ல்’ தளத்தினூடாக ‘செவிமடுக்கின்ற மற்றும் பேசுகின்ற திறன்களை மேம்படுத்தல் மற்றும் மதிப்பிடுதல்’ பயிற்சிச் செயற்றிட்டத்தினை முன்னெடுத்ததுடன் 2022இல் நாடளாவிய ரீதியிலான ஏறத்தாழ 150 பயிற்சியாளர்களுக்கும் ஆங்கில ஆசிரியர்களுக்கும் பயிற்சியளித்தது. ஜேர்மன் மற்றும் பிரஞ்சு போன்ற வெளிநாட்டு மொழிகளில் தேர்ச்சியினை வளர்த்துக்கொள்வதனை நோக்காகக் கொண்ட செயற்பாடுகள் ஆண்டு காலப்பகுதியில் கல்வி அமைச்சின் ‘இ-தக்ஷலாவ’ கற்றல் முகாமைத்துவ முறைமைக்கு பதிவேற்றம் செய்யப்பட்டன. 2021இல் நடைபெறவிருந்த அனைத்து தேசிய ரீதியிலான பரீட்சைகளையும் 2022இன் முதலாம் அரையாண்டுப் பகுதியில் அரசாங்கம் நடாத்தி முடித்த அதேவேளை, 2022 ஓகத்தில் நடைபெறவிருந்த தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையினையும் உயர்தரப் பரீட்சையினையும் முறையே 2022 திசெம்பர் மற்றும் 2023 சனவரி மாதங்களுக்குப் பிற்போடப்பட்டன. 2022 திசெம்பரில் நடைபெறவிருந்த சாதாரண தரப் பரீட்சை குறிப்பிடத்தக்க சமரச இணக்கங்களேதுமின்றி 2023 மே மாதத்தில் நடாத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

**உயர்கல்வித் துறையானது 2022இல் கலப்புப் பொறிமுறைகளைப் பின்பற்றுவதன் மூலம் கல்விசார் நடவடிக்கைகளின் தொடர்ச்சியினை நிச்சயப்படுத்த பெருமுயற்சியினை மேற்கொண்ட வேளையில், நாட்டின் உயர் கல்வி உட்கட்டமைப்புத் தளத்தினை வலுப்படுத்துவதற்கான பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.** ஆண்டு காலப்பகுதியில், அரச பல்கலைக்கழகங்கள் அவற்றின் கல்விசார் நடவடிக்கைகளை முன்னெடுத்து, நேரடியான கல்விசார் நடவடிக்கைகளுடன் இணைந்து கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் தொடக்கத்திலிருந்து நிறுவப்பட்ட லங்கா கல்வி மற்றும் ஆய்வு வலையமைப்பு இணையவழித் தளத்தின் கீழ் பின்பற்றப்பட்ட கற்றல் முறையினைத் தொடர்ந்ததுடன் அதன்மூலம் உயர் கல்வித்துறையில் பொருளாதார இடையூறுகளின் பாதகமான விளைவுகளைக் குறைத்தன. கல்வி நடவடிக்கைகளின் தொடர்ச்சியினை நிச்சயப்படுத்தும் வேளையில், பொருளாதார நெருக்கடியினால் விதிக்கப்பட்ட நிதியியல் மட்டுப்பாடுகளுக்கு மத்தியில் கல்விசார் உட்கட்டமைப்புத் தளத்தினை மேம்படுத்துவதற்கு அதிகாரிகள் திடசங்கற்பம் பூண்டனர். இதற்கமைய, ஆண்டு காலப்பகுதியில் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்திலும் சப்ரகமுவ பல்கலைக்கழகத்திலும் இரண்டு புதிய கணணிப் பீடங்களுக்கும் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் பட்டதாரிக் கற்கைகளுக்கான பீடமொன்றிற்கும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஒப்புதல் வழங்கப்பட்ட வேளையில், எட்டுப் பல்கலைக்கழகங்களில் 14 புதிய துறைகளுக்கும் ஒப்புதலளிக்கப்பட்டது. மேலும், இளமாணி பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள், இளமாணி சிறப்புப் பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள், முதுமாணி பட்டப்படிப்புகள்

மற்றும் வெளிவாரியான பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் என்பவற்றை உள்ளடக்கிய ஏறத்தாழ 54 புதிய பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் 2022இல் ஒப்புதலளிக்கப்பட்டன. இதேவேளை, ஆங்கில மொழியில் பல்கலைக்கழகப் பரீட்சையினை அறிமுகப்படுத்துவதற்கான வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டு, ஆண்டு காலப்பகுதியில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் வழிகாட்டுதலின் கீழ் அனைத்துப் பல்கலைக்கழகங்களிலுமுள்ள மூன்றாம் ஆண்டு மாணவர்களுக்குத் தேசிய மட்டத்திலான பரீட்சையொன்று நடாத்தப்பட்டது. இப்பரீட்சை முடிவடைந்தவுடன் தேசிய மட்டத்திலான சான்றிதழொன்றினை வழங்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு கலை, மானிடவியல் மற்றும் அழகியல் ஆகிய பிரிவுகளில் இளமாணி பட்டதாரிகளின் எதிர்கால வேலைவாய்ப்பினை மேம்படுத்துவதனை நோக்காகக் கொண்டு பல்கலைக்கழகங்களில் மானிடவியல், கலை மற்றும் அரங்கேற்றக் கலைப் பீடங்களில் தகவல் தொழில்நுட்பத் துறைகளை நிறுவுவதற்கான செயற்றிட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டது.

**2022இல் தொழிலாளர் சந்தையின் இயக்கவாற்றல் வாய்ந்த கேள்வியினைப் பூர்த்தி செய்யும் பொருட்டு மூன்றாம் நிலைக் கல்வியை வழங்குவதில் தனியார் துறை முக்கியமானதொரு வகிபாகத்தினைக் கொண்டிருந்தது.** 2022 இறுதியளவில், பட்டப்படிப்பினை வழங்குகின்ற நிறுவனங்களாக கல்வி அமைச்சின் அரசல்லா உயர் கல்விப் பிரிவினால் அங்கீகரிக்கப்பட்ட 24 எண்ணிக்கையிலான அரசல்லா உயர் கல்வி நிறுவனங்கள் காணப்பட்டதுடன் அவை 221 எண்ணிக்கையிலான ஒப்புதலளிக்கப்பட்ட பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்களை வழங்கின. ஆண்டு காலப்பகுதியில், புதிய நிறுவனமொன்று பட்டப்படிப்பினை வழங்குகின்ற நிறுவனமொன்றாக அங்கீகரிக்கப்பட்டதுடன் அரசல்லா உயர் கல்வி நிறுவனங்களினால் வழங்கப்பட்ட 34 எண்ணிக்கையிலான புதிய பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டங்களும் அங்கீகரிக்கப்பட்டன. இதேவேளை, 2022 ஆண்டு காலப்பகுதியில் பல்வேறு புதிய பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்களினதும் புதிய நிறுவனங்களினதும் மீளாய்வுகள் முன்னெடுக்கப்பட்டன. பட்டப்படிப்பினை வழங்குகின்ற நிறுவனங்களுக்கான குறைந்தபட்ச தரநியமங்களை உறுதிப்படுத்துவதற்கான வழிகாட்டுதல்களின் தயாரிப்பு மற்றும் அரசல்லா உயர் கல்வி நிறுவனங்களின் பாடத்திட்ட மீளாய்வு என்பன ஆண்டு காலப்பகுதியில் நிறைவடைந்தன.

**தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்விப் பயிற்சித் துறையானது பொருளாதாரத்தின் சமகால ஆற்றல் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான வாய்ப்புகளைத் தொடர்ந்தும் மேம்படுத்தியது.** 2022 இறுதியளவில், 526 பொது நிறுவனங்கள் மற்றும் 610

அட்டவணை 3.13

மூன்றாம் நிலை மற்றும் தொழில்நிலைக் கல்வி மற்றும் பயிற்சியின் முக்கிய பண்புகள்

| விடயம் | 2021 | 2022 (அ) |
|---|---|---|
| 1. பதிவு செய்யப்பட்ட மூன்றாந்தர தொழில்நிலைக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்கள் (எண்ணிக்கை) (ஆ) | 1,071 | 1,136 |
| அரசு | 478 | 526 |
| தனியார் மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்கள் | 593 | 610 |
| 2. அங்கீகாரம் பெற்ற மொத்த கற்கை நெறிகள் (எண்ணிக்கை) | 3,014 | 3,043 |
| அரசு | 2,387 | 2,370 |
| தனியார் மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்கள் | 627 | 673 |
| 3. வழங்கப்பட்ட தேசிய தொழில் பயிற்சி தகைமைச் சான்றிதழ்கள் (எண்ணிக்கை) | 45,033 | 117,954 |
| தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம் | 4,633 | 9,782 |
| தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் அதிகாரசபை | 7,441 | 50,029 |
| தொழிற்பயிற்சி அதிகார சபை | 17,253 | 25,432 |
| தேசிய இளைஞர் பணிகள் ஆணைக்குழு | 3,897 | 4,903 |
| தனியார் | 11,809 | 27,808 |

(அ) தற்காலிகமானது
(ஆ) ஆண்டின் இறுதியில் உள்ளவாறு

*மூலம்:* மூன்றாம் நிலை மற்றும் தொழில்நிலைக் கல்வி ஆணைக்குழு

தனியார் மற்றும் அரச சார்பற்ற துறை நிறுவனங்கள் என்பவற்றுடன் தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்விப் பயிற்சித் துறையில் 1,136 பதிவுசெய்யப்பட்ட நிறுவனங்கள் காணப்பட்டன. பல்வேறு தொழில்நுட்ப மற்றும் தொழில்சார் பாடச் செயற்பரப்புக்களை உள்ளடக்கி 3,043 ஒப்புதலளிக்கப்பட்ட தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்விப் பயிற்சிக் கற்கைநெறிகளை இந்நிறுவனங்கள் வழங்கின. ஆண்டு காலப்பகுதியில், மாணவர்களைத் தகுதிபெறச் செய்வதற்கு 117,954 தேசிய தொழிற்தகைமைச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. பொருளாதார நெருக்கடியினால் விதிக்கப்பட்ட மட்டுப்பாடுகளுக்கு மத்தியில், மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு பயிற்சி வழங்குதல், மதிப்பீடு மற்றும் சான்றிதழ் நடவடிக்கைகளை வசதிப்படுத்தும் பொருட்டு பல்வேறு வழிமுறைகளைத் தொடர்ந்தும் மேற்கொண்டது. அநேகமான பயிற்சி நிறுவனங்கள் கலந்த கல்வி முறைகளைத் தொடர்ந்தும் பயன்படுத்தியதுடன் பயண நேரம் மற்றும் நிதியியல் செலவு, தங்குமிடச் செலவு மற்றும் ஏற்பாடுகளின் செலவு என்பவற்றைக் குறைக்கும் பொருட்டு நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த கற்றல் முறை ஊக்குவிக்கப்பட்டது. அதேவேளை, மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினை ஆளுகின்ற சபை உலகளாவிய தொழில் சந்தையில் 'பராமரிப்பாளர்' துறையின் வேகமாக வளர்ச்சியடைந்து வருகின்ற தன்மையை ஒப்புக்கொண்டு, பதிவுச் செய்முறையை துரிதப்படுத்தும் பொருட்டு 'பராமரிப்பாளர்' பயிற்சிக் கற்கைநெறிகளை வழங்குகின்ற பயிற்சி நிறுவனங்களிற்கான ஒப்புதல்களை வழங்கியது. மேலும், தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்விப் பயிற்சித் துறையானது 05/2022 இலக்க தேசிய தொழிற்தகைமைச் சுற்றறிக்கையினை வெளியிட்டு, 2022 நவெம்பர் 01இலிருந்து ஆரம்பிக்கின்ற பல்வேறு தேசிய தொழிற்தகைமை மட்டங்களுக்கான தொழில் ஆற்றல் பயிற்சியினை வசதிப்படுத்தியமையானது, எதிர்கால வேலைவாய்ப்புக்களுக்கான விரைவான பின்பற்றுதலொன்றினை வழங்குகின்றது.

3

## வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி

**அரசாங்கத்தின் வீடமைப்பு அபிவிருத்திச் செயற்றிட்டங்களின் முன்னேற்றம் 2022இல் தொடர்ந்தும் மந்தமடைந்து காணப்பட்டமையானது, இறுக்கமான இறை இடைவெளியின் தாக்கம் மற்றும் மூலப்பொருட்களின் நிரம்பல் பற்றாக்குறை அதேபோன்று ஆண்டு காலப்பகுதியில் நிர்மாணத் துறையில் உள்ளீடுகளின் விலை உயர்வு ஆகியவற்றின் தாக்கத்தினைப் பிரதிபலித்தது.** பொதுத் தனியார் பங்குடமை ஏற்பாட்டின் கீழ் நடைமுறைப்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்ட நடுத்தர வருமான வீடமைப்புச் செயற்றிட்டங்களின் பூர்வாங்கப் பணிகள் ஆண்டு காலப்பகுதியில் நகர்ப்புற குடியேற்ற அபிவிருத்தி அதிகாரசபையினால் முன்னெடுக்கப்பட்டது. இருப்பினும், நகர்ப்புற குடியேற்ற அபிவிருத்தி அதிகாரசபையின் கீழ் வத்தளை மற்றும் நிட்டம்புவ பிரதேசங்களில் நடுத்தர வருமான ஈட்டுகின்றவர்களுக்கான வீடமைப்புச் செயற்றிட்டங்கள் மற்றும் ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை மற்றும் கடுவெல கலப்பு அபிவிருத்திச் செயற்றிட்டங்கள் உள்ளடங்கலாக நான்கு முக்கிய செயற்றிட்டங்கள் அரசாங்கத்தின் காசுப் பாய்ச்சல் அழுத்தங்களின் காரணமாக 2022இல் இடைநிறுத்தப்பட்ட வேளையில், ஹிக்கடுவை மற்றும் நாவலப்பிட்டியில் திட்டமிடப்பட்ட குறைந்த வருமானம் ஈட்டுகின்றவர்களுக்கான வீடமைப்புச் செயற்றிட்டங்களும் வரவு செலவுத்திட்ட மட்டுப்படுத்தல்களின் காரணமாக நிறுத்தப்பட்டன. இருப்பினும், ஆண்டு காலப்பகுதியில் நீர் வழங்கல் மற்றும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சு, பெருந்தோட்ட குடித்தொகையின் வாழ்க்கை நிலைமைகளை மேம்படுத்தும் பொருட்டு இந்திய அரசாங்கத்திலிருந்தான நிதியுதவியுடன் பல்வேறு வீடமைப்புச் செயற்றிட்டங்களைத் தொடர்ந்த வேளையில், அதேபோன்று அரசினால் நிதியிடப்பட்ட பல்வேறு செயற்றிட்டங்களும் முன்னெடுக்கப்பட்டன. அதேவேளை, 'ஒபட கெயக் - ரடட ஹெடக்', 'மிஹிந்து நிவஹன', மற்றும் 'விரு சுமிதுரு' ஆகிய வீடமைப்புச் செயற்றிட்டங்களுடன் தொடர்புடைய அபிவிருத்தி நடவடிக்கைகள் மிதமான வேகத்திலேனும் தொடர்ந்தன.

**ஆழ்ந்த பொருளாதார நெருக்கடியுடன் இணைந்த நிதியியல் மட்டுப்பாடுகளுக்கு மத்தியில் அரசாங்கத்தின் உட்கட்டமைப்புச் செயற்றிட்டங்கள் 2022இல் மெதுவானதொரு வேகத்தில் தொடர்ந்து முன்னேற்றங்கண்டன.** நகர்ப்புற அபிவிருத்தி அதிகாரசபை நாட்டின் உட்கட்டமைப்புத் தளத்தினை மேம்படுத்தும் பொருட்டு நகரத்தை அழகுபடுத்தல் மற்றும் நகர்ப்புற அபிவிருத்தி முயற்சிகள் உள்ளடங்கலாக நகர்ப்புற உட்கட்டமைப்பு மற்றும் நகரக்குடியிருப்பு அபிவிருத்திச் செயற்றிட்டத்தின் கீழ் (சியக் நகர) ஏறத்தாழ 180 செயற்றிட்டங்களில் தொடர்ந்தும் ஈடுபட்டது. ஹோமாகம தொழில்நுட்ப நகரத்தில் ஐந்து வீதிகளை அபிவிருத்தி செய்வதற்கான செயற்றிட்டத்தின் கீழ், கொட்டாவையிலிருந்து மஹேன்வத்தை வரையான புதிய அணுகல் வீதி ஆண்டு காலப்பகுதியில் பூர்த்தி செய்யப்பட்டது. நதிக்கரை புனரமைப்பு மற்றும் மீள் அபிவிருத்திச் செயற்றிட்டம் மற்றும் யாழ்ப்பாண நகர மண்டபத்தின் மீள் கட்டமைப்பு போன்றன உள்ளடங்கலாக ஏனைய பல்வேறு முக்கிய செயற்றிட்டங்களும் 2022 காலப்பகுதியில் முன்னெடுக்கப்பட்டன. பாரிய கொழும்பு திண்மக் கழிவு முகாமைத்துவச் செயற்றிட்டத்துடன் தொடர்புடைய அபிவிருத்தி நடவடிக்கைகளும் ஆண்டு காலப்பகுதியில் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு, 2022 இறுதியளவில் 90.0 சதவீத திரண்ட பௌதீக முன்னேற்றமொன்றினை எய்தின. மேலும், நகர்ப்புற வெள்ளப்பெருக்கு பிரச்சனைகளைத் தீர்ப்பதனை இலக்காகக் கொண்டதும் கொழும்பு மாநகரப் பகுதியை உலகத் தரம் வாய்ந்த நகரமொன்றாக அபிவிருத்தி செய்தல் என்பவற்றுடன் தொடர்புடையதுமான பாரிய கொழும்பு நகர்ப்புற அபிவிருத்திச் செயற்றிட்டம் 2022இன் இறுதியளவில் 99.6 சதவீத பௌதீக முன்னேற்றமொன்றினைப் பதிவுசெய்தது. மேலும், நிர்மாணப் பணிகளின் நிறைவின் பின்னர், கொழும்பு தாமரைக் கோபுரம் 2022 பெப்புருவரி 28 அன்று இலங்கை அரசாங்கத்திடம் கையளிக்கப்பட்டதற்கமைய, அதன் தொழிற்பாடுகள் நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் கீழ் நிறுவப்பட்ட நிறுவனமொன்றான கொழும்பு தாமரைக் கோபுரம் (பிறைவேற்) லிமிடெட்டிற்கு ஒப்படைக்கப்பட்டன. கொழும்பு தாமரைக் கோபுரமானது 2022 செத்தெம்பர் நடுப்பகுதியிலிருந்து பொதுமக்களின் பார்வைக்காகத் திறக்கப்பட்ட அதேவேளையில் வளாகத்தினுள் பொழுதுபோக்கு வலயமொன்றினை உருவாக்குவதற்குப் பல்வேறு தனியார் முதலீட்டாளர்களுடனான பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

**கொழும்பு துறைமுக நகரத்தின் அபிவிருத்தியுடன் தொடர்புடைய நடவடிக்கைகள் 2022இல் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு பல மைல்கற்களை அடைந்தன.** அதற்கமைய, முழுச் செயற்றிட்டத்திற்கான அபிவிருத்திக் கட்டுப்பாட்டு விதிமுறைகள் 2022 ஏப்பிறலில் வர்த்தமானியிடப்பட்டதுடன் உபாய முக்கியத்துவம் வாய்ந்த வியாபாரங்கள், கரைகடந்த கம்பனிகள், அங்கீகாரமளிக்கப்பட்ட ஆட்கள் மற்றும் தீர்வையற்ற சில்லறைத் தொழிற்பாடுகள் என்பவற்றுடன் தொடர்புடைய முக்கிய விதிமுறைகள் 2022இல் இறுதிப்படுத்தப்பட்டன. இருப்பினும், துறைமுக நகரில் உலகத் தரம் வாய்ந்த பல்கலைக்கழகங்கள் மற்றும் பன்னாட்டுப் பாடசாலைகளை நிறுவுவதன் முக்கியத்துவத்தினைக் கருத்திற்கொண்டு, 2022இன் பிற்பகுதியில் அபிவிருத்திக் கட்டுப்பாட்டு விதிமுறைகளைத் திருத்துவதற்கான வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன. பிராந்தியத்தின் முதலாவது நகர்புற தீர்வையற்ற வர்த்தக மையத்தின் உட்கட்டமைப்பு அபிவிருத்தி பூரணப்படுத்தப்பட்டதுடன் துறைமுக நகரின் தீர்வையற்ற பயணிகள் நுழைவு முறைமையும் உருவாக்கப்பட்டு வருவதுடன் இது 2023 நடுப்பகுதியில் அங்குரார்ப்பணம்

செய்துவைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. 74 துண்டங்களில் 42 துண்டங்களின் நிலத் தயாரிப்பு மற்றும் தொழில்நுட்பத் தயாரிப்பு என்பன கொழும்பு துறைமுக நகர செயற்றிட்டக் கம்பனியினால் நிறைவு செய்யப்பட்டமையானது, கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு செயற்றிட்டக் கம்பனிக்கு நிறைவுச் சான்றிதழ்களினை வழங்குவதனை இயலச்செய்த வேளையில், கொழும்பு துறைமுக நகரத்தின் மெரினா மாவட்டத்தின் ஆறு துண்டங்கள் ஆண்டு காலப்பகுதியில் விற்கப்பட்டன. அரசிற்குச் சொந்தமான இரு வங்கிகள் உள்ளடங்கலாக நான்கு வங்கிகளுக்கான உரிமங்கள் தொடர்புடைய அனைத்து விதிமுறைகள் மற்றும் முன்தொழிற்பாட்டுத் தேவைப்பாடுகளுக்கு இணங்க தொழிற்பாடுகளைத் தொடங்குவதற்கு வழங்கப்பட்டன. முதலீட்டாளர் விசாக்கள், வேலைவாய்ப்பு விசாக்கள் மற்றும் வதிவிட விசாக்கள் ஆகிய மூன்று வகையான விசாக்களும் ஆணைக்குழுவினால் அறிமுகப்படுத்தப்பட்ட வேளையில், விசா பெறுவதற்கான விண்ணப்பம் மற்றும் ஒப்புதல் செய்முறைகள் குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்துடன் இணைந்து நெறிப்படுத்தப்பட்டு தன்னியக்கப்படுத்தப்பட்டன. மேலும், கொழும்பு பன்னாட்டு நிதியியல் மையத்தின் கட்டம் I, மெரினா உலாவுமேடை வர்த்தக மையம், மெரினா உணவகம் மற்றும் அதிசொகுசு மனைகள் உள்ளடங்கலாக பல்வேறு செயற்றிட்டங்களுக்கு சவூதி அரேபியாவைத் தளமாகக் கொண்ட கம்பனியொன்றிடமிருந்து முதலீட்டு ஆதரவினைப் பெறுவதற்கான பேச்சுவார்த்தைகள் 2022இன் இறுதிப் பகுதியில் நடைபெற்றன.

## வறுமை ஒழிப்பு மற்றும் பாதுகாப்பு வலையமைப்புக்கள்

**பொருளாதார மந்தநிலைக் காலப்பகுதியில் ஏற்பட்ட பல்பக்கங்களிலிருந்தான உயர்வடைந்த பொருளாதார பாதிக்கப்படக்கூடிய தன்மைகளுடன் வறுமை ஒழிப்பில் இலங்கையின் முன்னேற்றமானது ஸ்தம்பிதமடைந்துள்ளது.** தேசிய மட்டத்திலான வறுமை ஒழிப்பில் பாராட்டத்தக்க முன்னேற்றமொன்று காணப்பட்ட போதிலும், குடித்தொகையில் கணிசமானளவிலானதொரு பகுதியினர் பல்வேறு பரிமாணங்களில் குறிப்பிடத்தக்க வருமான சமமின்மைகளுடன் இன்னும் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழ்கின்றனர். 2019 ஆண்டளவில், தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் இற்றைப்படுத்தப்பட்ட வறுமைக் கோட்டின் பிரகாரம், வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் குடித்தொகையின் சதவீதத்தினை 2002இல் பதிவுசெய்யப்பட்ட 46.8 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 14.3 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்திருந்தது. இருப்பினும், 2019இல் கிராமப்புறத் துறையில் பதிவுசெய்யப்பட்ட 15.0 சதவீதத்துடனும் நகர்ப்புறத் துறையில் பதிவுசெய்யப்பட்ட 6.0 சதவீதத்துடனும் ஒப்பிடுகையில் பெருந்தோட்டத் துறையில் வறுமை மட்டம் 33.8 சதவீதமாகத் தொடர்ந்தும் உயர்வடைந்து காணப்பட்டமையானது பொருளாதாரத் துறைகளில் குறிப்பிடத்தக்க ஏற்றத் தாழ்வுகளைப் பிரதிபலிக்கின்றது. வீட்டுத் துறையினரின் வருமானம் மற்றும் செலவின அளவீடு - 2019ஆனது 20 சதவீத ஏழ்மையிலுள்ளவர்கள் நாட்டின் மொத்த வீட்டுத்துறையினரின் வருமானத்தில் 4.6 சதவீதத்தினை மாத்திரமேயுள்ள அதேவேளை குடித்தொகையில் 20 சதவீத செல்வந்த மக்கள் மொத்த வீட்டுத்துறையினரின் வருமானத்தில் ஏறத்தாழ 51.3 சதவீதத்தினைப் பெற்றுள்ளதாக எடுத்துக்காட்டியமையானது, நாட்டில் வருமான சமமின்மைகளின் தொடர்ச்சியாகக் காணப்பட்ட பிரச்சினையின் தீவிரத்தன்மையினை மீள உறுதிப்படுத்துகின்றது. இவ்வறுமைப் புள்ளிவிபரங்கள் நாட்டின் குடித்தொகையில் குறிப்பிடத்தக்கதொரு பகுதியினர் அண்மைய பொருளாதார வீழ்ச்சிக்கு முன்னரே வறுமையினால் பாதிக்கப்படக்கூடிய தன்மையினைக் கொண்டிருந்தனரென்பதனைச் சுட்டிக்காட்டின. இப்பின்னணியில், கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் தொடக்கத்திலிருந்து குடித்தொகையின் வறுமையிலுள்ள குழுவினர் பொருளாதார அதிர்வுகளுக்குப் பாரியளவில் ஆளாகியுள்ள அதேவேளை, அவர்களது பாதிப்படையக்கூடிய தன்மைகள் 2022 ஆண்டு முழுவதும் மோசமடைந்த பேரண்டப் பொருளாதார நிலைமைகளினால் அதிகரிக்கப்பட்டுள்ளன. தொடர்ச்சியான பொருளாதார இடையூறுகள் மற்றும் பொருளாதார நடவடிக்கைகளின் மெதுவடைதல் என்பன அவர்களது வருமான மட்டங்கள் மற்றும் தொழில் வாய்ப்புக்கள் மீதான நெருக்கடியுடன் இணைந்த விரும்பத்தகாத விளைவுகளுடன், நெருக்கடிக்கு முன்னரே வறுமைக் கோட்டினை நோக்கிச் சென்றுகொண்டிருந்த குடித்தொகையின் குறித்த சில பிரிவுகளை மேலும் பாதித்துள்ளன. இதேவேளை, நுகர்வோர் விலைகளின் உயர்வடைதலானது பாதிக்கப்படக்கூடிய குடியிருப்பாளர்கள் மீது கடுமையான தாக்கமொன்றினை ஏற்படுத்தி, ஏற்கனவே இருக்கும் வருமான சமமின்மைகளை மோசமடையச் செய்தது. குடித்தொகையின் தற்போதைய பாதிப்படையக்கூடிய தன்மையினைப் பிரதிபலிக்கின்ற வகையில், தேசிய வறுமைக் கோடானது 2022 திசெம்பர் இறுதியளவில் ரூ.13,777.00இனை அண்மித்து, 2022 காலப்பகுதியில் பணவீக்கத்தில் காணப்பட்ட உயர்வுடன் இணைந்து ஏறத்தாழ 74.1 சதவீத குறிப்பிடத்தக்க ஆண்டிற்காண்டு அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்தது. 2022 திசெம்பரில், மாவட்ட வறுமைக் கோடுகள் முறையே ரூ.13,311.00 மற்றும் ரூ.13,174.00 ஆக தொடர்ந்தும் காணப்பட்ட கிளிநொச்சி மற்றும் மொனராகலை போன்ற கிராமப்புற மாவட்டங்களுடன் ஒப்பிடுகையில் கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்ட வறுமைக் கோடு ரூ.14,500.00 இனை விஞ்சிக் காணப்பட்டமையானது நகர்ப்புறங்களில் வாழ்க்கைச் செலவில் பணவீக்கத்தின் விகிதாசாரமற்ற தாக்கத்தினை எடுத்துக்காட்டியது.

**நீண்டகால நெருக்கடி மற்றும் தொடர்புடைய பொருளாதார இடையூறுகள் என்பன குடியிருப்பாளர்களின் நிதியியல் இயலளவினை இழக்கச்செய்தது மட்டுமன்றி, குடித்தொகையின் பின்தங்கிய குழுக்களிடையே உணவுப் பாதுகாப்பின்மையும்**

**மந்த போசணையினையும் அதிகரித்துள்ளன.** ஐக்கிய நாடுகள் சபையின் உலக உணவு நிகழ்ச்சித்திட்டம் மற்றும் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு என்பன இணைந்து வெளியிட்ட 2022 செத்தெம்பரில் பயிர் மற்றும் உணவுப் பாதுகாப்பு மதிப்பீட்டுப் பணிக்குழுவின் விசேட அறிக்கையின் படி, இலங்கையில் மதிப்பிடப்பட்ட 6.3 மில்லியன் தொகையிலான மக்கள் மிதமான தன்மையிலிருந்து மிகவும் கடுமையான தன்மையிலான உணவுப் பாதுகாப்பின்மைப் பிரச்சினையினை எதிர்கொண்டுள்ளனர். போதுமாந்தன்மையிலான உயிர்காக்கின்ற உதவி மற்றும் வாழ்வாதாரத்திற்கான ஆதரவு இன்றி இம்மக்களின் நிலைமை மேலும் மோசமடையக்கூடும். இப்பின்னணியில், அரசாங்கம் உலக வங்கியின் பன்னாட்டு அபிவிருத்தி உதவிக்கான தரப்படுத்தல் முன்னேற்றக்கொள்கைத் திரும்பலொன்றினைத் தேர்ந்தெடுத்ததுடன் அதன்மூலம் பன்னாட்டு அபிவிருத்தி உதவியிலிருந்து சலுகை அடிப்படையிலான நிதியிடலிற்கான அணுகலினைப் பெற்ற வேளையில், பொருளாதாரத்தை உறுதிப்படுத்துவதற்கும் பசி மற்றும் வறுமைக்கு எதிரான பாதுகாப்பினை வழங்குவதற்கும் ஏனைய பல்புடை அபிவிருத்தி உதவிகளிலிருந்தான ஆதரவைப் பெற்றது.

பொருளாதார நெருக்கடியிலிருந்து தோற்றம்பெற்ற **புதிய ஏழ்மைக் குழுக்களின் சாத்தியமான தோற்றத்தின் விளைவாக, பாதுகாப்பு வலையமைப்புச் செயற்றிட்டங்களுக்காக குடித்தொகையில் பாதிக்கப்படக்கூடிய குழுக்களின் இலக்கிடலை வலுப்படுத்துவதற்கான வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன.** இதற்கமைய, 2022இல் பல்புடை முகவராண்மைகளிலிருந்தான தொழில்நுட்ப உதவியுடன் 'முன்னேற்றங்கண்ட சகலரையும் பங்குபற்றச்செய்யும் நலன்புரி' செயற்றிட்டத்தின் கீழ், சமூகப் பதிவேடொன்றின் நிறுவுதலைத் துரிதப்படுத்துவதற்கான வழிமுறைகளை நலன்புரி பயனாளர் சபை ஆரம்பித்தது. இச்செயற்றிட்டத்தின் கீழ், உலக வங்கியின் சமூகப் பாதுகாப்பு வலையமைப்புச் செயற்றிட்டத்திலிருந்தான நிதியியல் உதவியுடன் 2023 யூன் இறுதியளவில் நலன்புரி பயனாளர் தகவல் முறைமையினை நிறுவுவதற்கும் ஒருங்கிணைந்த நலன்புரி முகாமைத்துவ முறைமையினை உருவாக்குவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. இச்செயற்றிட்டத்தின் கீழ் நலன்புரிப் பயனாளர் கொடுப்பனவுகளுக்கான தகைமையை நிர்ணயிப்பதற்கான தெரிவுச் செய்முறை 2022 காலப்பகுதியில் முன்னெடுக்கப்பட்ட வேளையில், குடியிருப்பிற்கு நேரில் சென்று தரவு சரிபார்த்தலும் 2023இன் முற்பகுதியில் ஆரம்பிக்கப்பட்டது. மேலும், நலன்புரிப் பயனாளர் தகவல் முறைமைக்கான தரவுகளைத் திரட்டுவதற்கான ஆரம்ப விண்ணப்ப செய்முறை ஆண்டு காலப்பகுதியில் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்ட வேளையில், 3,726,596 விண்ணப்பதாரர்களின் அடிப்படை தகவல்கள் 2022 இறுதியளவில் பதிவுசெய்யப்பட்டன. சமூக நலன்புரி பயனாளர்களின் தகைமையின் தொடர்ச்சியான மதிப்பீடொன்றினை நிறுவுவதனையும் இறுதியில் குடியிருப்பாளர் பொருளாதார நிலையினை வலுப்படுத்துவதன் மூலம் நலன்புரிச் செயற்றிட்டத்திலிருந்து வெளியேறுவதற்கான உரிய பொறிமுறையொன்றினை உருவாக்குவதனையும் இச்செயற்றிட்டம் நோக்காகக் கொண்டுள்ளது. 2023இன் முற்பகுதியில், தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களமானது நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு மற்றும் பல முக்கிய அரச நிறுவனங்களுடன் இணைந்து, வாழ்க்கை நிலைமைகளில் பொருளாதார நெருக்கடியின் தாக்கத்தினை மதிப்பிடுவதற்கு குடியிருப்பாளர் அளவீடொன்றினை நடாத்துவதற்கான படிமுறைகளைத் தொடங்கியது. எதிர்பார்க்கப்பட்ட பயனாளர்களுக்கான உதவிகள் காலந்தவறாது சென்றடைவதனை நிச்சயப்படுத்தும் பொருட்டு தேவைப்பாட்டினையுடையவர்களை அடையாளம் காண்பதற்கான சமூகப் பதிவேடொன்றின் உருவாக்கத்தினைத் துரிதப்படுத்துவதற்கான அவசரத் தேவையொன்றும் காணப்படுகின்றது. நலன்புரிச் செயற்றிட்டகளை இலத்திரனியல் மயப்படுத்தலுடன் இணைந்த இத்தகைய தரவுத்தளத்தை உருவாக்குவதானது தரவின் தரம், போதுமாந்தன்மை மற்றும் காலக்கெடு என்பவற்றை மேம்படுத்துவதன் மூலம் வறுமை ஒழிப்பிற்கான வினைத்திறன் வாய்ந்த கொள்கைத் தலையீடுகளை இயலச்செய்யும் வேளையில், எதிர்காலத்தில் சான்றுகளை அடிப்படையாகக் கொண்ட கொள்கைத் தீர்மானங்களை ஒரே நேரத்தில் வலுப்படுத்தும்.

அட்டவணை 3.14

பிரதான நலன்புரி நிகழ்ச்சித் திட்டங்கள் - நன்மைபெறும் குடும்பங்களின் எண்ணிக்கையும் கொடைகளின் பெறுமதியும்

| ஆண்டு | திவிநெகும / சமுர்த்தி மானிய நிகழ்ச்சித்திட்டம் | | சத்துணவு முற்கொடுப்பனவு நிகழ்ச்சித்திட்டம் (அ) | |
|---|---|---|---|---|
| | குடும்பங்கள் (எண்ணிக்கை) (ஆ) | பெறுமதி (ரூ.மில்லியன்) (இ) | பயனாளர்கள் (எண்ணிக்கை) (ஆ) | பெறுமதி (ரூ.மில்லியன்) |
| 2018 | 1,384,021 | 39,239 | 329,047 | 5,490 |
| 2019 | 1,800,182 | 44,660 | 300,246 | 5,279 |
| 2020 | 1,770,086 | 52,434 | 238,034 | 4,751(ஈ) |
| 2021 | 1,760,485 | 55,400 | 250,848 | 5,248 |
| 2022 (உ) | 1,760,485 | 120,988 (ஊ) | வி.கி. | 3,690 |

(அ) கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கானது
(ஆ) ஆண்டின் இறுதியில் உள்ளவாறு
(இ) மண்ணெண்ணெய் மானியம் உள்ளடங்கலாக
(ஈ) திருத்தப்பட்டது
(உ) தற்காலிகமானது
(ஊ) பல்புடை உதவியின் கீழாக வழங்கப்பட்ட மானியங்கள் உள்ளடங்கலாக

*மூலங்கள்:* சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்
மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு

3

**குறைந்த வருமானம் ஈட்டுகின்ற குடியிருப்பாளர்களின் சமூக பொருளாதார நலனோம்புகையினை மேம்படுத்தும் பொருட்டு அரசாங்கம் தற்போதுள்ள பாதுகாப்பு வலையமைப்புச் செயற்றிட்டங்களை ஆண்டு காலப்பகுதியில் தொடர்ந்தும் முன்னெடுத்தது.** சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம் அரசாங்கத்தின் முதன்மைப் பாதுகாப்பு வலையமைப்புச் செயற்றிட்டமான சமுர்த்தி உதவித்தொகைச் செயற்றிட்டத்தின் காசு மாற்றல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 1.7 மில்லியன் பயனாளிக் குடும்பங்களுக்கும் ஏனைய பயனாளர் வகைகளுக்கும் மொத்தமாக ஏறத்தாழ ரூ. 120 பில்லியன் தொகையினைப் பகிர்ந்தளித்தது. ஏழ்மைக் குடியிருப்பாளர்கள் மீது உலகளாவிய நோய்த்தொற்றின் விகிதாசாரமற்ற மற்றும் உடனடித் தாக்கத்தினைக் கருத்திற்கொண்டு, 2022இற்கான அரசாங்க வரவு செலவுத்திட்டத்திற்கிணங்க, 2022 பெப்புருவரி தொடக்கம் பயனாளிகளின் குடும்பங்களுக்கான மாதாந்த சமுர்த்திக் கொடுப்பனவினை குடும்பமொன்றிற்கு ஏறத்தாழ 28 சதவீதத்தினால் அரசாங்கம் அதிகரித்தது. இதற்கமைய, ரூ.3,500, ரூ.2,500 மற்றும் ரூ.1,500 கொண்ட குடும்ப அலகு உதவித்தொகைகள் குடும்பமொன்றிற்கு முறையே ரூ.4,500, ரூ.3,200 மற்றும் ரூ.1,900 இற்கு அதிகரித்தன. பல்புடை முகவராண்மைகளிலிருந்தான நிதியியல் உதவியுடன், சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களமும் 2022 மேயிலிருந்து நவெம்பர் வரை அவசரகால காசு பரிமாற்றச் செயற்றிட்டமொன்றினை மேற்கொண்டு, வயோதிபர்கள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் சிறுநீரக நோய் வகைப்பாடுகளுக்கான உதவித்தொகைச் செயற்றிட்டத்திற்காக காத்திருப்புப் பட்டியலிலிருந்த தற்போதுள்ள சமுர்த்தி பயனாளிக் குடும்பங்கள் மற்றும் தனிநபர்களுக்கு ரூ.3,000 இலிருந்து ரூ.5,000 வீச்சினுள் உதவித்தொகைகளை வழங்கியது. இச்செயற்றிட்டத்தின் கீழ், உலக வங்கியிலிருந்தான நிதியியல் உதவியுடன் 2.6 மில்லியன் பயனாளிக் குடும்பங்களுக்கிடையே ஏறத்தாழ ரூ.38.5 பில்லியனை சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம் பகிர்ந்தளித்த வேளையில், ஆசிய அபிவிருத்தி வங்கி 3.0 மில்லியன் பயனாளிக் குடும்பங்களிடையே ரூ.45.5 பில்லியன் தொகையினைப் பகிர்ந்தளிப்பதற்கான நிதியியல் உதவியினை வழங்கியது. மேலும், உலக உணவுச் செயற்றிட்டத்திலிருந்தான வசதிப்படுத்தலுடன் குறைந்த வருமானம் ஈட்டுகின்ற கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மார்கள், பெண்களின் தலைமையிலான குடும்பங்கள், ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகள் மற்றும் ஊட்டச்சத்துக் குறைபாடுள்ள தனிநபர்கள் உள்ளடங்கலாக பாதிக்கப்படக்கூடிய குடும்பங்களின் ஊட்டச்சத்து நலனோம்புகையினை நிச்சயப்படுத்தும் பொருட்டு ஆண்டு காலப்பகுதியில் மற்றுமொரு நிதியியல் உதவிச் செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. இச்செயற்றிட்டம் அம்பாறை, யாழ்ப்பாணம், மன்னார், மொனராகலை, காலி, முல்லைத்தீவு மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட 41,710 குடும்பங்களை உள்ளடக்கியதுடன் 2022 இறுதியளவில் பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்த நிதி ரூ.625.7 மில்லியனாக விளங்கியது. அதேவேளை, குடும்பமொன்றிற்கு ரூ.10,000 கொண்ட நேரடிப் பண உதவியொன்று 2022 ஓகத்தில் களுத்துறை மாவட்டத்தில் பகிர்ந்தளிக்கப்பட்டதுடன் இது ஐந்து வயதுக்குட்பட்ட பிள்ளைகளைக் கொண்ட குடும்பங்களை உள்ளடக்கியிருந்தது. ஆண்டு காலப்பகுதியில், மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதற்காக வாழ்வாதாரம், சமூகம் மற்றும் தொழில்முயற்சியாண்மை அபிவிருத்தி என்பவற்றினை மேம்படுத்துவதை நோக்காகக் கொண்ட பல்வேறு செயற்றிட்டங்களில் சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களமும் தொடர்ந்து ஈடுபட்டது. நிதிப் பரிமாற்றல்களின் வினைத்திறனை மேம்படுத்தும் பொருட்டு வாடிக்கையாளர் உறவுமுறைத் தொகுதிக்கான மென்பொருள், சமுர்த்தி அதிகாரிகளுக்கான செல்லிடச் செயலி மற்றும் பயனாளிகளுக்கான அதிகளவிலான வங்கித்தொழில் வாய்ப்புகளை உருவாக்குதல் போன்ற புதிய உபாயங்கள் பின்பற்றப்பட்டன. ஆண்டு காலப்பகுதியில், நெருக்கடி காரணமாக வாழ்வாதாரத்தை இழந்த குடும்பங்களுக்கு நிதியியல் விடுவித்தலொன்றினை வழங்கும் பொருட்டு மீன்பிடிக் கைத்தொழிலில் ஈடுபடுகின்ற சிறிய படகு உரிமையாளர்களுக்கும் பெருந்தோட்டப் பகுதிகளில் மின்சாரம் இல்லாதவர்களுக்கும் மண்ணெண்ணெய் மானியம் உள்ளடங்கலாக ஏனைய பல்வேறு சமூக நலன்புரிப் பொதிகளை அரசாங்கம் அறிமுகப்படுத்தியது. மேலும், உணவுப் பாதுகாப்பினை நிச்சயப்படுத்தல் மற்றும் பிள்ளைகளிடையே ஊட்டச்சத்துக் குறைபாட்டின் புதுப்பிக்கப்பட்ட இடர்நேர்வுகளைத் தடுத்தல் ஆகிய இரட்டை நோக்கங்களை அடையும் பொருட்டு, கிராமப்புற பொருளாதார புனரமைப்பு மையங்களை மேம்படுத்துவதற்கான பல்துறை ஒருங்கிணைந்த பொறிமுறையொன்று 2022 செத்தெம்பரில் அறிமுகப்படுத்தப்பட்டது. இதேவேளை, மகளிர், சிறுவர் விவகார மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு கர்ப்பகாலத்தின் இறுதி 06 மாதங்களுக்கும் பாலூட்டும் முதலாவது 04 மாதங்களுக்கும் சுகாதார வைத்திய அதிகாரியின் பணிமனைகளில் பதிவுசெய்த கர்ப்பிணித் தாய்மார்களுக்கு ஊட்டச்சத்துக் கொடுப்பனவாக ரூ.2,000 இனை தொடர்ந்து வழங்கியது. முன்பள்ளி வயதிற்குட்பட்ட குறைந்த எடையினையுடைய பிள்ளைகளின் ஊட்டச்சத்து மட்டத்தினை மேம்படுத்துவதற்கான முன்பள்ளிப் பிள்ளைகளுக்கான காலை உணவுத் திட்டமும் சிறுபராயத்திற்கு முந்தைய மேம்பாடு தொடர்பிலான உலக வங்கியின் செயற்றிட்டத்திலிருந்தான நிதியியல் ஆதரவுடன் ஆண்டு காலப்பகுதியில் முன்னெடுக்கப்பட்டது.

**கடந்த சில தசாப்தங்களாக அடுத்தடுத்து வந்த அரசாங்கங்களினால் பல்வேறு வறுமை ஒழிப்புச் செயற்றிட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்ட போதிலும், இலங்கை பல்பரிமாணங்களில் கணிசமானளவிலான வருமான சமமின்மைகளை இன்னும் கொண்டிருப்பதானது, அதன் பிரசைகள் திடீர் சமூக பொருளாதார பின்னடைவுகளினால்**

3

**மிகவும் எளிதில் பாதிக்கப்படக்கூடிய நிலையொன்றினை ஏற்படுத்தியுள்ளது.** ஆதலால், வறுமை ஒழிப்பிற்கான கொள்கை அணுகுமுறைகளை மறுபரிசீலனை செய்வதானது அனைத்தையுமுள்ளடக்கிய அபிவிருத்தியினை அடைவதற்கான நாட்டின் அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலில் முக்கியமானதொரு முயற்சியாகத் தொடர்ந்தும் காணப்படுகின்றது. தேசிய சமூகப் பதிவேட்டினை நிறுவுவதானது தேவைப்பாட்டினையுடைய துறைக்கு வளங்களைச் சேர்ப்பதன் மூலம் சிறந்த வளப் பயன்பாட்டிற்கு ஆதரவளிக்கும். கட்டமைப்பானது கிரமமான அடிப்படையில் பதிவேட்டினைப் புதுப்பிப்பதில் பாரியளவிலான நெகிழ்ச்சித்தன்மைக்கு அனுமதிக்கப்படல் வேண்டும். மேலும், குறுங்காலத்தில் குடித்தொகையின் பாதிக்கப்படக்கூடிய பிரிவினர் மீதான நெருக்கடியினால் உந்தப்பட்ட சுமைகளைத் தீர்க்கின்ற வேளையில், நன்கு கவனம் செலுத்தப்பட்ட துரித வாழ்வாதார அபிவிருத்திச் செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்துவதன் மூலம் இக்குடித்தொகைக் குழுக்களின் நீண்ட கால தாக்குப்பிடிக்கக்கூடிய தன்மையினை மேம்படுத்துதல் தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டுமென்பதுடன் இது எதிர்காலத்தில் அரசாங்க மானிய செயற்றிட்டங்கள் மீதான அவர்களின் தங்கியிருத்தலினைக் குறைக்கும். மேலும், வறுமை ஒழிப்புக் கொள்கைகள் குடித்தொகையில் ஏற்படுகின்ற குடித்தொகையியல் மாற்றங்கள் அத்துடன் இயற்கைப் பேரழிவுகள், சுகாதார அவசரநிலைகள் போன்றவற்றை கருத்திற்கொள்ள வேண்டும். முறைசாரா துறையில் பணிபுரிந்த குடித்தொகையின் பாரியளவிலான பங்கினைக் கருத்திற்கொண்டு, குறிப்பாக, வயது முதிர்ந்த குடித்தொகையின் பின்னணியில், ஓய்வூதிய நிதியங்களை நிறுவுவதற்கும் ஊக்குவிப்பதற்குமான வழிமுறைகளை நடைமுறைப்படுத்தலானது அரசாங்கத்தின் மீது மேலதிக நிதியியல் அழுத்தத்தை ஏற்படுத்தாமல், அவர்களது ஓய்வூதியத்தின் போது இச்சமூகங்களின் எதிர்காலத்தினைப் பாதுகாக்கத் துணைபுரியும். மேலும், கல்வி மற்றும் சுகாதாரம் என்பவற்றில் வளர்ச்சியடைந்து வருகின்ற சமமின்மைகள் முன்னுரிமை அடிப்படையொன்றில் தீர்க்கப்பட வேண்டும் என்பதுடன் அதன்மூலம் பொருளாதாரத்தின் பின்தங்கிய நிலையிலுள்ள குடித்தொகையினால் எதிர்கொள்ளப்படுகின்ற வறுமையின் நச்சுச் சுழற்சி உடைத்தெறியப்படும். பொருளாதார நெருக்கடியின் விளைவாக, குறுகிய காலம் மற்றும் நீண்ட காலம் ஆகிய இரண்டிலும் மோசமடைந்து செல்கின்ற வறுமை மட்டங்களைக் கட்டுப்படுத்துகின்ற கொள்கைக் கட்டமைப்பொன்று உருவாக்கப்பட்டு, எதிர்பார்க்கப்படுகின்ற வளர்ச்சி மீட்சி மற்றும் முன்னேற்றம் என்பவற்றின் பயன்கள் நாட்டின் அனைத்துப் பிரசைகளுக்கும் சமத்துவ அடிப்படையில் பகிர்ந்தளிக்கப்படுவதானது நிச்சயப்படுத்தப்பட வேண்டும். மிக முக்கியமாக, பாதிப்படையக்கூடிய தேவையுடையோருக்கு நலன்புரிப் பொதிகளை வழங்குவதிலுள்ள அரசியல் மற்றும் ஏனைய தலையீடுகள் குறைந்தபட்சளவிற்குக் குறைக்கப்பட வேண்டும்.

## சுற்றாடல்

**2022இல் தேசிய சூழல் கொள்கை வெற்றிகரமாக அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்ட வேளையில், நாட்டின் தற்போதைய மற்றும் எதிர்கால சூழலியல்சார் நீடித்துநிலைத்திருக்கும் தன்மையினைப் பாதுகாப்பதற்கு நிலையான கொள்கைக் கட்டமைப்பொன்றினை உருவாக்குவதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றமொன்று காணப்பட்டது.** நிலம் மற்றும் நீர் வளங்கள், உயிர்ப்பல்வகைமை மற்றும் சூழல் முறைமைகள், கடலோர மற்றும் கடல் வளங்கள், சூழல் மாசடைதல் தடுப்புக் கட்டுப்பாடு மற்றும் கழிவு முகாமைத்துவம், காலநிலை மாற்றம் மற்றும் உலகளாவிய சூழலியல்சார் சவால்கள், கட்டமைக்கப்பட்ட சூழல் மற்றும் பசுமை அபிவிருத்தி மற்றும் குறுக்குவெட்டுச் சிக்கல்கள் மற்றும் சவால்கள் ஆகிய ஏழு கருப்பொருள் பகுதிகளின் கீழ் முன்மொழியப்பட்ட கொள்கைத் தலையீடுகளை உள்ளடக்கிய தேசிய சூழல் கொள்கையின் நடைமுறைப்படுத்தலை முன்னெடுக்கும் பொருட்டு அமைச்சரவை 2022 யூனில் சுற்றாடல் அமைச்சிற்கு ஒப்புதலளித்தது. தேசிய சுற்றாடல் கொள்கையானது நன்கு வரையறுக்கப்பட்ட கொள்கை கட்டமைப்பொன்றின் மூலம் இலங்கையில் நீடித்துநிலைத்திருக்கின்ற அபிவிருத்தியினை இயலச்செய்கின்ற நிலைமைகளை உருவாக்குவதற்கான சுற்றாடல் வளங்களின் நீடித்துநிலைத்திருக்கின்ற பயன்பாடு, முகாமைத்துவம் மற்றும் பாதுகாப்பு என்பவற்றை நிச்சயப்படுத்துமென எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், தேசிய சுற்றாடல் கொள்கையினை வினைத்திறனாக நடைமுறைப்படுத்தும் நோக்கத்துடன், ஆண்டு காலப்பகுதியில் 2022-2030இற்கான தேசிய சுற்றாடல் நடவடிக்கைத் திட்டம் இறுதிப்படுத்தப்பட்டு, தேசிய சுற்றாடல் கொள்கையின் கொள்கை அறிக்கைகளை நடைமுறைப்படுத்தக்கூடிய நடவடிக்கைகளாக மாற்றுகின்ற உபாயங்கள் அடையாளம் காணப்பட்டன.

**பொருளாதார மீட்சிச் செய்முறையில் இயற்கை வளங்களின் நீடித்துநிலைத்திருக்கின்ற மற்றும் வினைத்திறனான பயன்பாட்டின் மீதான கவனம் செலுத்தலை வலுப்படுத்தும் பொருட்டு அரசாங்கத்தினதும் சுற்றாடல் அமைச்சினதும் குறிப்பிடத்தக்க முயற்சிகளுடன் ஏனைய பல நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.** 2050ஆம் ஆண்டளவில் தேறிய பூச்சிய காபன் நிலையை அடையும் பொருட்டு, 2022இல் ஐக்கிய நாடுகள் சபையின் காலநிலை மாற்றம் தொடர்பிலான மாநாட்டில் இலங்கையின் காலநிலை செழிப்புத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டது. இலங்கைக்கான காலநிலை தொடர்பிலான வெளிநாட்டு முதலீட்டினைக் கவரும் வேளையில் காலநிலை மாற்றத்தினை விரைவுபடுத்தி பசுமைவீட்டு வாயு வெளியேற்றத்தினைக் குறைப்பதில் இலங்கையின் காலநிலை செழிப்புத் திட்டமானது தேசிய முதலீட்டு உபாயமாகச் செயற்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், 2022இல்,

வலு வினைத்திறன், புதுப்பிக்கத்தக்க வலுப் பயன்பாடு மற்றும் நீடித்துநிலைத்திருக்கும் தன்மையிலான குளிரூட்டல் தீர்வுகள் உள்ளடங்கலாக குளிரூட்டல் துறை (குளிரூட்டல் மற்றும் குளிரேற்றம்) மேம்பாடுகள் மூலம் பசுமைவீடு வாயு வெளியேற்றத்தினைக் குறைக்கின்ற நோக்கிலமைந்த தேசிய குளிரூட்டல் கொள்கையின் முதலாம் வரைவு நிறைவு செய்யப்பட்டது. மொன்றியல் ஒப்பந்தத்திற்கான கிகாலி திருத்தத்தின் கீழ் உடன்பட்டதற்கிணங்க ஐதரசன் புளோரோ காபனைப் படிப்படியாகக் குறைப்பதற்கான நாட்டின் திட்டத்தினை இக்கொள்கை வசதிப்படுத்துகின்றது. 2022இல், அதன் தனித்துவமான மற்றும் பன்முகத்தன்மை வாய்ந்த சூழலினைப் பாதுகாப்பதற்கான நாட்டின் முயற்சிகளில் மற்றொரு குறிப்பிடத்தக்க முன்னோக்கிய நகர்வுடன், 'இலங்கையில் சூழல்சார் உணர்திறன் வாய்ந்த பகுதிகளில் தேசியக் கொள்கைக்கான' அமைச்சரவை ஒப்புதல் அளிக்கப்பட்டதுடன் இது அதிகளவிலான உயிர்ப்பல்வகைமை, ஈரநிலங்கள் மற்றும் கடலோர வலயங்கள் ஆகிய பகுதிகள் உள்ளடங்கலாக சூழல்சார் உணர்திறன் வாய்ந்த பகுதிகளின் பாதுகாப்பினை வலுப்படுத்துமென எதிர்பார்க்கப்படுகின்றது.

**மத்திய சுற்றாடல் அதிகாரசபை ஆண்டு காலப்பகுதியில் சூழலினைப் பாதுகாப்பதற்கான பல்வேறு வழிமுறைகளை நடைமுறைப்படுத்தியது.** தேசிய வெளியகற்றல் மற்றும் வெளியேற்றல் தேவைப்பாடுகளுக்கு இணங்க குறித்த கைத்தொழில்துறைத் தொழிற்பாடுகளிலிருந்து சூழலிற்கான வெளியகற்றல்கள் மற்றும் வெளியேற்றங்களினை தடுப்பதற்கும் குறைப்பதற்கும் சூழல் பாதுகாப்பு உரிம நடைமுறையினை மத்திய சுற்றாடல் அதிகாரசபை நடைமுறைப்படுத்தியது. 2022இல், தற்போதுள்ள சூழல் பாதுகாப்பு உரிம நடைமுறையினை வலுப்படுத்தும் பொருட்டு, விதந்துரைக்கப்பட்ட செயற்பாட்டுப் பட்டியல் மற்றும் சூழல் பாதுகாப்பு உரிம விதிமுறைகள் என்பன முறையே இல. 2264/18 மற்றும் இல. 2264/17 வர்த்தமானி அறிவிப்புக்களின் மூலம் திருத்தப்பட்டன. 2022 இறுதியிலுள்ளவாறு, மொத்தமாக 19,160 கைத்தொழிற்சாலைகள் மற்றும் 786 முதலீட்டுச் சபை நிறுவனங்கள் சூழல் பாதுகாப்பு உரிமத்தின் கீழ் உரிமங்களைப் பெற்றுள்ளன. மேலும், சுற்றாடல் தாக்க மதிப்பீடுகள் மற்றும் ஆரம்ப சுற்றாடல் பரிசோதனைகள் என்பனவூடாக செயற்றிட்டங்களின் சாத்தியமான சுற்றாடல் தாக்கத்தினை மதிப்பிடுவதற்கான அதன் ஆணையினை முன்னெடுக்கும் பொருட்டு, 2022இல் ஏழு சுற்றாடல் தாக்க மதிப்பீடுகளுக்கும் 237 ஆரம்ப சுற்றாடல் பரிசோதனைகளுக்கும் மத்திய சுற்றாடல் அதிகாரசபை ஒப்புதலளித்தது.

**பேரழிவுகளுக்கான நாட்டின் தயார்நிலையினை மேம்படுத்தும் பொருட்டு சுற்றாடல் முகாமைத்துவ அதிகாரிகள் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.** தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்துடனும் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்துடனும் இணைந்து, மத்திய சுற்றாடல் அதிகாரசபை 2019இல் தொடங்கப்பட்ட வளியின் தரத்தினைக் கண்காணிக்கின்ற செயற்றிட்டத்தினை முன்னெடுத்தது. ஆண்டு காலப்பகுதியில், இச்செயற்றிட்டத்தின் கீழ், உலக சுகாதார அமைப்பின் உதவியுடன் குருநாகல், அனுராதபுரம் மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய நகரங்களில் உணரியின் அடிப்படையிலமைந்த வளியின் தரத்தினைக் கண்காணிக்கின்ற சாதன அலகுகள் நிறுவப்பட்டு, தற்போது முன்னெடுக்கப்படுகின்ற வளியின் தரத்தினைக் கண்காணிக்கின்ற செயற்றிட்டம் வலுப்படுத்தப்பட்டது. இதேவேளை, 2022 திசெம்பரில், நாட்டின் பல பகுதிகளில் வளிமண்டலத்தின் தரம் மோசமடைந்து, எல்லை கடந்த வளி மாசடைதல் விளைவுகளுக்குள்ளானமையானது கண்டறியப்பட்டதுடன் பொதுமக்கள் தொடர்ந்தும் விழிப்புடன் இருக்குமாறு அறிவிக்கப்பட்டனர். இத்தகைய சவால்களுக்கான இலங்கையின் உயர்ந்தளவிலான வெளிப்படுத்துகை மற்றும் அத்தகைய சூழ்நிலைகளில் பின்பற்றும் பொருட்டு வழிகாட்டல்களுக்காக நிறுவப்பட்ட கட்டமைப்பின் பற்றாக்குறை என்பவற்றை அடையாளங்கண்டு, கல்வி அமைச்சானது மத்திய சுற்றாடல் அதிகாரசபை மற்றும் ஏனைய பல ஆர்வலர்களுடன் இணைந்து அவசர நிலையிலான பதிலிறுப்பு நடவடிக்கைத் திட்டமொன்றினை உருவாக்கத் தொடங்கியது. இத்தகைய முக்கியமான காலகட்டங்களில் வரையறுக்கப்படக்கூடிய உள்ளூர் வெளியேற்ற மூலங்களை இச்செயற்றிட்டம் அடையாளப்படுத்துகின்றது. மேலும், இயற்கைப் பேரழிவுகளின் சமூக பொருளாதார தாக்கத்தினைக் குறைப்பதற்கு ஆண்டு காலப்பகுதியில் பேரழிவினைத் தணிக்கின்ற செயற்றிட்டங்களில் அதிகாரிகள் தொடர்ந்தும் ஈடுபட்டனர். 2022 ஆண்டு காலப்பகுதியில் பொது மக்கள், தொடர்பான பேரழிவு முகாமைத்துவ அதிகாரிகள் மற்றும் கடற்றொழில் திணைக்களம் ஆகியோர் முன்கூட்டிய தயார்படுத்தல்களினை மேற்கொள்ளும் பொருட்டு வளிமண்டலவியல் திணைக்களம் 568 வானிலை எச்சரிக்கைகளினையும் ஆலோசனைகளையும் வழங்கியது. இதேவேளை, தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனமானது அதன் மண்சரிவு இடர்நேர்வினைத் தணிக்கின்ற வழிமுறைகளின் பகுதியொன்றாக 2022இல் நுவரெலியாவில் இரண்டு மண்சரிவு தளங்களினையும் கொழும்பு மாவட்டத்தில் மற்றொன்றையும் கட்டமைப்பு ரீதியாக தணிக்கின்ற இயலுமையினைக் கொண்டிருந்ததுடன் கண்டி மற்றும் கேகாலை மாவட்டங்களில் 480 சதுர கி.மீ. பரப்பளவினை உள்ளடக்கிய மண்சரிவு அபாயமேற்படுகின்ற இடங்களை வரைபடமாக்குவதற்கான அதன் செயற்றிட்டத்தினை ஆண்டு காலப்பகுதியில் தொடர்ந்தும் முன்னெடுத்தது.

**உலகம் சுற்றுப் பொருளாதாரத்தையும் அதற்கப்பாலும் நோக்கி வேகமாக நகர்கின்றது.** காலநிலை மாற்றத்தின் தாக்கங்கள் இலங்கை உள்ளடங்கலாக பல நாடுகளினால்

3

நன்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளதுடன் ஏற்கனவே பல நாடுகள் அவற்றை அனுபவித்தும் உள்ளன. பாரிஸ் ஒப்பந்தம் (2015), ஐக்கிய நாடுகள் சபையின் காலநிலை மாற்றம் தொடர்பான மாநாடு 26 (2021) மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் காலநிலை மாற்றம் தொடர்பான மாநாடு 27 (2022) என்பன காலநிலை மாற்றத்தின் கடுமையான பேரழிவுகளுக்கு உள்ளாகக்கூடிய நாடுகளுக்கு நிதியிடுவதற்குத் தயாராக உள்ளன. இலங்கையும் இவ்வம்சங்களில் கவனம் செலுத்துவதும் அனைத்தையுமுள்ளடக்கிய கட்டமைப்பொன்றினை முன்கூட்டியே தயார் செய்வதும் மேற்குறிப்பிட்ட உச்சி மாநாடுகளில் ஒப்புக்கொள்ளப்பட்ட ஆளுகைசார் கோட்பாடுகளுடன் இசைந்து செல்வதும் அவசியமாயுள்ளது. பொருளாதார உட்கட்டமைப்பானது பரவலாக ஒப்புக்கொள்ளப்பட்ட கொள்கைகளுடன் இலங்கை இசைந்து செல்ல வேண்டிய பகுதியொன்றாகக் காணப்படுவதுடன் இணக்கம் தெரிவித்த நாடுகள் ஒதுக்கப்பட்ட உட்கட்டமைப்புச் செயற்றிட்டங்களுக்கான, முதன்மையாக மீள்புதுப்பிக்கத்தக்க வலுச் செயற்றிட்டங்களுக்கான நிதியிடலைப் பெற்றுக்கொள்ள முடியும். இது நீண்ட செய்முறையொன்றாக காணப்படுவதனால், உலகளாவிய ஒப்பந்தங்கள் தொடர்பில் இலங்கை கவனம் செலுத்துதல் அவசியமாகும்.